பிரளயம்



எண்டமூரி வீரேந்திரநாத்

உரிமை பதிப்பு
முதற் பதிப்பு : டிசம்பர், 2001
© : ஆசிரியருக்கு

விலை ரூ. 35.00

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி நெ. 617,
மயிலாப்பூர்: சென்னை – 600 004.
தொலைபேசி – 494 1314

Laser Typeset & Printed by
Jai Ganesh Offset Printers, Chennai - 600 004.

முன்னுரை

திரு எண்டமூரி விரேந்திரநாத் அவர்கள் எழுதிய "யுகாந்தம்" என்ற நாவல் தமிழாக்கம் செய்யப்பட்டு "பிரளயம்" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ளது. ஏற்கனவே இந்நாவல் தமிழில் வேறு ஒரு மொழிபெயர்ப்பாளர் மூலமாக வெளியாகியிருந்தாலும், சில பகுதிகள் விடப்பட்டுள்ளன. நாவலின் முழுச் சுவையை வாசகர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற எண்ணம் தான் இந்தப் புதினம் உருவாகக் காரணமாக அமைந்தது.

மொழி பெயர்ப்புக்கு அனுமதி வழங்கிய திரு. வீரேந்திரநாத் அவர்களுக்கும், புத்தகமாக வெளியிட்ட அல்லயன்ஸ் நிறுவனத்தாருக்கும் எனது நன்றி என்றும் உரியது.

கௌரி கிருபாநந்தன்

பிரளயம்

பல ஆயிரம் ஆண்டுகளாக இடைவிடாமல் ஒரே பாதையில் பயணம் செய்து கொண்டிருந்த கோடானு கோடி நட்சத்திரங்களுக்கு இடையில் ஒரு சின்ன அசைவு. வினாடியில் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரம் நிகழ்ந்தது. மறுபடியும் பழைய நிலைக்குத் திரும்பியது. மிகவும் குறைவான நேரம் நிகழ்ந்த அந்த மாற்றத்தை உலகத்தின் எந்த விஞ்ஞான கருவியும் கண்டுபிடிக்கவில்லை.

பூமி வழக்கம் போல் சுழன்று கொண்டு இருந்தது. சூரியன் உதிப்பதும், அஸ்தமிப்பதும் வழக்கம்போல் நிகழ்ந்து கொண்டுதான் இருந்தது. ஆனால் பூமிக்குச் சில கோடி மைல்கள் தொலைவில் இருக்கும், 'பிராக்ஸிமா செஞ்சுவரி' என்று அழைக்கப்படும் அந்த நட்சத்திரம், தன்னுடைய பாதையை விட்டு மயிரிழை விலகி வேகமாக நழுவிப் போகத் தொடங்கியது.

அன்று தேதி, ஏப்ரல் பதிமூன்று க்ரீன்விச் நேரம் 14.30 நிமிடங்கள். பாதி உலகம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது.

பிரளயம்

1

"இந்தியன் டைம்ஸ்" பத்திரிகை அலுவலகத்தின் இரண்டாவது மாடி. வலது பக்க மேஜை மீது இருந்த சின்ன துண்டுக் காகிதத்தைப் பூதக்கண்ணாடியின் வழியே சைலஜா ஆராய்ந்து கொண்டு இருந்தாள்.

"என்ன காகிதம் அது? அவ்வளவு உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறாயே" டைபிஸ்ட் ராணி அருகில் வந்து கொண்டே கேட்டாள்.

"ஏதோ குப்பைக் காகிதம். என்ன எழுதியிருக்கிறதென்று பார்க்கிறேன்."

"சப் எடிட்டர் என்பதை நிலை நாட்டுகிறாயா? எதையும் சோதித்துப் பார்க்காமல் உன்னால் இருக்க முடியாது போலும்."

சைலஜா புன்முறுவல் செய்தாள். "நாம் எவ்வளவோ தேவலை. அமெரிக்காவில் பத்திரிகையாளராக இருந்தால்...."

"ஆரம்பித்து விட்டாயா உன் புராணத்தை தாயே! நிறுத்திக் கொள்" என்று சொல்லிக் கொண்டே ராணி மேஜை மீது இருந்த காகிதத்தைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

பழைய புத்தகத்திலிருந்து கிழிந்து போன தாள் அது. மழையில் நினைந்து, வெயிலில் காய்ந்து நைந்து போய் இருந்தது.

"எங்கே கிடைத்தது?"

"எங்க வீட்டுக் கொல்லையில்."

ராணி கலகலவென்று சிரித்தாள். "கொல்லையில் கிடந்த காகிதங்களை எல்லாம் இங்கே கொண்டுவந்து ஆராய்ச்சி செய்வதற்காகவா உனக்குச் சம்பளம் தருவது?"

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ... ஐ மீன் எந்தக் காகிதம் இருக்குமோ? யாருக்குத் தெரியும்?"

"சரி, வா போகலாம். டீ சாப்பிட நேரமாகிறது."

இருவரும் காண்டீனை நோக்கி நடந்து போய்க் கொண்டிருந்தபோது சைலஜா சொன்னாள்.

"எங்க வீட்டுக் கொல்லைக்கு அப்பால் முஸ்லீம்களின் கல்லறைகள் இருக்கு. அங்கிருந்து காற்றில் பறந்து வந்து விழுந்திருக்கும்."

"எந்தப் புத்தகத்திலிருந்தோ கிழிந்து போனகாகிதம் அது. அதற்குப் போய் இத்தனை முக்கியத்துவம் கொடுப்பானேன்?"

சைலஜா பதில் சொல்லவில்லை.

இருவரும் காண்டீனில் ஒரு மூலையில் போய் அமர்ந்து கொண்டார்கள். பையன் டீயைக் கொண்டு வந்து முன்னால் வைத்தான்.

ராணி சற்று குனிந்து "எவ்வளவு அழகாக இருக்குத் தெரியுமா?" என்றாள்.

"எது?"

"இப்படி முன்னால் குனிந்து கொண்டு உட்கார்ந்திருக்கும்போது உன் வயிற்றில் மடிப்பு விழுகிறதே. அதைச் சொன்னேன்."

சைலஜா சட்டென்று சரியாக உட்கார்ந்து கொண்டாள்.

ராணி புன்முறுவலுடன் "நான் சொன்னதில் தவறென்ன இருக்கு?" என்றாள்.

தவறு இல்லைதான். சைலஜாவைத் தாண்டிச் செல்லும் பத்து பேரில் ஒன்பது பேராவது அவளைத் திரும்பிப் பார்க்காமல் போக மாட்டார்கள்.

"உன் வயது எத்தனை?" ராணி கேட்டாள்.

"இருபத்தி ஆறு."

"மைகாட்!" என்றாள் ராணி. "இருபத்தி ஆறு வருட வாழ்க்கையை டிரையாகவா கழித்திருக்கிறாய்?"

"டிரை என்றால்?"

"வெட் ஆகாதது!"

சற்று நேரம் மௌனம் நிலவியது. தேநீர் அருந்திக் கொண்டிருந்த ராணி மேலும் சொன்னாள்.

"கோப்பையில் இருக்கும் சூடான டீயைப் போன்றது இளமை."

"ஆமாம். குடித்தால் ஒரே மடக்கில் தீர்ந்து விடும்."

"குடிக்கவில்லை என்றால் ஆறிப் போய்விடும்."

இதைக் கேட்டதும் சைலஜாவுக்கு சிரிப்பு வந்தது. இரண்டு கைகளிலும் கோப்பையை எடுத்துக் கொண்டாள்.

"என் வாழ்க்கையை இதே போல் உள்ளங்கையில் ஏந்தி அர்ப்பணம் செய்ய வேண்டும் என்று காத்திருக்கிறேன். இந்த உடலும், உள்ளமும் ஒருவருக்கே சொந்தம். அந்த ஒருவர் யாரென்று எனக்கும் தெரியாது. வாழ்க்கையை வாழ்வதில் இது ஒரு வழி. நீ சொல்வது போல் வேறு விதமாகவும் வாழ்க்கையை அனுபவிக்கலாம். அது பெரிய கஷ்டம் ஒன்றும் இல்லை. ஆனால் எந்த விதமான வாழ்க்கையைத் தொடரவேண்டும் என்பது தான் பிரச்சனை. நான் முதல் வழியைத்தான் விரும்புகிறேன்."

"டிராஷ். இதெல்லாம் தேவையில்லாத செண்டிமெண்ட்ஸ். உன் ஒருத்தியின் சம்பளத்தின் மீது உன் குடும்பம் முழுவதும்

ஆதாரப்பட்டிருக்கிறது அதனால் உன் தந்தை உனக்கு வரன்களைப் பார்க்கவே மாட்டார். உன் தம்பிகள் இறக்கை முளைக்கும் வரையிலும் உன்னிடம் அன்பாக நடந்து கொண்டு பிறகு உன்னை விட்டுப் பறந்து போய் விடுவார்கள். அதற்குள் உனக்கு வயது நாற்பதைத் தாண்டிவிடும்."

ஒரு நிமிடம் மௌனம்...

சைலஜா காலி கோப்பையைக் கீழே வைத்துவிட்டு "இதையெல்லாம் நான் யோசித்துப் பார்க்கவில்லை. என்று நினைத்தாயா?" என்று தாழ்ந்த குரலில் கேட்டாள்.

"யோசித்திருந்தால் இது போல் சாரமில்லாத வாழ்க்கையைத் தொடர்ந்திருக்க மாட்டாய். தொலைவில் சிறிய நம்பிக்கை ஒளிக்கீற்றுக் கூடத் தெரியாத காரிருள் தான் எதிர்காலம் என்றாகிவிட்டால், கண்ணுக்குத் தெரியும் மின்மினிப் பூச்சிகளின் வெளிச்சத்தில் வாழப்பழகிக் கொள்வது நல்லது. வீட்டில் விளக்கேற்ற தங்கப் பதுமையை போன்ற பெண்ணை பல்லாக்கில் அனுப்பிவைத்தாலும் பிள்ளை வீட்டுக்காரர்கள் திருப்தி அடைய மாட்டார்கள். பக்கத்தில் நோட்டுக் கற்றைகள் இருக்கிறதா இல்லையா என்றுதான் பார்ப்பார்கள். உன் உடலை, உள்ளத்தை நீ எவ்வளவு புனிதமாக வைத்துக் கொண்டாலும் திருமணம் என்ற பேச்சு வரும் போது பணம் தான் முக்கியத்துவம் வகிக்கிறது. அப்படிப்பட்ட ஆண் மகனுக்காக ஏன் உடலைப் புனிதமாக வைத்துக் கொள்ள வேண்டும்? என்ஜாய்!"

சைலஜா அவளைக் கண் இமைக்காமல் பார்த்தாள். பணம் என்பது மறைமுகமாக மனிதனின் மதிப்பீடுகளின் மீது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தி விட்டது!

இந்தப் புது தியரியை ஏற்றுக் கொள்வது கொஞ்சம் கஷ்டம்தான். சில உண்மைகள் கசக்கத்தான் செய்யும். வேறு வழியில்லை. ஜீரணித்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

இன்னும் ஆராய்ந்து பார்த்தால், அப்பாவியாக இருந்த பெண்களைக் கழுத்தட்டிப் போகும் விதமாகச் செய்தது இந்தச் சமுதாயம் தானோ என்று நினைக்கத் தோன்றும்.

"என்ன யோசிக்கிறாய்?" ராணி கேட்டாள்.

"இந்தச் சமுதாயம் மாற வேண்டும் என்றால் என்ன செய்ய வேண்டும்?"

ராணி முறுவலித்தாள். "பிரளயம்வர வேண்டியது தான்."

சைஜா சிரிக்கவில்லை. "இந்தச் சமுதாயத்தை மாற்றுவதற்கு பிரளயம்தான் வரவேண்டும் என்றால், அந்தப் பிரளயத்தை நான் இந்த நிமிடமே வரவேற்கிறேன். பிரளயம் வரட்டும். அந்த பிரளயத்தின் ருத்திர தாண்டவத்தில் கல்மிஷம் நீங்கிய மனதுடன், மாசு இல்லாத சமுதாயத்தில் மனிதன் புதிதாக வாழ்க்கையைத் தொடங்கவேண்டும்."

ராணி அவள் கையைப் பிடித்துக் கொண்டு "என்ன ஆச்சு உனக்கு? எல்லோரும் பாக்கிறாங்க" என்றாள்.

சைலஜா தன்னுடய ஆவேசத்திற்கு வெட்கப்பட்டவளாக "சாரி... வா... போகலாம்" என்றாள்.

இருவரும் மாடியிலிருந்து சைலஜாவின் இருக்கைக்கு வந்தார்கள். ராணி பின்னால் சாய்ந்து கொண்டு "என்ன ஃபைல் இது?" என்று ஃபைலைத் திறந்து கொண்டே கேட்டாள்.

"இன்டர்வியூ அப்ளிகேஷன்ஸ். நாளைக்கு இண்டர்வ்யூ இருக்கே." சைலஜா சொன்னாள்.

"புதுசு புதுசாக இளைஞர்கள் வருவார்கள் இல்லையா?"

ராணி ஒவ்வொரு அப்ளிகேஷனையும், அதன் வலது பக்க மூலையில் இருந்த புகைப்படத்தையும் பார்த்தவாறு புரட்டத் தொடங்கினாள்.

அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தவள் திடீரென்று நிறுத்தி "வாவ்!" என்றாள். "இந்த இளைஞன் எவ்வளவு அழகாக இருக்கிறான். பார்த்தாயா?"

சைலஜா அந்தப் பக்கம் பார்க்க வில்லை. "இருந்தால் என்னவாம்?" என்றாள்.

"சரி... சரி... தெரியாமல் சொல்லிவிட்டேன்." மறுபடியும் சிரித்தாள். "இவ்வளவு அழகாக இருக்கிறான் என்றால் இந்நேரத்திற்கு யாரையாவது காதலித்து இருப்பான்."

"லஞ்ச் டைம் முடிந்து விட்டது போலிருக்கே!" சைலஜா நினைவு படுத்தினாள்.

ராணி எழுந்து கொண்டாள். "சரி, மாலையில் சந்திப்போம்" என்று சொல்லிவிட்டுக் கிளம்பிப் போனாள்.

அவள் போன பிறகு சைலஜா அப்ளிகேஷன் ஃபைலை எடுத்து அந்தப் புகைப்படத்தைப் பார்த்தாள். ராணி சொன்னது போல் அவன் மிகவும் அழகாக இருந்தான். அப்பாவியாய்த் தென்பாட்டான். வயதில் தன்னைவிடச் சிறியவனாய் இருக்கக் கூடும்.

பெயரைப் பார்த்தாள்.

ரமணன்.

பி.ஏ.வில் யூனிவர்சிட்டியில் முதல் மாணவனாகத் தேர்வு பெற்று இருந்தான்.

அப்ளிகேஷன் ஃபைலில் வைத்துவிட்டு, அதை மேஜை டிராயரில் தள்ளிவிட்டு வேலையில் மூழ்கிவிட்டாள்.

* * *

மாலை ஐந்து மணி வரையில் அவளுக்கு மூச்சு விடவும் நேரம் இருக்கவில்லை. மேட்டரை கம்போசிங்கிற்குத் தருவது, கம்போஸ் ஆகி வந்த மேட்டரை ப்ரூஃப் திருத்துவது, விளம்பர

ப்ளாக்குகளுக்குப் போன் செய்வது.... என்று பல வேலைகள். 'பகையாளிக்கும் வேண்டாம் இந்த உதவி ஆசிரியரின் பணி' என்று நினைத்துக் கொண்டே சோம்பல் முறித்துக் கொண்டிருந்த போது ராணி வந்தாள்.

"கிளம்பலாமா?"

"இதோ முடிந்து விட்டது."

ஐந்து நிமிடங்களில் மேஜை மீது இருந்தவற்றை ஒழுங்குப்படுத்தி விட்டு வெளியில் வரும் போது ராணி கேட்டாள்.

"அந்தக் காகிதத்தில் என்ன இருந்தது என்று கண்டுபிடித்தாயா?"

"எந்தக் காகிதம்?"

"அதான், கல்லறையிலிருந்து காற்றுக்கு வந்து விழுந்தது என்று சொன்னாயே. அந்தக் காகிதம்."

"ஊஹூம், நேரம் எங்கே இருந்தது?"

அவ்விருவரும் வராண்டாவில் நடந்து போய்க் கொண்டிருந்தபோது எதிரே அடெண்டர் ஒருவன் வந்தான். அவன் பெயர் இஸ்மாயில்.

ராணி அவனைத் தடுத்து நிறுத்தி "இந்தக் காகிதத்தில் என்ன எழுதியிருக்குன்னு படித்துச் சொல்லு" என்றாள்.

அவன் காகிதத்தை வாங்கிக் கொண்டான். படித்துக் கொண்டிருந்த போதே அவன் முகத்தில் பயம் வெளிப்படையாகத் தெரிந்தது.

"என்ன இருக்கு அதில்?" நிசப்தத்தைத் தாங்க முடியாதவள் போல் ராணி கேட்டாள்.

அவன் பேசவில்லை.

"என்ன மொழி அது? உருதுதானே?"

அவன் காகிதத்தை மறுபடியும் பாத்தான்.

"இல்லை, அரபி."

"உனக்குத் தெரியுமா?"

"தெரியும்"

"அப்போ படித்துக் காட்டு."

அவன் படிக்கத் தொடங்கினான். "யோமாயூன் ஃபிக் ஃசூரி பதுதூனா அஃப்நாஜா."

"அப்படின்னா?" இருவரும் ஒரே சமயத்தில் கேட்டார்கள்.

அவன் தலையை உயர்த்தினான். அவன் கண்கள் சலனம் இன்றி இருந்தன. முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை. ஒரு மாதிரியான குரலில் அவன் சொன்னான்.

"ஒரு நாள் சங்கு ஒலிக்கும். வானம் திறந்து கொள்ளும்.
அப்பொழுது பிணங்கள் கும்பல் கும்பலாக எழுந்து வரும்."

அவன் அந்த வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டிருந்த போது தொலைவில் எங்கேயோ இடி இடித்தது. அன்று இரவு பொழியப் போகும் அடைமழைக்கு அறிகுறியாக மேகங்கள் திரண்டு கொண்டிருந்தன.

* * *

மினுக் மினுக்கென்று எரிந்து கொண்டிருந்த விளக்கை பட்டென்று அணைத்து விட்டு இருளானது மேலும் அந்தகாரத்தை பரப்பியது. மனிதனின் உள்ளத்தில் இருக்கும் கல்மிஷம் போன்ற இருள்.

கதவின் இடுக்கு வழியாகப் பலமாக வீசிக்கொண்டிருந்த ஊதக் காற்றின் சத்தம் உடலை சிலிர்க்க வைத்தது.

மனிதனை வாழவைத்துக் கொண்டிருந்த காற்றானது கொஞ்சம் தீவிரமடைந்து விட்டால் மனிதன் துரும்பாய்க்காற்றில் பறக்க வேண்டியதுதான்.

ஜானகியின் மடியில் குழந்தை மேலும் சுருண்டுபடுத்துக் கொண்டான். அறையில் விளக்கு அணைந்துவிட்ட போதிலும், அவள் இருந்த இடத்தை விட்டு அசைய வில்லை. மினுக் மினுக்கென்று எரியும் விளக்கை விட இருளே, மேல் என்று தோன்றியது. பக்கத்து அறையில் மைத்துனன் இன்னும் படித்துக் கொண்டிருந்தான். நாளைக்கு இன்னொரு இண்டர்வ்யூ. பிரகாஷ் இன்னும் வரவில்லை. மாமனாரின் இருமல் சத்தம் அவ்வப்போது கேட்டுக் கொண்டிருந்தது. தொலைவில் மணி ஒன்றடித்தது.

அறையில் ரமணன் புத்தகத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு மாலதியைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தான். மறுநாள் இன்டர்வ்யூ இருந்தும் அவன் எண்ணங்கள் மாலதியைச் சுற்றி வந்தன.

ஜானகி குழந்தையை மடியிலிருந்து எழுப்பிக் கட்டில் மீது படுக்க வைத்தாள். ஜன்னல் கதவை திறந்து பார்க்கப் போனாள். 'படீர்' என்று மழைச் சாரல் முகத்தில் வந்து தாக்கியதும் சட்டென்று கதவைச் சாத்தி விட்டாள். கொக்கி கழண்டு விழுந்துவிடுமோ என்ற அளவுக்கு பலமாகக் காற்று வீசியது.

சிவபெருமானின் ஜடாமுடியிலிருந்து சடாரென்று நழுவி குதித்த கங்கையின் வேகம். யானையின் துதிக்கையால் பீச்சிட்டு அடித்தாற்போல் அடைமழை.

கதவைப் படபடவென்று தட்டிய சத்தம். போய்க் கதவைத் திறந்தாள். பிரகாஷ் மழையில் நன்றாக நனைந்து விட்டிருந்தான். குளிருக்கு நடுங்கிக் கொண்டிருந்தான். அவனுடன் காற்றும் வேகமாக உள்ளே நுழைந்தது. கதவைப் பலமாக இழுத்துச் சாத்தினாள்.

"இங்கே சார்ல் அடிக்கிறது" கிழவர் முணுமுணுத்தார்.

அவரை எழுந்து கொள்ளச் சொல்லிக் கட்டிலை மைத்துனன் அறையில் போட்டாள். ரமணன் விளக்கை அணைத்துவிட்டான். இருட்டில் மல்லாந்து படுத்துக் கொண்டு கண்களை மூடிக் கொண்டான். மாலதியின் உருவம் கண்கள் முன் நிழலாடியது.

பிரகாஷ் தலையைத் துடைத்துக் கொண்டு, உடைகளை மாற்றிக் கொண்டு வருவதற்குள் ஜானகி சமையல் அறைக்குச் சென்று தட்டில் உணவு பரிமாறிவிட்டுத் தம்ளரில் குடிக்கத் தண்ணீரை எடுத்து வைத்தாள். அவன் இரண்டே வாயில் அள்ளிப் போட்டுக் கொண்டு எழுந்து கொண்டான். ஜானகி வெறுமே பார்த்துக்கொண்டிருந்தாள். திருமணம் முடிந்து எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. பேசுவதற்கு எதுவும் இல்லை. தட்டை எடுத்துத் தேய்க்கப் போட்டாள்.

பிரகாஷ் அறைக்குள் வந்தான். குழந்தையை ஒரு நிமிடம் பார்த்துவிட்டு பக்கத்தில் படுத்துக் கொண்டான். உள்ளே சமையல் அறையில் ஜானகி பாத்திரங்களை ஒழித்துப் போட்டுவிட்டு வந்தாள். கட்டிலுக்கு பக்கத்தில் தரையில் பாயை விரித்துபோட்டு படுத்துக் கொண்டாள். தலை மாட்டில் இருந்த வண்ணான் கூடையிலிருந்து ஈரத்துணிகளின் நெடி அடித்தது.

"பிரளயம் வந்தாற் போல் இதென்ன பாழும் மழையோ?" நினைத்துக் கொண்டே ஜானகி புரண்டு படுத்தாள்.

"ததாஸ்து" என்பது போல் வானத்தில் மின்னல் பளிச்சிட்டது.

2

இடிந்து விழுவதற்குத் தயாராக இருந்த குடிசைக்குள் படுத்திருந்த ராஜய்யா கொட்டும் மழையைப் பார்த்துக் கொண்டிருந்தான். வாழ்க்கையில் அவன் அனுபவித்த

கஷ்டங்களைக் கணக்கிட முடியாதது போல் அவன் முகத்திலிருந்த சுருக்கங்களும் எண்ணிக்கையில் அடக்கி விட முடியாது. மகிழ்ச்சியை, வேதனையை ஒருவிதமாக வெளிப்படுத்துவதற்கு பழக்கப்பட்டுவிட்ட அவனுடைய கண்கள் மழையை எந்த உணர்ச்சியும் இன்றி பார்த்துக் கொண்டிருந்தன.

ராஜய்யா பொருளாதாரம் படிக்கவில்லை. குறைந்த பட்சம் எட்டாம் வகுப்பு கூடத் தேர்வு பெறவில்லை. இருந்தும் பூஷணம் சொன்ன கணக்கு சரியாக இருப்பது போல்தான் தோன்றியது. அந்தக் கணக்கை அவனுக்குப் புரிய வைப்பதற்கு பூஷணமும், பெரிய மிராசுதாரும் ரொம்ப சிரமப்பட வேண்டியிருந்தது. எட்டாவது வகுப்பு கூடத் தேர்வு பெறாத ராஜய்யாவுக்கு சமுதாயத்தினால் கட்டுத்திட்டமாக உருவாக்கப்பட்ட பொருளாதார சாஸ்திரத்தை கற்றுத் தருவது என்றால் சாதாரண விஷயம் இல்லையே. இருந்தும் அவ்விருவரும் ரொம்ப முயற்சி செய்து கை விரல்களைப் பயன்படுத்தி கணக்கு போட ராஜய்யாவுக்கு கற்றுத் தந்தார்கள். அவனுக்கு முழுவதுமாகப் புரியாவிட்டாலும் ஒருவிஷயம் மட்டும் நன்றாகப் புரிந்தது. இன்னும் ஒரு மாதத்தில் தன்னுடைய குடிசையை, நிலத்தை அவன் பூஷணத்திடம் ஒப்படைக்கவேண்டும்.

குடிசையில் இருந்தாலும், வெளியில் மழையில் இருந்தாலும் ஒன்றுதான். ஆனால் தாத்தாவின் காலத்திலிருந்து வந்த நிலம் அது. அந்த நிலம் தன்னுடைய கையை விட்டுப் போய்விடும் என்றால் வேதனையாக இருந்தது.

ராஜ்ய்யாவின் தாத்தா ராஜய்யாவுக்குக் கொடுத்த ஆறு ஏக்கர் நிலத்தை, பூஷணத்தின் தாத்தா பூஷணத்திற்குக் கொடுத்த நூறு ஏக்கருடன் இணைந்து போக வேண்டியது தானா. இதைத் தடுக்க யாருமே இல்லையா?

நதியின் பிரவாகம் போல் மழை வேகமாகப் பெய்து கொண்டிருந்தது.

"பாழாய் போன உலகம்! பூகம்பம் வந்து அழிஞ்சு போனால் தான் என்ன?" என்று நினைத்துக் கொண்டே ராஜய்யா சுருட்டுக்காகத் தேடினான்.

* * *

மேற்கு கலிஃபோர்னியாவைச் சேர்ந்த லாஸ் ஏஞ்சல்ஸ்...

ஹோட்டல் ஷெர்டானில் நாலாவது மாடி. ஐநூற்றி இருபத்தி இரண்டாவது நம்பர் அறையில் இரவு 1.45 மணிக்குப் போன் இடைவிடாமல் ஒலித்துக் கொண்டே இருந்தது. அமெரிக்க ஜனாதிபதியின் முதல் காரியதரிசி ஜேம்ஸ் மெக் டொனால்ட் சற்றே நகர்ந்து ரஜாயிலிருந்து கையை வெளியில் நீட்டி ரிசீவரை எடுத்து "ஹலோ" என்றான். அவன் குரலில் லேசாக எரிச்சல் வெளிப்பட்டது.

அறையின் வெப்ப நிலை செயற்கை முறையில் கட்டுப்படுத்தப் பட்டிருந்தாலும் கண்ணாடிக் கதவின் வழியே தென்பட்ட பனி முதுகுத் தண்டைச் சிலிர்க்கச் செய்தது.

ரிசீவரை சரியாகப் பொருத்திக் கொண்டு மறுபடியும். "ஹலோ" என்றான்.

"நீ உடனே புறப்படு."

"ஓ.கே. சார்."

"வாஷிங்டன் இல்லை. பிரிஸ்கோ."

நேற்று மாலையில் நியூயார்க்லிருந்து தன்னுடன் பேசினாரே? அட்லாண்டிக் கடலைத் தாண்டி பசிப்பிக் வழியே இத்தனை அவசரமாக இவர் எதற்காக வந்திருக்கிறார்?

"இன்னும் ஒரு மணி நேரத்தில் நீ இங்கே இருக்க வேண்டும். அதற்குள் நமக்குத் தேவையான தகவல்கள் முழுவதுமாக வந்துவிடும்."

"எந்தத் தகவல்?" என்று கேட்கவில்லை. "வருகிறேன்." என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டாள்.

கட்டிலை விட்டு இறங்கி, வேகமாகக் குனிந்து நிமிர்ந்து உடற்பயிற்சி செய்தான். முகத்தைத் துடைத்துக் கொண்டு, பாட்டிலில் அடியில் ஒட்டிக் கொண்டு இருந்த மதுபானத்தை முழுவதுமாக காலி செய்துவிட்டு, சூட்கேஸில் துணிகளை அள்ளிப் போட்டுக் கொண்டு ஐந்து நிமிடங்களில் படியிறங்கினான்.

"இந்த நள்ளிரவு வேளையில் எங்கே கிளம்பிவிட்டீர்கள்?" ரிசப்ஷனிஸ்ட் கேட்டாள். இருபது வயது இளமை உடல் முழுவதும் பூரித்திருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்தான் அறிமுகம் ஏற்பட்டது.

மெக் புன்முறுவலுடன் "போன் வந்தது" என்றான்.

மெக் முறுவலித்தால் கிரெகரிபெக் போல் இருப்பான். சிரிக்காத போது சார்லஸ் ப்ரான்ஸன் போல் இருப்பான். இரவு இரண்டு மணி மனித சஞ்சாரமில்லாத வராண்டா...

"யாரு? மனைவியா?"

மறுப்பது போல் தலையை அசைத்து விட்டு "இல்லை" என்றான்.

"வெளியில் பனி அதிகமாகப் பெய்கிறது கார் ஓடாது."

"எப்படியோ சமாளித்துக் கொள்கிறேன்."

"வழியில் போலீசார் அடிக்கடிக் காரை நிறுத்தி செக் செய்வார்கள்."

"என்னிடம் அடையாள அட்டை இருக்கு."

"பீட்டர்ஸ் சாலையில் இரவு இரண்டுமணிக்கு மேல் போக விடமாட்டார்கள்."

"சுற்றி வளைத்துக் கொண்டு நார்த் ஸ்கொயர் வழியாக போகிறேன்." என்றவன், சற்று நிறுத்தி விட்டு, "எப்படியும் அறையை காலி செய்துவிட்டேன்." என்றான்.

"அறைதான் பிரச்சனை என்றால் இன்னும் ஒரு மணி நேரத்தில் என் ட்யூட்டி முடிந்து விடும். ஷெர்டான் ஹோட்டல்

ரிசெப்ஷனிஸ்டுகள் தங்குவதற்கு நல்ல காட்டேஜ்களைத் தந்திருக்கிறது மிஸ்டர் மெக்."

மெக் அவள் பக்கம் பார்த்தான். பாப் செய்யப்பட்ட பழுப்பு நிற தலைமுடி. நீலவண்ண கண்கள் செம்பவழம் போன்ற இதழ்கள்.

புன்முறுவலுடன். "தங்கி விடலாம்தான். ஆனால் அழைத்தது வில்லியம் ரோஜர்ஸ்" என்று இருளில் மறைந்துவிட்டான்.

அவள் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டாள். கொஞ்சம் கொஞ்சமாக அவள் இதழ்களில் குறுநகை படர்ந்தது. "வில்லியம்ஸ் ரோஜர்ஸ்!" நாற்பது வருடங்களுக்கு முன்னால் பெரும்பாலான பெற்றோர்கள் தம் மகன்களுக்கு அந்தப் பெயர் சூட்டியிருந்தார்கள். அமெரிக்க ஜனாதிபதியின் பெயரும் அதுதான்.

3

மெக் ஓட்டிக் கொண்டிருந்த கார் காண்டெஸா விமான நிலையத்தை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்த அதே நேரத்தில்.....

டில்லியில் இந்திர பிரஸ்த் மார்க், பதினாலாம் நம்பர் வீட்டில் ஜெகதீஷ் சந்திரன் மேஜைமீதிருந்த காதிங்களுக்கு நடுவில் முழங்கைகளை ஊன்றி, தலையைச் சாய்த்திருந்தார். களைப்பின் மிகுதியினால் அவருடைய கண்கள் தானாக மூடிக் கொண்டன. ஆனால் அன்று இரவே அந்த விஷயத்தைப் பற்றி முடிவு செய்தாக வேண்டும். மறுநாள் பாராளுமன்றத்தில் அமைச்சர்களின் பெயர்களை வெளியிடவேண்டும்.

அவருடைய கட்சி மெஜாரிட்டியைப் பெறுவதற்குக் கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருந்தது. இந்த நிலைமையில் அமைச்சர்களை தேர்ந்தெடுப்பதில் சின்ன தவறு நடந்து விட்டாலும் அவருடைய

கட்சி அதிகாரத்திலிருந்து நழுவிக் கீழே விழுந்து விடுவது நிச்சயம். எல்லோரையும் திருப்தி படுத்துவது எப்படி?

ஜெகதீஷ் சந்திரன் சின்ன வயதிலிருந்தே சில கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்தார். நாட்டிற்காகத் தன்னுடைய வாழ்க்கையை அர்பணித்துவிட்டார். அதான் நாற்பத்தி இரண்டு வயதிலேயே பிரதமர் பதவிக்கு வரமுடிந்தது.

நாட்டில் இத்தனைப் பிரச்சனைகள் இருக்கும்போது ஒவ்வொரு கட்சியும் அரசியலுக்கு இத்தனை முக்கியத்துவம் தருவானேன் என்று அவருக்குப் புரியவில்லை. எந்த நல்ல காரியத்தைச் செய்யப் போனாலும் அதிலிருக்கும் குற்றங்களைக் கண்டு பிடிப்பதிலேயே எதிர்க்கட்சி துடிப்பாக இருந்தது. நாட்டைப் பற்றி யோசிப்பதைக் காட்டிலும் இவர்களைப் பற்றி யோசிப்பதற்கே அவருக்கு நேரம் சரியாக இருந்தது. எப்படித்தான் சமாளிப்பது?

உத்தர பிரதேசத்தைச் சேர்ந்தவருக்கு உதவி 'பிரதமர் பதவியைத் தர வேண்டும். தன்னுடைய கட்சியுடன் கூட்டு சேர்ந்த தொழிலாளர் கட்சி மூன்று அமைச்சர்களின் பெயர்களைப் பரிந்துரை செய்திருக்கிறது. வட நாட்டிற்கும், தென்னாட்டிற்கும் இடையில் சரியான உறவுகள் இல்லை. இந்த முறை மெஜாரிட்டி அவர்களுக்குத்தான் தரவேண்டும். இரண்டு முஸ்லீம் அமைச்சர்கள், ஒரு சீக்கியப் பிரதிநிதி....

தலையை உதறிக் கொண்டார். அரசாங்கத்தை மாற்றி அமைத்து, தேர்தல்களை ரத்து செய்தாலொழிய இந்த நாடு உருப்படாது. ஊஹூம் தான் அப்படி நினைக்கக் கூடாது. இந்தியப் பிரதமர் இவ்வாறு யோசிக்கிறார் என்று தெரிந்தால் நாட்டில்...

போன் ஒலித்தது.

கட்சியின் தலைவர் அவினாஷ்.

"ஏதாவது முடிவு செய்தீங்களா?"

"இன்னும் இல்லை. பன்னிரெண்டு பெயர்களை ஃபைனலைஸ் செய்துவிட்டேன்."

''அதில் பத்துபேர் மாலையில் நாம் முடிவு செய்தவர்கள்தானே?"

ஜெகதீஷ் பேசவில்லை.

"நான் விழித்துக் கொண்டுதான் இருப்பேன் சொல்லு. எத்தனை நேரம் ஆனாலும் சரி."

"உன் அறையில் யார்யார் இருக்கிறார்கள்?"

மறுமுனையில் சிரிப்புச் சத்தம் கேட்டது. "எல்லோரும். நாடு முழுவதும்."

போனை வைத்துவிட்டான்.

கடிகாரம் இரண்டு மணி அடித்தது.

ஜன்னல் அருகில் சென்று வெளியில் பார்த்தார். மேகங்களுக்கு இடையில் நிலா வெளிச்சம் பரவியிருந்தது. விசாலமான காம்பவுண்ட். பாதி வரையில் பூஞ்செடிகள் ஆங்காங்கு பெரிய பாறாங்கற்கள். தலைமுடியை விரித்தாடும் பேயை போல் தொலைவில் பெரிய மரம். ஏதோ ஒன்று முடிவெடுத்தாக வேண்டும். அதே சமயத்தில் எல்லோரையும் திருப்திப்படுத்த வேண்டும். இல்லா விட்டால் கட்சியில் இருந்துகொண்டே குழியைப் பறிப்பார்கள். மறியல்கள், ஆர்ப்பாட்டங்கள், போலீசாரின் தடியடிப் பிரயோகங்கள், பாராளுமன்றத்தில் கேள்விகள்... போர்படைகள்...

தன்னுடைய இயலாமையை ரொம்பத்திறமையாக நிரூபித்து விடுவார்கள்.

இருளில் பார்த்துக் கொண்டிருந்த ஜெகதீஷ் சந்திரன் தன்னைத் தானே கேள்வி கேட்டுக் கொண்டார். அவருக்குச் சிரிப்பு வந்தது. வின்வெளியுடன் ஒப்பிட்டால் ஐம்பதடி நீளமும், நாற்பதடி அகலமும் உள்ள வெள்ளைக் காகிதத்தின் மீது ஊசியை மசியில் தோய்த்துப் புள்ளி வைத்தால் தென்படும் மிகச்சிறியப் புள்ளியைப் போன்றது பூமி. அதில் துரும்பிலும் துரும்பு போன்ற மனிதன்!

ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு வெளியே பார்த்துக் கொண்டிருந்தது கனவா, நினைவா என்று புரியவில்லை. வீலென்று கத்தப் போனவர் வலுக்கட்டாயமாக அடக்கிவிட்டார். அப்படியே சலனமின்றி, கற்சிலையாக நின்று விட்டார்.

கிரேனின் உதவியைக் கொண்டோ அல்லது பத்துபேர் சேர்ந்து தூக்கினாலோ தவிர தூக்க முடியாத பெரும் பாறாங்கல்லானது காற்றில் நாலைந்து அடி உயரே கிளம்பி இரண்டு வினாடிகள் சூனியத்தில் ஊசலாடிவிட்டு யாரோ விட்டுவிட்டது போல் தடாலென்று கீழே விழுந்தது.

சுற்றிலும் ஆழ்ந்த அமைதி.

4

ஜூன் இருபத்தி ஒன்பது.

இரவு பெய்த மழையின் காரணமாகக் குளிர்ந்த காற்று தெற்கிலிருந்து வீசிக் கொண்டிருந்தது.

ஒன்பதரை ஆகி விட்டது.

ரமணன் உடைகளை மாற்றிக் கொண்டான். இருந்தது இரண்டே ஜோடிகள்தான். அதில் ஒன்றை இன்டர்வ்யூக்காகவும், மாலதியைச் சந்திப்பதற்காகவும் ஒதுக்கி வைத்திருந்தான். சட்டைப் பையில் எட்டணா இருந்தது. அண்ணாவிடம் கேட்க மனம் ஒப்பவில்லை. கேட்டாலும் இருக்காது. கேட்டு இல்லை என்று பதிலைப் பெறுவதை விடக் கேட்காமல்இருப்பதே நல்லது.

ஃபைலில் இருந்த சான்றிதழ்களைச் சரி பார்த்துக் கொண்டான்.

பி.ஏ. பொருளாதாரம் யூனிவர்சிட்டியில் முதல் இடம். என்.சி.சி., காண்டக்ட் சர்டிபிகேட்.

ஃபைலை மூடிவிட்டு "அண்ணீ! போய் வருகிறேன்" என்று குரல் கொடுத்தான். ஜானகி உள்ளே இருந்தே "சரி தம்பீ" என்றாள்.

"தடுமாறாமல் பதில் சொல்லு." கிழவர் இருமிக் கொண்டே சொன்னார். ரமணனுக்குச் சிரிப்பு வந்தது. இது பதினாறாவது இன்டர்வ்யூ.

தலையை அசைத்துவிட்டு வெளியே வந்தான்.

பத்திரிகை அலுவலகத்திற்குப் போகும் போது பத்து மணி அடிக்கப் பதினைந்து நிமிடங்கள் இருந்தது. தன்னைப் போலவே இன்னும் இருபது இந்தியர்கள். சாகப் போகும் மாட்டிற்காக வானத்தில் வட்டமிடும் கழுகுகள்.

அவன் முறை வரும்போது பன்னிரண்டு மணி ஆகிவிட்டது. மெதுவாக அறைக்குள் நுழைந்தான்.

அந்த அறையில் இருந்த ரோஸ்வுட் மேஜையின் விலையில் இரண்டு மாதங்கள், அங்கு இருந்தவர்களின் கோட்டுகளைத் தைப்பதற்கான கூலியில் ஒரு மாதம், அவ்வறையில் மாட்டப்பட்டிருந்த ஓவியங்களின் விலையில் மூன்று மாதங்கள்... ஆக மொத்தம் ஆறுமாதங்கள், சராசரி மனிதன் தாராளமாக வாழ்ந்துவிடலாம்.

அந்த அறையில் காற்றுக்கூட அடக்கமாக வீசியது. பேப்பர் வெயிட் கூட ஆடம்பரமாக இருந்தது.

"பி ஸீடெட் மிஸ்டர் ரமணன்."

"தாங்க்யூ சார்."

"உங்களுடைய குவாலிஃபிகேஷன்ஸ்?"

"பி.ஏ."

"கிளாஸ்?"

"ஃபஸ்ட் கிளாஸ் யூனிவர்சிட்டி ஃபஸ்ட்"

"சப்ஜெக்ட்?"

"எகனாமிக்ஸ்."

ஒரு வினாடி நிசப்தம்.

"சூரியனுக்கும், பூமிக்கும் இடையில் உள்ள தூரம் எவ்வளவு?"

"ஒன்பது கோடியே முப்பத்தி நான்கு லட்சம் மைல்கள்."

"மிஸ்டர் ரமணன்! வானத்தில் நட்சத்திரங்கள் எத்தனை?"

பிரயோஜனம் இல்லை. இந்த வேலை தனக்குக் கிடைக்காது. பொருளாதாரத்தில் பட்டம் பெற்றிருக்கும் தன்னை வான சாஸ்திரத்தைப் பற்றிக் கேள்விகள் கேட்கிறார்கள் என்றால் இந்த வேலை இதற்கு முன்பே வேறு யாருக்கோ சொந்தமாகி விட்டது எனறுதான் அர்த்தம்.

இருந்தாலும் சொல்லத் தொடங்கினான்.

"நம் கண்ணுக்குத் தெரிபவை சுமார் ஆறாயிரம் நட்சத்திரங்கள். ஆனால் லட்சம் மில்லியன் நட்சத்திரங்கள் நம் மில்கிவேயில் இருப்பதாக ஊகம். அது போன்ற மில்கிவே கேலாக்ஸீக்கள் கிட்டத்தட்ட பத்து லட்சம் மில்லியன்கள் இருக்கின்றன. அதாவது வான வெளியில் பத்து கோடியே கோடிக்கோடியே நட்சத்திரங்கள் இருக்கின்றன என்று அர்த்தம். பத்தை அடுத்து இருபது ஜீரோக்கள்."

எதிரே இருப்பவர்களுக்குத் தலைச்சுற்றுவது போல் இருந்தது. சற்று நேரம் யாரும் பேசவில்லை. பிறகு ஒருவர் கேட்டார்.

"லாவா என்றால் என்ன?"

"பூமிக்கு நடுவில் இருக்கும் மிக அதிகமான உஷ்ணத்தின் காரணமாக உருகிய திடப் பொருள். ஏழு உலோகங்களின் கலவை."

"நீங்க தமிழையும் நன்றாக உருப்போட்டிருக்கிறீர்கள் போலிருக்கே?"

ரமணனின் முகம் சிவந்தது.

"பின்னே லாவா ஏன் பூமிக்கு மேல் வருவதில்லை?"

"கவசம் போல் பூமி கவிழ்ந்து இருப்பதால்."

"லாவாவில் இரும்பு இருக்கும் இல்லையா?"

"இருக்கும்."

"உங்க தம்பி காந்தத்தை எடுத்துக் கொண்டு கிணற்றுக்குள் நுழைகிறான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போ லாவா பூமியைக் கிழித்துக்கொண்டு வெளியில் வர வேண்டும் இல்லையா?"

ரமணன் தலையை உயர்த்திப் பார்த்தான். எல்லோர் முகத்திலும் நக்கலான சிரிப்பு.

"அப்படி வராது. பூமியின் மேற்பரப்பு ரொம்பத் தடிமனாக இருக்கும்."

"பூமியின் மேற்பரப்பின் டென்ஸிடி எவ்வளவு?"

"க்யூபிக் சென்டி மீட்டருக்கு ஐந்து பாயிண்ட் ஐந்து கிராம்கள்."

"பூமியின் உள்ளே டென்ஸிடி எத்தனை?"

"முன்னதை விட இருமடங்கு."

"அத்தனை டென்ஸிடி இருக்கும் லாவாவைப் பூமியின் மேற்பரப்பு தடுத்து நிறுத்த வல்லதா? பக்கோடாக்களை ஒரு காகிதத்தில் வைத்து அழுத்தமாகப் பொட்டலம் கட்டினால் உள்ளே டென்ஸிடி அதிகமாகி விடும் இல்லையா? அப்போ என்ன ஆகும்?"

"காகிதம் கிழிந்து நம் எல்லோருக்கும் பக்கோட்டாக்கள் கிடைக்கும்" மற்றொரு கமிட்டி மெம்பர் தனக்குத் தானே பதில் சொல்லிக் கொண்டார்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

"மிஸ்டர் ரமணன்! பூமியின் மாஸ் எவ்வளவு?"

"ஐந்து பாயிண்ட் தொன்னூற்று ஏழு ஆயிரத்து இருபத்தேழு கிராம்கள்."

"இத்தனை பெரிய திடப் பொருளை பூமியின் லேயர் தடுக்க முடியாவிட்டால் என்ன ஆகும்?"

ரமணன் எழுந்து கொண்டான். சர்டிபிகேட்டுகளை அடுக்கி எடுத்துக் கொண்டே சொன்னான். "இது போன்ற இண்டர்வ்யூக்கள் இருக்காது. மனிதன் சாப்பாட்டுக்காக ஏங்க மாட்டான். இவ்வளவு படித்தும் ஒரு வேலையும் கிடைக்கவில்லையே என்ற வருத்தமும் இருக்காது. ஏ.சி. அறைகள் இருக்காது. கேள்விகள், பதில்கள் இருக்காது. ஏன்? எதுவுமே இருக்காது."

* * *

"இண்டர்வ்யூ என்ன ஆச்சு?" மாலதி கேட்டாள்.

"என்ன ஆகும்?"

"அப்படி என்றால்..." ஒரு நிமிடம் கழித்து அவனைத் தேற்றுவது போல் சொன்னாள். "போகட்டும் அதிர்ஷ்டம் நன்றாக இருந்தால் அடுத்த முறை கிடைக்கும்."

"கிடைக்காது. அடுத்த முறையும் கிடைக்காது." மறுப்பது போல் தலையைக் குறுக்காக அசைத்தான். "அந்தக் கடவுளுக்கும் தெரியும். நம்மால் அவருக்கு லஞ்சம் எதுவும் தர முடியாது என்று."

நான் உனக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா?

என்ன என்பது போல் பார்த்தான்.

"கோபித்துக் கொள்ள மாட்டாயே?"

"என்ன விஷயம் சொல்லு."

"உனக்கு இந்த முறை வேலை கிடைத்தால் நாமிருவரும் சேர்ந்து திருப்பதிக்கு வருவதாக வேண்டிக் கொண்டேன்" என்றாள்.

"நானும் வேண்டிக் கொண்டேன்."

''என்ன?'' வியப்புடன் கேட்டாள். அவன் வேண்டிக் கொண்டேன் என்று சொன்னது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. "என்ன வேண்டிக்கொண்டாய்?"

அவன் மௌனமாக இருப்பதைப் பார்த்து இரட்டிப்பது போல் கேட்டாள்.

"இந்த முறை வேலை கிடைக்காவிட்டால் திருப்பதிக்கு வந்து விக்கிரகத்தின் மீது வெடிகுண்டு போட்டு உடைத்துவிடுகிறேன் என்று."

அவள் நடுங்கிவிட்டாள். சட்டென்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு "அப்படிச் சொல்லாதே ப்ளீஸ், உனக்குக் கட்டாயம் வேலை கிடைக்கும்" என்றாள்.

அவன் விரக்தியுடன் சிரித்துவிட்டு "கிடைக்காது, அப்படியே கிடைத்தாலும் அதன் மூலமாகக் கிடைக்கும் சம்பளம் உன் தந்தை உனக்கு மாதாமாதம் கொடுக்கும் பாக்கெட் மணி அளவுக்குக் கூட இருக்காது."

"தேவையில்லை" என்றாள். "நீ என் அருகில் இருந்தால் போதும், எனக்குப் பணம் தேவையில்லை, எதுவும் தேவையில்லை."

அவன் இந்த முறை உண்மையிலேயே சிரித்துவிட்டான்.

"ஷேக்ஸ்பியரிலிருந்து இந்தக் கால எழுத்தாளர்கள் வரையில் அதைத்தான் எழுதி வருகிறார்கள்."

அவள் ரோஷத்துடன் "கனவுலகில் வாழும் பெண்களைப் போல் நான் உங்கள் கண்களுக்குத் தென்படுகிறேனா?" என்றாள்.

அவன் அன்பு ததும்ப அவளை நோக்கினான்.

''வரதட்சணை, வேலை கிடைக்காதது, மாமியார் கொடுமைகள், காதல் தோல்விகள், விரும்பியவன் கிடைக்காமல்

போவது .... இத்தனைப் பிரச்சனைகளுக்கு இடையில் வாழ்வதை விடப் பெண்கள் கனவுலகில் வாழ்வது நல்லது."

"மற்ற பெண்களைப் பற்றி எனக்குத் தெரியாது. நான் மட்டும் உன்னைத்தான் திருமணம் செய்துகொள்வேன். அதுக்காக என் சொத்துக்களை எல்லாம் துறக்க நேர்ந்தாலும் சரி. இன்னொரு விஷயமும் கேட்டுக் கொள். அப்படி வந்ததற்காக எதிர்காலத்தில் ஒரு நாளும் வருத்தப்படவும் மாட்டேன்."

அவன் மறுபடியும் சிரிக்கப்போனான். ஆனால் அவள் முகத்தில் தென்பட்ட ஒரு விதமான ஒளியைப் பார்த்து அவன் நெகிழ்ந்து போய் "மாலதி" என்றான்.

அவளும் தன்னுடைய ஆவேசத்தை, உத்வேகத்தை உணர்ந்து வெட்கப்பட்டவளாய் "சாரி" என்றாள்.

"சாரி எதுக்கு? மனிதனுக்குள் அந்த அளவுக்கு மென்மையான உணர்ச்சிகள் இல்லாவிட்டால் வாழ்வது அனாவசியம். உனக்குத் தெரியுமா மாலதி? இத்தனை வேதனைமயமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருந்தாலும் சாவை நாடிப் போகாமல் இருக்கிறேன் என்றால் அதற்குக் காரணம் நீதான். இளைஞர்கள், இளம் பெண்கள், வயதானவர்கள் எல்லோரும் அதிருப்தியுடன் இருந்தாலும் ஏதோ ஒரு காரணத்திற்காக வாழ்ந்து கொண்டு இருப்பார்கள். நான் உயிரோடு இருப்பதற்குக் காரணமே நீதான்."

அவள் பேசவில்லை.

இருவரும் மௌனமாக நடந்து கொண்டு இருந்தார்கள்.

"நன்றாக இருட்டிவிட்டது. இனி திரும்புவோமா?" என்று கேட்டான்.

வயல்கள் மீதிருந்து தவிழ்ந்து வந்த காற்று இதமாக இருந்தது. தொலைவில் மாட்டுவண்டி ஒன்று சத்தம் போட்டவாறு போய்க் கொண்டிருந்தது.

"ஊரிலிருந்து ரொம்ப தொலைவுக்கு வந்து விட்டோம்."

இருவரும் திரும்பினார்கள். அவள் சற்று நின்று "ரமணன்" என்றாள்.

"ஊம்"

"நான்... நான் ஒருமுறை உன் கையை என் கையில் எடுத்துக் கொள்ளட்டுமா? ஒரே ஒருமுறை!"

அவன் அவள் பக்கம் மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். தாழ்ந்த ஆனால் உறுதியான குரலில் சொன்னான். "வேண்டாம்"

அவள் அடியுண்டவள் போல் "ஏன்?" என்றாள்.

"இதற்கு இனி முடிவு இருக்காது மாலதி. இதயத்தில் பொங்கி எழும்பும் அன்பை வெளிக்காட்டிக் கொள்வதற்குக் கையைத் தொடுவதுதான் அவுட்லெட் என்றால் அதுவும் சில நாட்களில் போறாமல் ஆகிவிடும். அது அத்துடன் நிற்கவும் நிற்காது. ஒழுக்கம் என்ற வார்த்தைக்கு அர்த்தம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக் கொண்டே இருக்கும். சுயவஞ்சனை ஆரம்பமாகிவிடும். சில நாட்கள் பொறுப்போம். எனக்கு வேலை கிடைத்துவிட்டால்..." என்று சொல்லி விட்டு சிரித்தான்.

அவள் சிரிக்கவில்லை. யோசித்தாள். துரதிர்ஷ்டம் நிறைந்த உலகத்தில் தூய்மையான காதல் கூட சமுதாயத்தினால் உருவாக்கப்பட்ட ஏற்ற தாழ்வுகளினால் பாதிக்கப்பட்டு, களங்கப்பட்டுவிட்டது. தன் தந்தையின் வீட்டை, காரை, பிரிஜ் எல்லாவற்றையும் விற்று காதலர்களுக்குப் பகிர்ந்து கொடுத்தால்? தலையும் வாலும் இல்லாத தன்னுடைய எண்ணங்களை நினைத்து அவளுக்குச் சிரிப்பு வந்தது. ஒன்று மட்டும் உண்மை. காதலை விடப் பசி கொடுமையானது.

தங்களுடைய நூறு ஏக்கர் நிலத்தையும் ஏழைகளுக்குக் கொடுத்தால்? பாறையர்களுக்கு..... பள்ளர்களுக்கு.

* * *

"பள்ளனுக்கு நிலம் இருப்பதாவது? முன்பின் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறாயா?" சுருட்டைப் பற்ற வைத்துக்கொண்டே முன்சீப் கேட்டார்.

ராஜய்யா பேசவில்லை.

பூஷணத்தின் கை மீசையை வருடிவிட்டது. சற்றுமுன் முன்சீப்புடன் சேர்ந்து குடித்த சாராயம் வயிற்றில் உப்பசமாக இருந்தது.

"போடா போ... ஏதோ அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ. வேணும்னா இன்னும் கொஞ்சம் கூட நெல்லு கேளு. பூஷணம் தருவான். அதை விட்டுவிட்டு நிலம் என்னோடது தான் என்றால் எப்படி?" முன்சீப் சொன்னார்.

ராஜய்யா அவர்களைப் பார்த்தான்.

முன்சீப், பூஷணம், கரணம்.

பின்னால் திரும்பித் தன் மனிதர்கள் பக்கம் பார்த்தான்.

வீரன், குப்பன், சாமிகண்ணு.

அந்தப் பக்கம் இருப்பவர்கள் பேசுகிறார்கள். இந்தப் பக்கம் இருப்பவர்கள் கேட்பதைத்தவிர வேறு எதுவும் செய்ய முடியாதவர்கள், கேட்டுக் கொண்டிருந்தார்கள். நடுவில்தான். அநீதி இழக்கப்பட்டவன்.

பூஷணத்தின் கண்கள் சிவப்பாக இருந்தன. குடித்துக்குடித்து.

தன்னுடைய கண்களும் சிவப்பாக இருந்திருக்கும், இரவு முழுவதும் அழுதழுது.

கோபம் வந்தாலும் கண்கள் சிவக்குமாம் தெரியாது. இத்தனை வருட வாழ்க்கையில் தனக்குக் கோபம் வந்தது எப்போ? எப்போதாவது கோபித்துக் கொள்வோம் என்றாலும், அந்த வாய்ப்பு தரக்கூடிய மனைவி திருமணம் ஆன இரண்டு வருடங்களுக்கே போய் விட்டாள்.

"என்ன சொல்லப் போகிறாய்?" முன்சீப் கேட்டார்.

"அந்த நிலம் எங்க தாத்தா காலத்திலிருந்து இருக்கு அய்யா..."

"இல்லைன்னு யார் சொன்னது? உங்க தாத்தாவை எனக்குத் தெரியாதா என்ன? பூஷணத்தின் தாத்தாவிடம் வேலை செய்து வந்தவன். அவனுக்கு அந்தத் தரிசு நிலத்தை எழுதிக் கொடுத்ததே அவர்தானே?"

"எழுதிக் கொடுத்ததைத் திரும்ப வாங்கிக் கிட்டால் எப்படிங்க?"

"எழுதிக் கொடுத்தது என்றால் முழுசாக எழுதிக் கொடுத்து விட்டாரா என்ன? மூணு வருஷம் குத்தகைக்குக் கொடுத்தார். அவ்வளவுதான்."

"எதுவும் விளையாத நிலம் அது. அதை எங்க தாத்தா ஒண்ணும் பண்ணவில்லை. அப்பாவும் ஒண்ணும் செய்ய வில்லை. நான் மூணு வருஷமா கஷ்டப்பட்டு நிலத்தை உழுது சரி செய்த பிறகு விளைச்சலைக் கண்ணால் பார்க்க முடிந்தது. அதை இப்போ திரும்ப எடுத்துப்போம் என்றால் எப்படிங்க?"

"மூணு வருஷம் எப்பவோ முடிஞ்சிடுத்து. இதோ இந்த தஸ்தாவேஜுகளைப் பாரு." பழைய காகிதத்தில் மசியால் ஏதோ எழுதப்பட்டு இருந்தது.

முப்பது வருடங்களுக்கு முன் எழுதியதா? மூன்று மாதங்களில் உருவாக்கப்பட்டதா?

"நியாயம் என்றால் நியாயம் தான். இந்தக் காகிதத்தில் எழுதியிருப்பதை இல்லை என்று உன்னால் சொல்ல முடியாது. இது உன் தாத்தாவின் கையெழுத்துதானே. அதான் கைநாட்டுதானே. அதுவும் இல்லைன்னு சொல்ல முடியாது இல்லையா. இதோ பாரு ராஜய்யா... இந்த மரத்தடியில் உட்கார்ந்துகிட்டு நான் எத்தனை பேருக்கு நியாயம் சொல்லியிருக்கிறேன். நீயும் கேட்டுக்கொள். அந்த

நிலத்தைப் பூஷணத்திடம் ஒப்படைத்துவிடு. வேணும்னா அவன் கீழே வேலை செய். அந்த நிலத்தை நீயே உழுது அறுவடை செய். உன் கூலியை எடுத்துக்கொள். பூஷணம் ரொம்ப நல்லவர். நாங்க எல்லோரும் சொன்னதை அவர் கட்டாயம் ஒப்புக் கொள்வார்." முன்சீப் சொன்னார்.

"வேலை செய், உழுது அறுவடைசெய். கூலி எடுத்துக் கொள். விளைச்சல் முழுவதும் அவருக்குக் கொடு அவர் நல்லவர். கூலி கொடுத்து விடுவார்."

ராஜய்யாவுக்கு சிரிப்பு, அழுகை எதுவும் வரவில்லை. செத்தவனை எரிக்கும் போது உயிரோடு இருப்பவன் மயானத்தில் நின்று வேடிக்கை பார்ப்பது போன்ற நிலை. கைகளைக் கட்டிக் கெண்டு சொன்னான்.

"ஏதாவது சொல்வோம் என்றாலும் எனக்குச் சரியாகப் பேசத் தெரியாது சாமி. இருந்தாலும் சொல்கிறேன். சொன்னால் நியாயம் கிடைக்கும் என்று இல்லை. இருந்தாலும் சொல்லாமல் விட்டதால் கிடைக்க வேண்டியது கிடக்காமல் போயிருச்சோ என்ற வேதனை பிற்பாடு எனக்கு இருக்கக் கடாது இல்லையா. முப்பது வருடங்களுக்கு முன் மூணு வருஷத்துக்கு நிலத்தை எழுதிக் கொடுத்தார் என்றால், இத்தனை நாளாக அதை ஏன் கேட்கவில்லை? கேட்கிறேன்னு தப்பா நினைக்காதீங்க அய்யா, இதோ... இந்த கையைப் பாருங்க. அந்த நிலம் தண்ணீரால் நனையவில்லை சாமி. என் வியர்வையால் நனைந்தது. இப்போ தான் ஏதோ கொஞ்சம் விளையுது. இப்போ இந்தக் காகிதத்தைக் காட்டினீங்க. எங்க தாத்தா அவங்க தாத்தாவுக்கு எழுதிக் கொடுத்ததாம். செத்தவன் எப்படியும் வரமாட்டான். சாகவும் முடியாமல், வாழவும் முடியாமல் நடைபிணமாக இருக்கும் எங்களைப் போன்றவர்களுக்கு சாட்சியம் சொல்லக் கடவுள் கூட முன்வர மாட்டார். எங்கேயாவது ஓடி ஒளிஞ்சுக் கொள்வார்."

கர்ணம் லேசாக நகர்ந்தார். இத்தனை நேரம் இவனைப் பேச விட்டதே தவறு என்பது போல் முன்சீப் பக்கம் பார்த்தார்.

'இந்த கையெழுத்து உன்னோடதுதானே?" முன்சீப் கேட்டார்.

ராஜய்யா சிரித்தான். "சின்ன வயசில் பள்ளிக்கூட வாத்தியார் வீடு வீடாக வந்து பசங்களைப் படிக்க வரச் சொல்லிக் கூப்பிட்டார். அப்போ எங்க அய்யா என்ன சொன்னார் தெரியுமா? 'புள்ளையை பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினால் என்ன வரும்? ஏதோ எட்டாம் கிளாஸ்வரை படிப்பு சொல்லிக் கொடுப்பே. மேற்கொண்டு படிக்க வைக்க எங்க கிட்டே காசு இருக்காது. எட்டாவது வரையில் படிச்சதால் அவனைக் கூலி வேலைக்கு அனுப்ப முடியாது. பெரியபடிப்பு படிக்காததால் சர்க்காரும் அவனுக்கு வேலையை தராது. இரண்டுங்கெட்டானாகப் போய் விடுவான்' என்றார். படிப்புதான் முக்கியம் என்றார் வாத்தியார். படிச்சால்தான் நாடு உருப்படுமாம். நாடு உருப்படும் என்றால் என்னன்னு புரியாவிட்டாலும் அன்னிக்கு வாத்தியார் சொன்னது மட்டும் இன்னும் நினைவு இருக்கு. பசங்களோடு சேர்ந்து ஸ்கூலுக்கு ஜாலியாகப் போய் வருவோம்."

"வாத்யாரய்யா! பிள்ளையைக் கூலிக்கு அனுப்பினால் இரண்டு ரூபாய் கூலி கிடைக்கும் உன்னோடு அனுப்பினால் என்ன கிடைக்கும்?" அய்யா கேட்டார்.

வாத்தியார் நாடகத்தில் நடிக்கிறவர். நாடகத்தில் வசனம் பேசுவது போல் சட்டென்று ஞானம் கிடைக்கும் என்றார்.

"ஞானம் வேண்டாம் சாமி எங்களுக்கு. வேளைக்குச் சாப்பாடு கிடைச்சா போதும்." அய்யா சொன்னார்.

பள்ளிக்கூடத்தில் இத்தனை புள்ளைங்க படிக்கிறாங்கன்னு கணக்குக் காட்டணுமாம், வாத்தியார் சொன்னபோது "எங்க பையன் பெயரை மட்டும் எழுதிக் கொள்ளுங்கள். அவன் கூலி வேலைக்குப் போகட்டும்" என்று அய்யா சொன்னார். உங்களை நிக்க வைச்சு பேசிக்கிட்டே போறேன்று கோபப்படாதீங்க சாமி. ஆக மொத்தம் எனக்கு படிப்பு வரவில்லை. ஆனாவுக்கும் ஈயன்னாவுக்கும் வித்தியாசம் தெரியாதவன் சர்க்காரில் உனக்கு எருமூட்டை கொடுக்கப் போறாங்கன்னு சொல்லி காகிதத்தை நீட்டினால் ஒண்ணு என்ன? காட்டிய இடத்தில் எல்லாம் கைநாட்டு

போடமாட்டோமா? இப்போ இந்த காகிதத்தை காட்டி நியாயம் இதுதான்னு சொன்னால் சரிதான் போலும் என்று நினைப்போம். இதை விட என்ன செய்ய முடியும்? இந்த மரத்தடியில் நீங்க சொன்ன நியாயத்தை கேட்டுக்கிட்டு குடிசையை, நிலத்தை கொடுத்துவிட்டு எந்த மரத்தடிலேயோ குடியிருந்து கொள்கிறேன் சாமி" என்று சொல்லிவிட்டு பின்னால் திரும்பினான்.

பூஷணம் முன்சீப்பைப் பார்த்து இறுமாப்புடன் சிரித்தார். முன்சீப் கர்ணத்தைப் பார்த்து சிரிக்கவில்லை, தன் கௌரவத்திற்கு இழுக்கு என்று எல்லோரும் எழுந்து கொண்டார்கள். அநீதிக்கு இலக்கானவர்கள் முன்னால் போய்க் கொண்டிருந்தார்கள்.

நியாயம் வழங்கியவர்கள் அதற்கு எதிர்திசையில் தங்களுடைய வீடுகளை நோக்கி போய்க் கொண்டிருந்தார்கள்.

அப்பொ பெரிதாக சத்தம் கேட்டது.

படபடவென்று ஏதோ முறிந்து விழுந்த சத்தம்.

இந்தப் பக்கத்தில் இருந்தவர்களும், அந்தப் பக்கத்தில் இருந்தவர்களும் திரும்பிப் பார்த்தார்கள்.

அது வரையில் பசுமையாக தளதளவென்று இருந்த அந்த மரம் தள்ளிவிட்டது போல் பெரிய சத்தத்துடன் ஒரு பக்கமாக சாய்ந்து விட்டது.

5

மிலிடரி ஹோட்டலில் உட்கார்ந்திருதான் ரமணன். சட்டைப் பையில் எட்டணா இருந்தது. டீக்கு ஆர்டர் கொடுத்தான். ஹோட்டலில் ஆட்கள் அதிகம் இல்லை. யாரோ ஒருவர் மூலையில் உட்கார்ந்து இலையில் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்.

தாங்கமுடியாத இயலாமை ரமணனை ஆட்கொண்டது. இந்த வேலையும் கிடைக்கவில்லை என்ற வேதனை! படித்த படிப்பு வியர்த்தமாகிக் கொண்டிருந்தது. தந்தையின் உடல் நலம் வேறு சரியாக இல்லை. அண்ணாவின் சம்பளம் இரண்டு வேளை சாப்பிடுவதற்கே போறவில்லை. எப்படிச் சமாளிப்பது?

கேள்வி ரொம்ப சின்னது.

பதில் உலகத்தை விடப் பெரியது.

கன்னத்தில் ஏதோ வழிந்தது போல் தோன்றியதும் தடவிப் பார்த்தான். கண்ணீர்த் துளிகள். அத்தனை வேதனையிலும் சிரிப்பு வந்தது.

"என்ன? அழுது கொண்டே சிரிக்கிறாயே?"

திடீரென்று கேள்வி காதில் விழுந்ததும் நிமிர்ந்து பார்த்தான். கிழவர், வயது அறுபதுக்கு மேல் இருக்கலாம். குறுந்தாடி வழுக்கை தலை, இருந்த தலைமுடியும் நரைத்திருந்தது. லாங்க் கோட்டும், பைஜாமா போன்று தொளவென்றிருந்த பேண்டும் அணிந்திருந்தார். தலைமுடியில் எண்ணைப் பசை இருக்கவில்லை. ஓட்டிப் போயிருந்த கன்னங்கள்.

"சூழ்நிலையில் ஆக்ஸிஜன் இருக்கிறது. நம் உடலில் ஹைட்ரோஜன் இருக்கிறது. இரண்டும் சேர்ந்தால் கண்களில் நீர். பை தி பை.... ஒரு டீ எனக்காவும் சொல்லு" உரிமையுடன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

ரமணனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. தன்னிடம் இருப்பதே எட்டணா. அண்ணியிடம் கேட்டு வாங்கிக் கொண்டது. பிச்சைக்காரனிடம் பிச்சை கேட்கும் மற்றொரு பிச்சைக்காரன்.

"உட்காரு" என்றான் ரமணன்.

"உட்கார்ந்து கொண்டுதான் இருக்கிறேன். பை தி பை உனக்கு என்ன வயது இருக்கும்? இருபத்தி ஐந்து இருக்குமா? என்னுடைய வயது எழுபத்தி ஐந்து. அஃப் கோர்ஸ் பார்த்தால்

அவ்வளவு வயதானவனாகத் தென்பட மாட்டேன். உன்னை விட மூன்று மடங்கு அதிகம். அதனால் என்னை மரியாதையுடன் விளித்தால் நன்றாக இருக்கும். என்னதான் இருந்தாலும் செல்ஃப் ரெஸ்பக்ட் என்று ஒன்று இருக்கு இல்லையா."

"சாரி" நொந்து கொள்வது போல் சொன்னான் ரமணன். "வேறு ஏதோ நினைவில் இருந்து விட்டேன்."

"ஏதாவது காதல் விவகாரமா இல்லை வேலை கிடைக்கவில்லையா? உன்னுடைய பிரச்சனைதான் என்ன? இந்தக் கால இளைஞர்களைப் பாதிப்பது இந்த இரண்டு விஷயங்கள் தானே?"

"வேலை" என்றான் ரமணன். "இப்போதுதான் ஒரு இண்டர்வ்யூ முடித்து விட்டு வருகிறேன்."

"என்ன கேட்டார்கள்?"

அவர்கள் கேட்ட கேள்விகள், தான் சொன்ன பதில்களை விவரமாகச் சொன்னான். ஒவ்வொன்றாகச் சொல்லச் சொல்ல அவர் முன்னால் குனிந்து ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டார். எல்லாம் கேட்டு முடித்த பிறகு "நீ ஆஸ்ட்ரானமி ஸ்டுடெண்டா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றான்.

"பின்னெ இவ்வளவு சரியாகப் பதில் சொல்லி இருக்கிறாயே?"

"இந்தக் காலத்தில் இண்டர்வ்யூக்குப் போக வேண்டும் என்றால், என்சைக்ளோபீடியா முழுவதும் மனப்பாடமாகத் தெரிந்திருக்க வேண்டும்." விரக்தியுடன் சொன்னான் ரமணன்.

அதற்குள் டீ வந்தது. இருவரும் டீயைக் குடித்துவிட்டு வெளியில் வந்தார்கள்.

"நீ ஏன் என்னிடம் வேலை செய்யக் கூடாது? பைதிபை ஒரு சார்மினார் சிகரெட்டுக்கு காசு இருக்கா பாரு. டீ குடித்த பிறகு சிகரெட் பிடிக்கவில்லை என்றால் உயிர் நிற்க மாட்டேங்கிறது.

அது போகட்டும். நாம் என்ன பேசிக்கொண்டிருந்தோம்? வேலையைப் பற்றி. எஸ்... நீ என்னிடம் ஏன் வேலை செய்யக்கூடாது?"

திடீரென்று இழவரின் மூளையின் செயல்பாட்டைப் பற்றி ரமணனுக்குச் சந்தேகம் வந்தது. அதை வெளிப்படுத்தாமல் "நீங்க என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டான்.

"வானத்தைப் பார்த்துக்கொண்டிருப்பேன்."

"நான் என்ன செய்ய வேண்டும்?" சிரிப்பை அடக்கிக் கொண்டே கேட்டான்.

"என்னோடு சேர்ந்து நீயும் வானத்தை ஆராய்ச்சி செய்யணும்." சிகரெட்டை வாங்கிக் கொண்டே சொன்னார்.

"சம்பளம்?"

"மிஸ்டர் கிராட்யுவேட்! எவ்வளவு எதிர்பார்க்கிறாய்?"

"ஆயிரம் ரூபாய்" எத்தனை முயன்றாலும் ரமணனால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

"அத்தனை தரமுடியாது. நானூறு தருகிறேன். ஒரு இடத்திலிருந்து பணம் வரவேண்டியிருக்கு. அது வந்ததும் ஆயிரம் ரூபாய் தருகிறேன்."

"எங்கிருந்து வரணும்?"

"ஸ்வீடிஷ் அகாடமி ஆஃப் சயின்ஸ்லிருந்து. ஆல்ஃபிரெட்பி நோபல் என்பவர் அனுப்பவேண்டும்."

"எத்தனை?"

"லட்சம் பௌண்ட். சுமார் இருபது லட்சம் ரூபாய்கள்."

"நோபல் பரிசா?"

"ஆமாம்."

அலை அலையாகச் சிரிப்பு எழும்பியது ரமணனுக்கு. அதை அடக்கிக் கொள்ளும் முயற்சி எதுவும் செய்யவில்லை. சிரித்துக்

கொண்டே காம்பவுண்டிற்குள் நுழைந்தான். மிகப் பழமையான வீடு அது. வெளியில் குப்பைச் செடிகள் மண்டிக் கிடந்தன. வாசல் கேட் கீழே விழுந்து விடும் போல் இற்றுப் போயிருந்தது. வௌவால் ஒன்று வீட்டுக்கும், வெளியிலும் பறந்து கொண்டிருந்தது. மேற்கூரை இருபதடி உயரத்தில் இருந்தது. எங்கும் சிலந்தி வலைகள் தொங்கிக் கொண்டு இருந்தன.

"இந்த வீடு யாருடையது?" சுற்றிலும் பார்த்துக் கொண்டே கேட்டான்.

"என்னோடதுதான். என் அம்மா வழிப் பாட்டியின் தந்தைக்கு அந்தக் காலத்து நவாப் ஒருவர் எழுதித் தந்தது. இப்போ என் கைக்கு வந்திருக்கிறது."

வீதியிலிருந்து ரொம்பவும் உள்ளுக்குத் தள்ளி, ஒதுக்குப் புறமாக அந்தக் கட்டடம் அமைந்திருந்தது. நவாப்புகள் வாழ்ந்த காலத்தில் ஈரும் சிறப்புமாக விளங்கிய அழகான மாளிகைகள் இன்று இந்த நிலையில் இருப்பது அவனுக்குத் தெரியும். அதனால் அவனுக்கு வியப்பாக இருக்கவில்லை. அது போன்ற கட்டடங்கள் பிச்சைக் காரர்களின் குடியிருப்பாக மாறிவிட்டன. தொலைவில் மைதானத்தில் குழந்தைகள் விளையாடிக் கொண்டு இருந்தார்கள்.

அவன் நடந்து செல்லும் போது காலடியில் புழுதி எழும்பியது. மிகப் பெரிய மாளிகை நகரத்தின் நடுமையத்தில் இருந்தது. வாடகைக்கு விட்டால் நாலாயிரத்திற்குக் குறையாது. அவன் யோசனையில் ஆழ்ந்திருந்தபோது காலில் ஏதோ தட்டுப்பட்டது. எடுத்துப் பார்த்தான். முன்சிபல் கார்ப்ரேஷன்காரர்கள் கடிதம். வீட்டு வரி கட்டச் சொல்லி வந்த நோட்டீஸ்.

"இந்த மாதிரி வேலையெல்லாம் நீதான் செய்யணும். நான் மறந்து போய்விடுவேன். டீ குடிக்க வந்த போது பணத்தை மறந்து போனது போல்...." என்றவர் ஏதோ நினைவுக்கு வந்தவர் போல் "உனக்கு அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் டைப் செய்து தரவேண்டுமா இல்லை வாயால் சொன்னதே போதுமா?" என்று கேட்டார்.

"எனக்கு அட்வான்ஸ் வேணும்" என்றான் ரமணன்.

வீட்டுக்குப் போய் செய்ய வேண்டிய காரியம் எதுவும் இல்லை. இங்கே நன்றாகத்தான் பொழுது போகும் போல் இருக்கு என்று ரமணன் நினைத்துக் கொண்டான்.

"அட்வான்ஸ் எல்லாம் நோபல் பரிசு வந்தபிறகு. தற்சமயம் பணமெல்லாம் இன்வெஸ்ட்மெண்டில் இருக்கிறது."

"உங்களுடைய பெயர்?"

"பிரொபசர் குழந்தை வேல் பழனி மாணிக்கம். எல்லோரும் சுருக்கமாகக் குழப்பம் என்பார்கள். இறுதியில் குழப்பம் என்றாகிவிட்டது." பக்கத்து அறையை நோக்கி நடந்து கொண்டே சொன்னார்.

ரமணன் சிரித்துக் கொண்டே "பிரொபசர் குழப்பம் அவர்களே" என்று சொல்லப் போனவன் சட்டென்று நின்று விட்டான்.

அதற்குள் அவர்கள் இடது பக்கத்து அறையை அடைந்து விட்டார்கள். அந்த அறைக்கு மேற்கூரை இல்லை. அதற்குப் பதில் பெரிய கண்ணாடி பொருத்தியிருந்தது. பெரிய நிவால்விங் டோம் மீது ஐம்பது மீட்டர் உயரமும், நாற்பத்தைந்து மீட்டர் டயாமீட்டரும் உடைய டெலஸ்கோப் கம்பீரமாக நின்றிருந்தது.

உலகிலேயே பெரிய டெலஸ்கோப் ரஷ்யாவில் இருப்பதாகக் கேள்விப்பட்டு இருக்கிறான். ஆனால் இப்பொழுது தான் பார்க்கிறான். அவன் வியப்பிலிருந்து மீளும் முன்பே பின்னாலிருந்து பிரொபசரின் குரல் கேட்டது.

"உங்க ஜெனரல் நாலெட்ஜ் புத்தகத்தில் இது இருக்காது. ஜெலிம்ஸ்கியா, நார்த் கேஸானில் இருக்கும் டெலிஸ்கோப்பை விட இது பெரியது. நானே இதை தயாரித்திருக்கிறேன். பை தி பை இன்னொரு சிகரெட் இருந்தால் கொடு. இதை... ஜமீன் இந்த ஸ்கோப்பை தயாரிக்க பன்னிரண்டு ஆண்டுகள் பிடித்தன. பாட்டியின் அப்பாவுக்கு அந்த நவாபு கொடுத்தது எல்லாம் இதற்கே செலவாகிவிட்டது. இதன் எடை தொண்ணூற்றைம்பது

டன்கள். லெனின்கிராட் ஆப்டிகல் இஞ்சினியரிங் அமால்கமேஷன்காரர்கள் இதைப் பார்த்தால் மூர்ச்சையாகி விடுவார்கள். இதை விற்றால் எவ்வளவு கிடைக்கும் தெரியுமா? உனக்குச் சம்பளம் அட்வான்ஸ் தரவில்லை என்று சந்தேகப்படாதே. இதற்காகப் பயன்படுத்தப்பட்ட இரும்பைக் கொண்டு பதினோரு பெட்டிகள் இருக்கும் பாசஞ்சர் ரயில் வண்டி ஒன்றைத் தயாரித்து விடலாம். இதன் பெயர் என்ன தெரியுமா? லிப்பர்ஷே டெலிஸ்கோப்பைக் கண்டு பிடித்தது கெலிலியோ என்று நீங்கள் எல்லோரும் சொல்லுவீர்கள். இல்லை. லிப்பர்ஷே உங்களுக்கெல்லாம் பொது அறிவு என்ன தெரியும்? யாருக்கும் தெரியாது. கலிஃபோர்னியா மௌண்ட் வில்ஸன் ஆப்ஸர்வேடரியில் இருக்கும் பிரொபசர் ஆடம்ஸ், இப்போ இல்லை... இறந்து விட்டார். அவர் ஒருத்தருக்குத் தான் தெரியும். இந்த டெலிஸ்கோபில் எவ்வளவு தொலைவுக்குப் பார்க்க முடியும் என்று நினைக்கிறாய்?"

ரமணனுக்கு நாக்கு உலர்ந்து விட்டது. தெரியாது என்பது போல் தலையைக் குறுக்காக அசைத்தான்.

"பத்தாயிரம் மில்லியன் ஒளி ஆண்டுகள். ஒளி ஆண்டு என்றால் ஒரு வினாடிக்கு லட்சத்து எண்பத்தாறு ஆயிரம் மைல்கள் வேகத்தில் ஒளி பயணம். 365 நாட்கள் கொண்டது ஒரு வருடம். அதை லட்சத்து எண்பத்தாறாயிரம் மைல்களுடன் பெருக்கினால் ஒரு ஒளி ஆண்டு. இந்த டெலிஸ்கோப் வழியாக அத்தனை தொலைவுக்குப் பார்க்க முடியும். மிஸ்டர் ஹிராட்யுயேட்! கணக்குப் போட்டுப் பார்த்தாயா 5413296000000000000000. மைல்கள். அத்தனை தொலைவுக்கு விண்வெளியை தினமும் பார்த்து வருகிறேன். அஜிமொடல் மௌண்டிங் இது. அதாவது வானத்தில் எந்த மூலைக்கு வேண்டுமானாலும் இதைத் திருப்பிப் பார்க்க முடியும். எனக்கு இன்னொரு ஆசையும் இருக்கு. விண்வெளிக்கு நான்கு மூலையிலிருந்து வரும் தொடர்ச்சியான ரேடியேஷனைப் பெரிய ஆண்டெனா பொருத்திப் பார்க்க வேண்டும் என்று ஆண்டெனா என்றால் தெரியும் இல்லையா?"

ரமணனுக்குத் தெரியாது. இருந்தாலும் தெரியும் என்பது போல் தலையை அசைத்தான். தான் பார்த்துக் கொண்டிருப்பது கனவு இல்லை உண்மைதான் என்று நம்பிக்கை ஏற்படுத்திக் கொள்ளப் பெரும் முயற்சி செய்ய வேண்டியிருந்தது.

"சொல்லு மிஸ்டர் கிராட்யூயேட்? என்னிடம் வேலை செய்வாயா?"

சட்டென்று இந்த உலகிற்கு மீண்டான். வீட்டின் வறுமை. மாலதியின் கண்களில் தெரியும் காதல், அவள் தந்தை தன்னிடம் காட்டும் அலட்சியம், தந்தையின் இருமல், அண்ணனின் போதும் போதாததுமான சம்பளம், சாக்லேட்டுக்காக ஏங்கும் கோபி, வேதனைகளையும் புன்முறுவலுடன் தாங்கிக் கொள்ளும் அண்ணி....

"சம்பளம்" என்றான்.

"என்னிடம் தற்போது ரொம்பக் குறைவாக இருக்கு தம்பி. இருந்ததையெல்லாம்... இதோ... இதற்காகச் செலவழித்து விட்டேன்."

அவர் முகத்தில் தென்பட்ட வேதனையின் நிழலைக் கண்டு ரமணனின் மனம் இளகி விட்டது.

"நான் என்ன செய்ய வேண்டும்?" என்றான்.

"என்னுடன் சேர்ந்து வானத்தைப் பார்க்கணும். புதிய கிரகம் தென்படலாம். புதிய கெலாக்ஸி தென்படலாம். ஒரு நிமிடம்... இடத்தை விட்டு அசையாமல் பார்வையை மட்டும் இடது பக்கமாகத் திரும்பிப் பார். எலி ஒன்று நம்மைப் பழிப்பது போல் மீசையை எப்படி ஆட்டுகிறது பார்த்தாயா? குறைந்தது அதனுடைய திமிரை அடக்குவதற்காகவாவது நாம் ஏதாவது பெரிய விஷயத்தைக் கண்டு பிடிக்கணும். என்ன சொல்கிறாய்?"

ரமணன் சம்மதிப்பது போல் தலையை அசைத்தான்.

6

ஜூன் இருபத்தொன்பது,

விடியற்காலை நாலரை மணி.

சான்ஃபிரான்ஸிஸ்கோ... இயற்கையாகவே சூழ்நிலை குளிர்ச்சியாக இருந்தது. பசிஃபிக் கடலுக்கு அருகில், கலிஃபோர்னியா தெற்கு மலைகளுக்கு நடுவில் இருப்பதால் அதற்கு அந்தச் சூழல் அமைந்து விட்டது. மூன்று பக்கமும் கடல், ஒரு பக்கம் மலைகளும் இருப்பதால் உலகத்திலேயே முக்கியத் துறைமுக நகரமாக பெயர் பெற்றிருந்தது. நகரத்திற்குள் நுழைவதற்கு முக்கியமான நுழைவு வாயில் 'கோல்டன் கேட்', பலதரப்பட்ட மனிதர்கள் வசிக்கும் நகரம் என்பதால் அதன் வளர்ச்சி வித்தியாசமான முறையில் இருந்தது. வடக்குப் பிரதேசத்தில் ரஷ்யர்களும், நாப் ஹில்லைத் தாண்டினால் இட்டாலியன் குடியிருப்புகள், கோல்டன் கேட் ப்ரெஸிடியோவிற்கு நடுவில் ரிச்மாண்ட் செக்ஷனில் பழைய நகரம் தென்பட்டன.

கடற்கரைக்கும், மிஷன் ஸ்ட்ரிட்டுக்கும் நடுவில் தெற்குப்பக்கமாகத் தொழிற்சாலைகள் பெருகியிருந்தன.

பேஷார்ன் ஸ்ட்ரீட்டில் மெக்கின் கார் பறந்துகொண்டு இருந்தது. திடீரென்று ஏதோ பிரச்சனை ஏற்பட்டால் தவிரத் தனக்கு இத்தனை அவசரமாக அழைப்பு வந்திருக்காது என்று அவனுக்குத் தெரியும். ஏறத்தாழ முழு உலகத்தின் மீதே அதிகாரம் செலுத்தக்கூடிய ஒரு நாட்டின் மிக உயர்ந்த பதவியில் இருப்பவருக்கு அவன் முதல் காரியதரிசியாக இருக்கிறான். எந்த மாதிரி பிரச்சனை வந்திருக்கும்? எது வேண்டுமானாலும் இருக்கலாம்.

உலகில் ஒவ்வொரு நிமிஷத்திற்கும் ஆயுத உற்பத்திக்காக ஐம்பது லட்சங்கள் செலவாகிக் கொண்டிருந்தது. எத்தனை கசப்பான உண்மை! பிரொபசர் காண்ட்ரேவிட் சொன்னது உண்மையாக இருந்தால் இன்னும் ஐந்து ஆண்டுகளுக்குள் 'லேசர் பீம்' ஆயுதத்தை ரஷ்யா தயாரித்துவிடும். ஒளியின் வேகத்துடன் அண்டை நாடுகளை நாசமாக்க வல்ல ஆயுதம்.

மனித ஜாதிக்கு ஆபத்து போர் மட்டுமே இல்லை.

நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருக்கும் மக்கள் தொகை.

புயல்கள்... நிலநடுக்கும்... ட்ரக்ஸ்... மாசுபட்ட சூழல்... எயிட்ஸ்...

மனித ஜாதி நசிந்து போகாமல் எந்த சக்தியால் தடுத்து நிறுத்த முடியும்?

எல்காமினோரியம் வழியாக ஸ்கைலைன் பௌல்வார்டை நோக்கி மெக்கின் கார் போய்க்கொண்டிருந்தது.

விடிவதற்கு இன்னும் கொஞ்சம் நேரம் இருந்தது. லேசாகப் பனி பெய்து கொண்டிருந்தது.

மூன்றாவது தெருவிலிருந்த பெரிய மாளிகையின் முன்னால் காண்டெஸா நின்றது.

விசாலமான படிகள், சற்றே திறந்திருந்த கதவு. உள்ளே சீருடை அணிந்திருந்த பாதுகாவலர்கள்.

ஓவர் கோட்டைச் சரிசெய்து கொண்டு மெக் உள்ளே நுழைந்தான்.

'வராண்டாவில் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. எங்கும் நிசப்தமாக இருந்தது. அங்காங்கே உதவியாளர்கள் நடமாடிக் கொண்டிருந்தார்கள். பெரிய புயல் வருவதற்கு முன்னால் இருக்கும் சூழ்நிலை அங்கே நிலவியிருந்தது. பத்தடி உயரமுள்ள மரக்கதவுகள் வெறுமே சாத்தியிருந்தன. அருகில் சென்று குமிழைத் திருகி மெதுவாகத் திறந்தான். உள்ளே விளக்குகள்

ஜொகஜோதியாக எரிந்து கொண்டிருந்தன. நடுவில் ஓவல் வடிவத்தில் பெரிய மேஜை இருந்தது. சுற்றிலும் அமர்ந்திருந்தவர்களை வரிசையாக கவனித்தான்.

அண்டர் செக்ரடரி டு தி டிஃபென்ஸ் மினிஸ்டர் சார்லஸ் மெக்டோனால்ட், பிரசிடெண்ட் ஆஃப்தி பார்லிமெண்டரி கமிட்டி ஜான் நிகல்ஸன், செக்ரடரி ஆஃப் ஸ்டேட் ராபர்ட் ஃபின்ஸ், பிரசிடெண்ட் ஆஃப் யுனைடெட் ஸ்டேட்ஸ் ரோகர்ஸ்...

மெக்கின் பார்வை சட்டென்று ஒரு இடத்தில் நின்று விட்டது. அத்தனைக் குளிரிலும் நெற்றியில் வியர்வை படிந்தது. கைகளை மடியில் வைத்துக்கொண்டு சற்றே குனிந்து காகிதங்களைப் பரிசீலித்தவாறு ஒரு வயோதிகர் அங்கே அமர்ந்திருந்தார்.

அவர்தான் ஃபஸ்ட் செக்ரடரி ஆஃப் சென்ட்ரல் கமிட்டி, கம்யூனிஸ்ட் பார்ட்டி ஆஃப் சோவியத் ரஷ்யா .... போரின் எஃப் காண்டினோவா.

* * *

கைலஜா கன்னத்தில் கையை ஊன்றிக் கொண்டு யோசித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு முன்னால் இண்டர்வ்யூ சம்பந்தப்பட்ட ஃபைலும், தேர்வுக்கு வந்தவர்களின் மதிப்பெண்களின் பட்டியலும் இருந்தன. அன்று, ரமணனுக்கு இண்டர்வ்யூ நடந்து கொண்டிருந்த போது அவள் ஏதோ வேலையாக அந்த அறைக்குச் சென்றிருந்தாள். ரமணனைப் பார்த்ததும் எங்கேயோ பார்த்தாற்போல் இருக்கே என்று நினைத்தாள். அப்பொழுதுதான் நினைவுக்கு வந்தது, ராணி புகைப்படத்தைக் காட்டிய விஷயம்.

அவள் வெளியே வந்து கொண்டிருந்த போது அவன் சொன்ன வார்த்தைகள் காதில் விழுந்தன.

"இது போன்ற இண்டர்வியூக்கள் இருக்காது. ஏ.சி. ரூம்கள் இருக்காது. கேள்விகள் பதில்கள் எதுவுமே இருக்காது."

அவளுக்குச் சிரிப்பு வந்தது. உண்மையிலேயே அதற்கு முன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவன் சரியான பதில்களை அளித்திருந்தான், அவனுடைய சப்ஜெக்டாக இல்லாத போதிலும்.

ஆனால் நிர்வாக அதிகாரி சிபாரிசு செய்த ஆள் வேறு ஒருவன் இருந்தான். அவனை எப்போதோ தீர்மானித்தாகி விட்டது. இந்த இண்டர்வ்யூ வெறும் கண் துடைப்புதான்.

அவள் பட்டியலைப் பார்த்தாள்.

வேலை தரப்போவதாகத் தீர்மானிக்கப்பட்ட நபருக்கு கமிட்டி அங்கத்தினர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு மதிப்பெண்கள தந்திருந்தார்கள். இரண்டாவதாக வந்தவன் யாரோ ராமன். அவனுக்கு ஐம்பது மதிப்பெண்கள் வந்திருந்தன.

அவள் ரமணன் பெயருக்கு எதிரில் பார்த்தாள். ஜீரோ போட்டிருந்தது. அவள் ஏளனமாகச் சிரித்துக் கொண்டாள். உண்மையில் அவள் சொன்ன பதில்களுக்கு நூற்றுக்கு நூறு தந்திருக்க வேண்டும். வேலை கொடுக்க விருப்பம் இல்லாமல் அவனைத் தூண்டிவிட்டு, அந்த சாக்கில் ஜீரோ மதிப்பெண்களைத் தந்திருக்கிறார்கள்.

சிபாரிசு செய்யப்பட்ட நபரின் கல்வித் தகுதியை ஆராய்ந்தாள்.

இண்டர் மீடியட் . . . செக்ண்ட் கிளாஸ்.

அவளுக்கு ரமணன் மீது இரக்கம் ஏற்பட்டது. சான்றிதழ்களை அடுக்கி எடுத்துக் கொண்டு அவன் இயலாமையுடன் பார்த்த பார்வை அவளுக்கு இன்னும் நினைவில் இருந்தது.

ஆனால் அவளால் என்ன செய்ய முடியும்?

ஃபைலை உள்ளே வைத்து விட்டு அன்றைய தபால்களை எடுத்து ஒவ்வொரு கடிதமாகப் படிக்கத் தொடங்கினாள்.

நான்காவது கடிதத்தை எடுத்துப் படித்தவள் திடுக்கிட்டாள். வேலை கிடைத்த நபரிடமிருந்து வந்த கடிதம் அது. "இதை விட நல்ல வேலை கிடைத்து விட்டதால் இதில் சேர முடியவில்லை

என்று வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று எழுதியிருந்தான். சிபாரிசு இருப்பவனுக்கு இதைக் காட்டிலும் நல்ல வேலை கிடைத்ததில் வியப்பு எதுவும் இல்லை...

அப்படியானால் இந்த வேலை யாருக்குக் கிடைக்கப் போகிறது?

ராமன் என்ற சென்னைவாசிக்கு.

கமிட்டி மெம்பர்கள் யாருக்குமே இரண்டாவது நபரின் மீது அக்கறை இல்லை என்று புரிந்தது.

அவள் மனதில் ஒரு யோசனை மின்னலாகத் தோன்றியது. லேசாக நடுங்கினாள்.

அப்படிச் செய்தால்?

யாருக்காவது தெரிந்து விட்டால்?

எதற்காகச் செய்ணும்?

அநியாயம் நிகழ்ந்துவிட்ட ஒரு இளைஞனுக்கு நியாயம் வழங்குவதற்காக...

இருந்தாலும் ரிஸ்க் இல்லையா?

இரு வேறுபட்ட உணர்ச்சிகளின் மோதலில் சிறிது நேரம் தத்தளித்தாள். இறுதியில் ஒரு முடிவுக்கு வந்து விட்டவள் போல் பேனாவைக் கையில் எடுத்துக் கொண்டாள்.

ராமன் என்ற ஆங்கிலப் பெயருக்குப் பின்னால் ஏ.என். என்ற எழுத்துக்களை இணைத்தாள்.

* * *

புலி ஒன்று இரண்டு கால்களில் பாய்ந்து வந்து கொண்டிருந்தது. இரண்டு கைகளையும் நீட்டி நகங்களால் பிராண்டுவதற்காக முன்னால் வந்து கொண்டிருந்தது. வீலென்று கத்தப் போனான். வாயிலிருந்து வார்த்தை வெளியில் வரவில்லை.

ஓடத் தொடங்கினான். பின்னால் புலி துரத்திக் கொண்டு இருந்தது. திரும்பிப் பார்த்து விட்டு மறுபடியும் ஓட்டமெடுத்தான். எவ்வளவு வேகமாக ஓடினாலும் காட்டைத் தாண்ட முடியவில்லை. புலி பின்னாடியே ஓடி வந்து கொண்டிருந்தது.

சட்டென்று நின்று விட்டான். எதிரே பெரிய வாய்க்கால் சலசலவென்று ஓடிக் கொண்டிருந்தது. பின்னால் புலியின் உறுமல் கேட்டுக் கொண்டிருந்தது. சுற்றிலும் பார்த்தான். எங்கும ஃபைல்கள், பெரிய பெரிய மரங்கள் போல் அலமாரிகள். மரங்களுக்கு இலைகள் இல்லை. பைல்கள் தொங்கிக் கொண்டு இருந்தன.

ஆர்டினரி... அர்ஜெண்ட்... இம்மீடியட்... காகிதங்கள் பறந்து கொண்டிருந்தன.

பேப்பர் கூடையிலிருந்து சுழல் காற்றில் சிக்கியது போல் காகிதங்கள் பறந்தன. எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்து கொண்டன.

பின்னாலிருந்து புலி மேலே பாய்ந்தது.

வீல் என்று அலறினான்.

"என்னங்க... என்ன ஆச்சு?" ஜானகி கணவனைத் தட்டி எழுப்பினாள்.

பிரகாஷ் கண்களைத் திறந்தான். உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. நடுங்கிக் கொண்டிருந்தான்.

"என்ன ஆச்சு?" மறுபடியும் கேட்டாள்.

அவன் சிறிது நேரம் பேசவில்லை. பிறகு பலவீனமான குரலில். "தண்ணீர்" என்றான்.

அவள் எழுந்து சென்று தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தாள். நடுங்கும் கைகளுடன் மளமளவென்று குடித்து முடித்தான்.

ஜானகிக்குக் கணவனின் சுபாவம் தெரியும். "என்ன நடந்தது?" ஜானகி கேட்டாள்.

"கனவு! பயங்கரமான கனவு" என்றான்.

"என்ன கனவு?"

கனவை விவரித்துச் சொன்னான்.

"புலி இரண்டு கால்களில் நின்றதா?"

"ஆமாம், மனிதனைப் போலவே இரண்டு கால்களில் நின்றது."

"முகம் புலியைப் போல் இருந்ததா?"

"புலியைப் போல்... இல்லை... இல்லை... பாதி புலி, பாதி மனிதனைப் போலவும் இருந்தது."

"அந்த ஆள் யாரைப் போல் இருந்தான்?"

"எங்க ஹெட் கிளார்க் போல் இருந்தான்."

அவளுக்கு அவன் மீது இரக்கம் ஏற்பட்டது.

"ஆஃபீசில் ஏதாவது ரகளை நடந்ததா?" என்று கேட்டாள்.

அவன் ஒரு நிமிடம் தாமதித்து விட்டுப் பிறகு சொன்னான். "தினமும் இருப்பதுதான். எனக்கு சரியாக ட்ராஃப் எழுத வராதாம். என்னை விடப் ப்யூன் ஏழுமலை தேவலையாம். எல்லோருக்கும் முன்னால் என்னை... என்னை..." பிரகாஷால் மேற்கொண்டு பேசமுடியவில்லை.

"இழுத்து இரண்டு அறை கொடுக்காமல் சும்மா விட்டீங்களா?"

"அவ்வளவு தைரியம் இருந்தால் விவகாரம் இத்தனை தூரத்திற்கு ஏன் வரப்போகிறது?"

அவளுக்கு எரிச்சலாக இருந்தது. "பின்னெ என்ன செய்தீங்க? கைகளைக் கட்டிக்கொண்டு நின்றிருந்தீங்களா?"

"அவன் எங்க ஹெட் கிளார்க்."

"இருந்தால் மட்டும் என்னங்க? அவன் மெட்ரிக்யுலேஷன் கூடப் பாஸாகவில்லை என்று நீங்க தான் சொல்லியிருக்கீங்க.

நீங்க பி.எல். உண்மையில் நீங்க எழுதும் ட்ராஃப்ட் ரொம்ப நேர்த்தியாக, கச்சிதமாக இருக்கும். பத்தாம் வகுப்பு படித்த எனக்கே அது புரிகிறது. உங்களுக்கு ட்ராப்ட் எழுத வராது என்று உங்களுடைய ஹெட்கிளார்க் சொன்னால் அது அவருடைய பொறாமையைக் காட்டுகிறதே தவிர உங்களைத் தாழ்த்தவில்லை. நீங்க செய்ய வேண்டியதெல்லாம் அவனை ஒரு முறை எதிர்த்து நிற்பதுதான். ஒருமுறை எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது பாருங்கள் என்ன நடக்கிறதோ? ஆஃபீசரும் நீங்க சொல்வதுதான் சரி என்று சொல்லுவார். நீங்க இப்படி கோழையாகக் கூனிக்குறுகிக் கொண்டு இருந்தால் உங்க ப்யூன் கூட உங்களை மதிக்கமாட்டான். கொஞ்சம் பலத்தைக் கூட்டிக் கொள்ளுங்கள். புலியைப் பற்றி பயம் எங்கேயும் இல்லை. உங்க மனதில்தான் அது இருக்கிறது. ஏற்கனவே உங்க உடல் நலம் சரியாக இல்லை. அதோடு இந்த பாழாய்ப்போன பயம் வேறு. எல்லாவற்றையும் மறந்து விடுங்கள். என் மடியில் தலையை வைத்துக் கொண்டு படுத்துக் கொள்ளுங்கள். நாம் வாழ்ந்து கொண்டிருப்பது பயப்படுவதற்காக இல்லை. ஒரு விஷயம் சொல்லட்டுமா...."

இருள் மெதுவாக விலகிக் கொண்டிருந்தது தொலைவில் எங்கேயோ கோழி ஒன்று கூவி உலகத்தை எழுப்பிக் கொண்டிருந்தது.

கிழக்கு வானம் சிவப்பு முக்காட்டைச் சரி செய்து கொண்டு சூரியனை வரவேற்கத் தயாராகி விட்டது.

"மனிதன் ஒருமுறை செத்துவிட்டால் பரவாயில்லை. ஆனால் ஒவ்வொரு நிமிடமும் மனரீதியாகச் சாகக் கூடாது." ஜானகி சொல்லி முடித்தாள்.

* * *

"மனிதன் சமுதாய ரீதியாக சாகக் கூடாது ராஜய்யா. அப்படி சாகாமல் இருப்பதற்காகத்தான் இந்த சட்டங்கள், கோர்ட்டும் இருக்கு. உன் நிலத்தை எப்படிக் கைப்பற்றுவாங்ளோ ஒரு கைப் பார்த்து விடலாம்" ரங்கசாமி சொன்னான்.

அவனுடைய உண்மையான பெயர் ரங்கன். அரசியலில் கொஞ்சமாக ஈடுபட ஆரம்பித்த பிறகு தன் பெயரை ரங்கசாமி யாக மாற்றிக்கொண்டான். அவனுக்கும் முன்சீப்புக்கும் கொஞ்சம் கூட ஒத்துப் போகாது. அதான் ராஜய்யா பக்கம் சேர்ந்து கொண்டான்.

"கோர்டில் கேஸ் போடுவோம். அவர்களை உண்டு இல்லை என்று ஆக்கும் பொறுப்பு என்னுடையது."

"பணக்காரன் சண்டை போட்டுக் கொள்ளணும் என்றால் கோர்ட்டுக்கு போவாங்க சாமி. பணக்காரன் ஏழையுடன் சண்டை போட அவன் வயிற்றில் அடித்தால் போதும்." ராஜய்யா கைகளைக் கட்டிக்கொண்டு பணிவாகச் சொன்னான். அவனைப் பார்த்தால் தீயில் வீட்டைப் பறிக்கொடுத்தவன் போல் இருந்தான்.

"அவர்களைச் சும்மா விட்டு விடுவதா?" சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டே ரங்கசாமி சொன்னான். "அம்பது ஆட்களை அழைத்துப் போய் நிலத்துக்கிட்ட நிற்க வைப்போம். விளைச்சலை எப்படி எடுத்துக்கிட்டு போவானோ பார்த்து விடலாம்."

"போலீஸ்காரங்களைக் கூட்டிக்கிட்டு வருவான் சாமி."

"நியாயம் கிடைக்க வேண்டாமா?"

"கிடைக்கும் சாமி அவங்களுக்கு!"

7

பிரபொசர் குழப்பம் அவர்களிடம் ரமணன் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதம் ஆகி விட்டது. அவரிடம் செய்வதற்கு வேலை எதுவும் இல்லை. அவர் எப்போதும் ஏதாவது கணக்குப் போட்டுக் கொண்டே உட்கார்ந்திருப்பார். ஒரு ப்ளாஸ்க் நிறைய தேநீர் இருந்தால் போதுமானது. வேறு எதுவும் தேவையில்லை. இந்த

ஒரு மாதத்தில் ஒரு நாள் கூட அவர் வெளியில் வரவில்லை. ரமணனை சந்திப்பதற்காகத்தான் அன்று வெளியில் போகவேண்டும் என்ற விருப்பம் அவருக்கு தோன்றியது போலும்.

அறை முழுவதும் காகிதங்கள், கணக்குப் போட்ட காகிதங்கள். ஆஸ்ட்ரானமி எவ்வளவு இண்ட்ரெஸ்டிங்க் சப்ஜெக்டோ அத்தனைக்கத்தனை சலிப்புதரும் சப்ஜெக்ட்டும் கூட.

அங்கு ரமணனுக்குப் பிடித்த விஷயம் ஒன்றுதான். எலிகள்- அவை அங்கே ரொம்ப பாதுகாப்பான சூழ்நிலையில் வளர்ந்து கொண்டிருந்தன. ரமணன் அவற்றுடன் நட்பையும் ஏற்படுத்திக் கொண்டு விட்டான். ஒரு எலி தொலைவில் நின்று கொண்டே குசலம் விசாரித்துக் கொண்டு இருந்தது. இன்னொன்று மீசையை ஆட்டிக் கொண்டு பழித்துக் கொண்டிருந்தது. அங்கே மனிதர்கள் இருந்தாலும் அவற்றுக்குக் கொஞ்சம் கூட பயம் இல்லை. ஒருவர் உலகப் பற்றுகளைத் துறந்த யோகி. இன்னொருவன் உலகத்தின் மீது விரக்தி ஏற்படுத்திக் கொண்டிருந்த இளைஞன். அதான் இத்தனை பெரிய மாளிகையில் அவை பணியாளர்களை போல் சுயேச்சையாக நடமாடிக்கொண்டிருந்தான்.

பிரொபசர் குழப்பம் எவ்வளவு புத்திசாலியாகக் கணக்குகளைப் போட்டுக் கொண்டு இருப்பாரோ சிலசமயம் முட்டாள்தனமாகவும் நடந்து கொள்வார். அவரைப் பார்த்த யாருமே அவர் ஆஸ்ட்ரானமியில் "ஓகாயமா ஆஸ்ட்ரோஃபிசிக்ல் அப்சர்வேடரி"லிருந்து சான்றிதழ் பெற்றவர் என்றும், ஹார்ட் லாண்ட் மாக்னெட் ஃபீல்டில் ராயல் ஆஸ்ட்ரானமர் ஆக நல்லாயிரம் பவுண்ட் சம்பளத்தை விட்டுவிட்டு வந்து சொத்து முழுவதும் அழித்து விட்டு இப்படி ஒதுக்குப் புறமாக இருக்கிறார் என்றும் நினைக்க மாட்டார்கள்.

இவ்வளவு புத்திசாலியாக இருப்பவர்,- சில விஷயங்களில் எவ்வளவு முட்டாள்தனமாக நடந்து கொள்வாரோ பழைய பைல்களில் கிடைத்த கடிதங்களைப் பார்த்தால் ரமணனுக்குப் புரிந்தது.

அன்புள்ள இந்தியப் பிரதமர்
ஜெகதீஷ் சந்திரன் அவர்களுக்கு,

நீங்கள் நலமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் நிர்வாகத்தில் நாடு செழிப்புற்று விளங்குகிறது என்றும் நம்புகிறேன். சமீபகாலமாக வீட்டை விட்டு அதிகமாக வெளியில் போகாததால் நாட்டின் நடப்பைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியவில்லை.

முக்கியமான விஷயம் என்னவென்றால் நான் நாளை மறுநாள் டில்லிக்கு வருகிறேன். இரண்டு நாட்கள் தங்குவேன். முடிந்த போது ஏதாவது ஒரு நேரத்தில் தங்களைச் சந்திக்கிறேன்.

மற்ற விஷயங்களை நேரில் பேசிக்கொள்வோம்.

பணிவுடன்
புரொபசர் குழந்தைவேல்
பழனி மாணிக்கம்.

பி.கு. : என்னால் அரைமணிக்குமேல் உங்களுடன் இருக்க முடியாது, மன்னிக்கவும்.

இந்தக் கடிதத்தைப் படித்த பிறகு ரமணன் அரை மணி நேரம் வரையில் நினைத்து நினைத்துச் சிரித்துக் கொண்டே இருந்தான். இதற்கு பதில் வரவில்லை போலிருக்கு. மறுபடியும் இவரிடமிருந்து இன்னொரு கடிதம் போயிருக்கிறது. அதன் நகல்...

நான் இதற்கு முன்பே கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் உறையின் மீது முகவரி எழுதியிருந்தேன். ஆனால் உறையின் மீது முகவரி எழுதினேனா இல்லையா என்று சந்தேகமாக இருக்கிறது. எது எப்படி இருந்தாலும் உங்க அலுவலகத்தின் முன்னால் இருந்த பாதுகாவலர்கள் என்னை உள்ளே விடவில்லை. அது போகட்டும். நீங்க இந்த ஊருக்கு வந்தால் என்னைக் கட்டாயம் சந்திக்க வேண்டும் என்று

விரும்புகிறேன். என்னுடைய முகவரியைக் கடிதத்தின் வலதுப் பக்க மூலையில் எழுதியிருக்கிறேன்.

வாழ்த்துக்களுடன்

புரொபசர்
கு. மாணிக்கம்.

பின்குறிப்பு : எங்க வீட்டுக்கு முன்னால் பாதுகாவலர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். இருந்தாலும் நீங்கள் வருவதற்கு முன் கடிதம் போடுங்கள்.

பிரதமரின் அலுவலகத்தில் இது போன்ற கடிதங்களுக்கு பதில் எழுதுவதற்காக உதவியாளர்கள் இருப்பார்கள். எந்த மொழியில் கடிதம் வந்தாலும் அங்கே மொழி மாற்றம் செய்யப்படும். கிட்டத்தட்ட எழுபத்தி ஐந்து சதவிகிதம் தபால்கள் அந்த இடத்திலேயே க்ளியர் செய்யப்படும். மற்றவை முதல்காரியதரிசியின் மேஜைக்குப் போகும். பிரதமரின் கையெழுத்தை நகல் செய்யும் ஸ்பெஷல் சிக்னேசர் மிஷினில் மற்ற கடிதங்களுக்குப் பதில் தரப்படும். பிரதமர் கையெழுத்து போட்டிருப்பது போலவே தென்படும். புரொபசரின் கடிதம் முதல் இடத்திலேயே வடிகட்டப் பட்டுவிட்டது.

பிரதமர் அலுவலகம்
புதுடில்லி

அன்புள்ள அய்யா,

தங்களுடைய கடிதம் கிடைத்தது. பிரதமர் மற்ற வேலைகளில் மூழ்கியிருப்பதால் தங்களைச் சந்திக்க முடியவில்லை.

வாழ்த்துகளுடன்

இப்படிக்கு
கோபாலகிருட்டிண எக்போடே
இன்ஃபர்மேஷன் அட்வைசர்

புரொபசரின் செயல்கள் இப்படித்தான் இருக்கும்.

வேலையில் சேர்ந்த முதல் நான்கைந்து நாட்கள் இந்த கடிதங்களையும் மற்ற பேப்பர்களையும் படித்துப் பொழுதை போக்கினான். சில கடிதங்களைப் படிக்கும் போது சிரிப்பு வரும். சில கடிதங்கள் புரியாமல் கிறுக்கல்களாக இருந்தன.

எல்லாவற்றையும் விட அவனை அக்கிழவரின் அப்பாவித்தனம் ஈர்த்து விட்டது. அவர் எத்தனைப் புத்திசாலியாக இருந்தாரோ அத்தனைகத்தனை அப்பாவியாக இருந்தார். அவ்வளவு அப்பாவியாக இருந்ததால்தான் லட்சக்கணக்கான சொத்தை இரும்புக் கருவியாக மாற்றிக்கொண்டு தன்னுடைய கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டு இருந்தார்.

அவர் கைகளில் இருந்த சுறுசுறுப்பும், கண்களின் தேஜஸ்ஸும், பேச்சில் நயமும் ரமணனைக் கட்டிப்போட்டுவிட்டன.

புரபொசரிடம் சேர்ந்த பிறகும் ரமணன் தன் வேலை விஷயத்தை மறக்கவில்லை. கண்ணில் பட்ட விளம்பரங்களுக்கெல்லாம் அப்ளை செய்து கொண்டிருந்தான். புரபொசரிடம் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதம் கழித்து பத்திரிகை அலுவலகத்திலிருந்து உடனே வந்து வேலையில் சேரச் சொல்லித் தபாலில் கடிதம் வந்தது.

வீட்டில் மகிழ்ச்சி பொங்கியது. ரமணனின் தந்தை இருமிக்கொண்டே வேலையில் சேர்ந்த புதிதில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுரைகளை வழங்கிக் கொண்டே, மேல் வரும்படி ஏதாவது கிடைக்குமா என்று விசாரித்தார்.

எல்லாவற்றுக்கும் ரமணன் சுருக்கமாகப் பதிலளித்தான். தந்தையுடன் அவன் அதிகமாகப் பேசமாட்டான். தந்தையின் வாழ்க்கை வரலாறு அவனுக்குத் தெரியும். இளமையில் இருக்கும் போது அவர் ஆடிய ஆட்டங்களின் விளைவு இன்று நோயாளியாக வாழ்ந்து கொண்டிருந்தார். அவன் பார்வையில் தந்தை என்றோ இறந்து விட்டார்.

மறுநாள் காலையில் அவன் புரொசரின் வீட்டுக்குப் போய் தனக்கு வேலை கிடைத்த விஷயத்தைச் சொன்னான்.

பிறகு மாலதியின் வீட்டுக்குப் போனான்.

"அப்போ வேலை கிடைத்து விட்டதுன்னு சொல்லு" மாலதியின் தந்தை பைப்பின் சாம்பலைச் சுண்டுவிரலால் தட்டிக் கொண்டே கேட்டார்.

ரமணன் பேசவில்லை.

"சம்பளம் எவ்வளவு?"

இதற்கும் அவன் பதில் சொல்லவில்லை. அது அவ்வளவு பெரிய தொகை இல்லை.

மாலதியின் தந்தை நாற்காலியை விட்டு எழுந்து கொண்டே சொன்னார்.

"இருநூறு.... முன்னூறு.... இல்லாவிட்டால் ஐநூறு அவ்வளவுதானே. அது எங்கள் சமையல்காரனின் சம்பளம்."

ரமணனின் முகம் சிவந்தது.

"இனி ஒரு போதும் இந்தப் பக்கம் தலையைக் காட்டாதே. மாலதிக்கு வரன் பார்த்துக் கொண்டு இருக்கிறோம். உன்னால் அதற்கு இடையூறு ஏற்பட்டால் உன்னைக் கொன்று புதைத்து விடுவேன்." இயல்பான குரலில் சொன்னார்.

அத்தனை வேதனையிலும் ரமணனுக்குச் சிரிப்பு வந்தது. போகப் போனவன் நின்றான்.

"தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு என்றுமே வந்தது இல்லை. அந்த எண்ணம் இருந்திருந்தால் மறுபடியும் இப்படி உங்க முன்னால் வந்து நிற்க வேண்டிய தேவை வந்திருக்காது. மாலதிக்கு மைனாரிட்டி முடிந்து விட்டது என்று எனக்குத் தெரியும். நாங்க இருவரும் திருமணம் செய்துகொள்ள நினைத்தால் உங்க பணமோ, இல்லை உங்களுக்குப்

பின்னாலிருக்கும் கையாட்களோ அதைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால் அவ்வாறு நடந்து கொள்ளாமல் எங்களைத் தடுப்பது மனிதனின் அடிப்படை மதிப்பிற்கு நான் அளிக்கும் கௌரவம் அவ்வளவுதான்." தடுமாறாமல் சொல்லி விட்டு வெளியில் வந்தான்.

போர்டிகோவில் நின்றிருந்த மாலதி அவனுக்காக ஆர்வத்துடன் காத்திருந்தாள். ஏதோ சொல்ல வேண்டும் என்ற தவிப்பு அவள் கண்களில் தென்பட்டது. அவன் நின்றான். அவள் அவனைப் பார்த்தாள். இருவரின் பார்வையும் ஒரு நிமிடம் சந்தித்துக் கொண்டன.

வாழ்க்கை நிலையற்றதாக இருக்கலாம். ஆனால் அந்த ஒரு நிமிடம் வாழ்க்கைக்கு முழுமையைத் தரக்கூடியதாக இருந்தது.

அவன் தலையைக் குனிந்து கொண்டு முன்னோக்கி நடந்தான். மனம் முழுவதும் கலங்கி விட்டிருந்தது.

கைகள் இரண்டையும் பேண்ட் ஜேபியில் நுழைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான்.

சமீபகாலமாய் புரொபசருடன் சற்று நேரம் கழிப்பது அவன் மனதிற்கு மகிழ்ச்சியைத் தந்து கொண்டிருந்தது.

புரபொசரின் வீட்டை நோக்கி நடந்தான்.

க்ரீன் விச் நேரம் காலை 6.30

கடியாரத்தில் பன்னிரெண்டு மணி அடித்தது. கால்களை நீட்டிக் கொண்டு பின்னால் சாய்ந்து கொண்டார் புரொபசர். அவர் முகம் வாடிப் போயிருந்தது.

"அப்படி என்றால் போகாமல் இருக்க முடியாதா மிஸ்டர் கிராட்யுயேட்?" என்றார்.

ரமணன் பேசவில்லை.

"ஆமாம், அங்கே சம்பளம் கிடைக்கும் இல்லையா? எப்பொழுது போகப் போகிறாய்?"

"நாளை மறுநாள் போய்ச் சேரலாம் என்று இருக்கேன்."

"என்னிடம் வேலை பார்த்ததாக சர்டிபிகேட் தரச் சொல்கிறாயா?" என்றார்.

ரமணன் சிரிப்பை அடக்கிக் கொண்டு "வேண்டாம்" என்றான்.

புரொபசர் உள்ளிருந்து ஒரு செக்கை எடுத்துக் கொண்டு வந்தார். "இதைவிட வேறு எதுவும் என்னால் தரமுடியவில்லை. வைத்துக் கொள்." என்றார்.

ரமணன் செக்கைப் பார்த்தான்.

"சயின்ஸ் டுடே" பத்திரிகையிலிருந்து வந்த செக் அது. இந்த பைத்தியக்காரப் புரொபசர் ஒரு இரவு முழுவதும் விழித்துக்கொண்டு, பொறுமையாக உட்கார்ந்து எழுதி சம்பாதித்த பணம். அதைத் தனக்காக...

அவன் கண்களில் நீர் சுழன்றது. அந்த நிமிடம் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அங்கேயே இருந்து விடலாமா என்று தோன்றியது. ஆனால் வாழ்க்கை என்பது செண்டிமென்ட்ஸ் நிறைந்த கதை இல்லையே. வீட்டின் நிலைமை அவனை எச்சரித்துக் கொண்டே இருந்தது. மௌனமாக செக்கைப் பெற்றுக் கொண்டான். அவன் மனம் வெறுமையாகி விட்டிருந்தது.

சூனியமான விண்வெளியில் இத்தனை கோடானு கோடி கிரகங்கள், நட்சத்திரங்கள் எப்படித் தோன்றின? இந்தக் கேள்விக்கு விஞ்ஞானிகள் பலவிதமான தியரிக்களைச் சொன்னார்கள். எதுவும் திருப்திகரமாக இல்லை. இயற்கையை சோதிப்பதற்கு மனிதனின் மூளையின் திறமை போதவில்லை. நாம் பார்ப்பது ஒரு சூரியனை. விண்ணில் நம் கண்ணுக்குத் தெரியாத சூரியன்கள் பலகோடி இருக்கின்றன.

"ஆகாய கங்கை" என்று நாம் அழைக்கும் நட்சத்திரங்களின் கூட்டத்தில் கிட்டதட்ட இருநூறு மில்லியன் நட்சத்திரங்கள் இருக்கலாம் என்று சொல்கிறார்கள்.

இத்தனை கோடானு கோடி நட்சத்திரங்களும் ஒரு புள்ளியைச் சுற்றிச் சுழன்றுக் கொண்டு இருக்கின்றன. பூமி தன்னைத் தான் சுற்றுவதற்கு ஒரு நாள் ஆவது போல், இவை ஒரு முறை சுற்றி முடிக்க இரண்டு மில்லியன் ஆண்டுகள் தேவைப்படும்.

8

ரமணனுக்கு அந்த வீட்டில் மிகவும் பிடித்தமான பொருள் ஒன்று இருந்தது. அதுதான் டெலிஸ்கோப், சின்னக் குழந்தை பொம்மைகளுடன் விளையாடுவது போல் அவன் அடிக்கடி அதன் வழியாகப் பார்ப்பதைப் பழக்கப்படுத்திக் கொண்டான். முக்கியமான நட்சத்திரங்களை, சந்திரனில் இருக்கும் "லெயாப் நிட்ஜ்" மலையை அடையாளம் காணப் பழகிக் கொண்டான்.

அன்று செவ்வாய்க் கிழமை

புரொபசர் வழக்கம் போல் கணக்குப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தார். ரமணன் டெலிஸ்கோப் வழியாக பார்த்துக் கொண்டிருந்த போது பந்தைப் போன்ற உருவம் ஒன்று தெற்கு திசையில் தென்பட்டது. ஆரஞ்சுப் பழத்தின் அளவு இருந்தது. ரொம்ப வேகமாக வடக்கு திசையில் சென்று கொண்டிருந்தது சாதாரண கண்களுக்குப் புலப்படவில்லை.

தொடக்கத்தில் ரமணன் கண்ணில் பட்ட எல்லாவற்றையும் பற்றி பிரொபசரிடம் கேட்டுக் தெரிந்து கொண்டிருந்தான். பிரொபசருக்கு இந்த விஷயத்தில் ஞாபக சக்தி அதிகம். ஒவ்வொரு நட்சத்திரத்தின் பெயரையும், கிரகங்களின் பெயரையும் சொல்லுவார். ஆனால் தன்னுடைய இந்த ஆர்வம் புரொபசரின்

வேலையை தடைப்பட வைக்கிறது என்று உணர்ந்து அப்படிக் கேட்பதை நிறுத்திக் கொண்டான். அந்த எண்ணத்தில் தான் அவன் பந்து போன்ற உருவத்தைப் பற்றி அவரிடம் கேட்கவில்லை.

ஆனால் மறுநாளும் அதே நேரத்தில் அது தென்பட்டது. இந்த முறை அது ஃபுட்பால் சைசில் இருந்தது. ஆனால் டெலிஸ்கோப் வழியாக இல்லாமல் சாதாரணமாகப் பார்த்தால் தென்படவில்லை. மிகவேகமாக வடக்குத் திசையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. இந்த முறை அவனால் ஆர்வத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. புரொபசரை அழைத்துக் காண்பித்தான்.

புரொபசர் ரொம்ப நேரம் அதையே கவனித்துக் கொண்டிருந்தார். அரை மணியில் அது வடக்குத் திசையில் மறைந்துவிட்டது.

"எத்தனை நாளாக நீ இதைப் பார்த்துக் கொண்டு வருகிறாய்?" டெலிஸ்கோப் அறையிலிருந்து வெளியில் வந்து கொண்டே புரொபசர் கேட்டார். அவர் முகத்தில் எந்த உணர்ச்சியும் தென்படவில்லை.

"நேற்றிலிருந்து. ஆனால் நேற்று இது இன்னும் கொஞ்சம் அதிகம் நேரம் தென்பட்டது. கொஞ்சம் சின்ன சைசில் இருந்தது." ரமணன் சொன்னான். "அது என்ன?" என்று கேட்டான்.

புரொபசர் ஒரு நிமிடம் பேசவில்லை. பிறகு யோசித்துக் கொண்டே சொன்னார். "பிராக்ஸிமா செஞ்சுவரி"

ரமணனுக்கு அதைப் பற்றித் தெரியும் பூமிக்கு அண்மையில் இருக்கும் நட்சத்திரம். அண்மை என்றால்... சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் உள்ள தூரம் ஒரு அங்குலம் என்றால் பூமிக்கும் அந்த நட்சத்திரத்திற்கும் இடையே உள்ள தூரம் நான்கு மைல்கள் அத்தனை அண்மை.

"இதற்கு முன்னால் டெலிஸ்கோபில் இத்தனை பெரிதாக தென்பட்டது இல்லையே. இப்பொழுது ஏன் தெரிகிறது?" ரமணன் கேட்டான்.

"இன்னும் இரண்டு நாட்கள் போனால் தவிர எதுவும் சொல்ல முடியாது." புரொபசர் சொன்னார்.

அடுத்து வந்த இரண்டு நாட்களும் ரமணன் புதிய அலுவலகத்தில் சேரும் மும்முரத்தில் இருந்தான். மெடிகல் சர்டிபிகேட் முதலியவற்றை ஏற்பாடு செய்வதில் இரண்டு நாட்களும் ஓடிவிட்டன.

அன்றுதான் ரமணன் அங்கு வேலை பார்க்கும் கடைசி நாள்.

பதினொரு மணி அளவில் எழுதிக் கொண்டிருந்த காகிதங்களிலிருந்து தலையை உயர்த்தி "புரிந்து விட்டது" என்று கத்தினார் புரொபசர்.

ரமணன் அவர் பக்கம் பார்த்தான்.

"பிராக்ஸிமா செஞ்சுவரி பற்றி" என்றார் புரொபசர். "பூமிக்கு சில கோடி மைல்கள் தொலைவில் இருக்கும் அந்த நட்சத்திரம் நான்கு நாட்களுக்கு முன் முப்பத்தைந்து நிமிடங்கள் வரையில் தென்பட்டது. அது தென்படும் நேரம் நாள்தோறும் ஒரு நிமிடம் குறைந்து கொண்டே வருகிறது. பூமியின் டயாமீடர் சுமார் எண்பது லட்சம் மைல்கள்" என்று சொல்லிக் கொண்டே தான் கணக்கு போட்ட பேப்பர்களைப் பார்த்தார்.

"சுமார் எட்டு மணி நேரம் தென்பட வேண்டிய அந்த நட்சத்திரம் இத்தனைச் சீக்கிரமாக வந்து விட்டுப் போய்விடக் காரணம் என்ன? ரொம்ப சிம்பிள் தியரி. ரயிலில் செல்லும் போது தொலைவில் இருக்கும் மரங்கள் அருகில் இருக்கும் மரங்களை விட அதிக நேரம் தென்படுகின்றன. அதே போல் தான் இதுவும்."

ரமணன் முறுவலித்தான். "அந்த நட்சத்திரம் முன்பு இருந்ததைவிட இப்பொழுது கொஞ்சம் அருகில் வந்திருக்கிறது என்கிறீர்களா?" என்றான்.

"வரவில்லை. வந்து கொண்டே இருக்கிறது. நாள்தோறும் அது தென்படும் நேரத்தில் வித்தியாசம் தெரிகிறது. இல்லையா.

எட்டு மணி நேரம் தென்பட வேண்டியது அரை மணி நேரம் தானே தெரிகிறது? அதாவது ரொம்ப நாட்களுக்கு முன்பே அதுதன் பயணத்தைத் தொடங்கிவிட்டிருக்க வேண்டும். சுமார் ஒரு மாத காலம் ஆகியிருக்கலாம். அது பூமியைத் தற்சமயம் இருபத்தி ஐந்து நிமிடங்களில் சுற்றி வருகிறது. அதாவது பத்தாயிரம் மில்லியின் தொலைவில் இருக்கிறது என்று அர்த்தம்."

"இத்தனை பெரிய மாறுதலை இதுவரையில் யாரும் கவனிக்கவில்லை என்று சொல்றீங்களா?" ரமணன் கேட்டான்.

"அந்தச் சந்தேகம் எனக்கு நேற்றே வந்தது. பழைய சாமான்கள் சிலவற்றை விற்று விட்டுக் க்ரின்விச் அப்சர்வேட்டரிக்கும், மாஞ்செஸ்டர் யூனிவர்சிடியில் மௌண்டுக்கும் போன் செய்தேன்."

"என்ன சொன்னார்கள்?"

புரொபசர் ஒரு நிமிடம் விட்டத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டார். "சுமார் ஒரு மாதத்திற்கு முன்னால் அப்சர்வேட்டரி அனைத்தையும் மூடி விடச் சொல்லி உத்தரவு வந்ததாம்" என்றார்.

இரண்டு பேரும் ரொம்ப நேரம் பேசவில்லை. அறை அலங்கோலமாக இருந்தது. புரொபசர் கணக்குப் போட்டு வைத்த காகிதங்கள் அறை முழுவதும் சிதறிக் கிடந்தன. எலி ஒன்று கால்களுக்கு இடையில் புகுந்து ஓடியது.

நிசப்தத்தைச் சிதறடிப்பது போல் புரொபசர் எழுந்து கொண்டே "வா... தேநீர் குடித்து விட்டு வருவோம்" என்றார்.

இருவரும் வெளியே வந்தார்கள். கதவை இழுத்துச் சாத்தியதுமே ஆட்டோமேடிக் தாழ்ப்பாள் பூட்டிக் கொண்டது. வெளியில் சின்ன குமிழைத் திருகிக் கதவைச் சாத்தி விட்டால் தானாகவே பூட்டிக் கொள்ளும் விதமாக அந்த லாக் அமைந்திருந்தது.

தெருவில் ஜனநடமாட்டம் அதிகமாக இல்லை. வெயில் ரொம்ப தீவிரமாக இருந்தது.

"சமீப காலமாக அடிக்கடி வெளியில் வரவேண்டும் என்று தோன்றுகிறது'' என்றார் புரொபசர். ''இதற்கு முன் ஆறுமாதங்களுக்கு ஒருமுறை வீட்டை விட்டு வெளியில் வருவேன். இப்போ பார். போன மாதம் வந்தேன். மறுபடியும் இப்போ வரவேண்டும் என்று தோன்றியது."

"என்னை அன்று சந்திக்க வேண்டும் என்று உங்கள் ஜாதகத்தில் இருந்திருக்கும். அதனால் தான் அன்று வெளியில் வந்திருக்கீங்க." ரமணன் சொன்னான்.

"மறுபடியும் இன்னிக்கு உன்னை வழியனுப்புவதற்காக வருகிறேன்."

ரமணன் மௌனமாக இருந்தான்.

இருவரும் மிலிடரி ஹோட்டலில் அமர்ந்து கொண்டு தேநீருக்கு ஆர்டர் கொடுத்தார்கள்.

ஹோட்டலில் அதிகமாகக் கூட்டம் இல்லை. நான்கு சாலைகளும் சந்தித்துக் கொள்ளும் இடத்தில் அந்த ஹோட்டல் இருந்தாலும், பக்கத்தில் இன்னொரு பெரிய ஹோட்டல் இருந்ததால் இங்கே கூட்டம் குறைவாக இருந்தது. கல்லாப் பெட்டி முன்னால் உட்கார்ந்திருந்தவன் தூங்கி வழிந்து கொண்டிருந்தான். ரமணன் சுற்றிலும் பார்த்து விட்டு தலையைத் திருப்பும் போது புரொபசர் சுட்டு விரலைத் தண்ணீரில் தோய்த்து விட்டு மேஜை மீது வரைந்து கொண்டருந்தார். அதற்குள் தேநீர் வந்தது. அதில் இன்னொரு விரலை தோய்த்து மற்றொரு புள்ளியை வைத்தார்.

"இதுதான் பூமி" என்றார்.

பிரொபசரின் சுபாவம் தெரிந்தவன் என்பதால் ரமணன் மௌனமாக டீயை குடித்துக் கொண்டிருந்தான்.

"ப்ரெஸ்ஸெல் தியரி தெரியுமா?" பிரொபசர் கேட்டார்.

தெரியாது என்பது போல் தலையை குறுக்காக அசைத்தான் ரமணன்.

"ஒரு நட்சத்திரம் நமக்கு எத்தனை தொலைவில் இருக்கிறது என்பதை தெரிந்து கொள்ள அவர் தியரியை கண்டு பிடித்து சொல்லியிருக்கிறார். இதோ... இந்த தேநீர் புள்ளியை பூமி என்று வைத்துக் கொள். இந்தத் தண்ணீர்ப் புள்ளி நட்சத்திரம். இன்று அது இருபத்தி எட்டு நிமிஷம் தென்பட்டது. நேற்று இருபத்தி ஒன்பது நிமிஷம். இதன் இடமாற்றம் சூரியன் பூமிக்கு தொலைவில் இருந்த நாளில்தான் நடந்திருக்க வேண்டும் அது என்ன தேதி?"

"ஜூன் இருபத்தோராவது தேதி."

"கரெக்ட். இந்த நட்சத்திரம் சுமார் முப்பத்தி ஐந்து நாட்களில் சில கோடி மைல்கள் பயணம் செய்து வடக்கிலிருந்து தெற்கு முகமாக செல்கிறது. ஆனால் இந்த இடத்தில் எனக்கொரு சந்தேகம் வருகிறது. நாம் சாதாரண டெலஸ்கோப்பில் கண்டுபிடித்த இந்த விஷயத்தை அதை விட நவீன வசதிகளைக் கொண்டு, அதாவது அல்ட்ரா வயலெட், எக்ஸரே, ரேடியோ, டெலிஸ்கோப்களின் மூலம் மற்றவர்கள் ஏன் கண்டுபிடிக்க முடியவில்லை? வெயிட்டர்... கொஞ்சம் சர்க்கரை கொண்டு வா. இதோ... இந்த நட்சத்திரம் இந்த கோணத்தில் வருகிறது. பூமி இந்தப் பக்கமாக போகிறது."

வெயிட்டர் சர்க்கரை கோப்பையைக் கொண்டு வந்து மேஜையின் மேல் வைத்து விட்டுப் போனான். அதைச் சிட்டிகையால் எடுத்து மேஜை மீதுவைத்தார்.

"இது சூரியன்" என்றார்.

இந்தப் பைத்தியக்கார சேஷ்டைகளை யாராவது பார்க்கிறார்களோ என்று பார்வையைச் சுழற்றினான் ரமணன்.

"இந்த நட்சத்திரம் இப்படிப் போகும் போது" என்று சொல்லிக் கொண்டே பிரொபசர் கோடு போட்டார். "சூரியனுக்கு இந்தப் பக்கமாக பூமி வந்து விடும். இன்னொரு விதமாகச் சொல்ல வேண்டும் என்றால் பூமிக்கு கிட்டத்தட்ட ஐம்பது லட்சம் மைல்கள் தொலைவிலிருந்து இந்த நட்சத்திரம் ஊடுருவிக் கொண்டு போய் எல்லையில்லாத வின்வெளியில் கலந்து விடுகிறது. கடந்த ஒரு மாதமாக அந்த நட்சத்திரம் நாலு கோடியே கோடிக் கோடியே மைல்கள் பயணம் செய்திருக்கிறது. அந்த வேகம் அப்படியே தொடர்ந்தால், அது பூமிக்கு ரொம்ப நெருக்கமாக வருவதற்கு இன்னும் இருபது நாட்கள், அதாவது ஆகஸ்ட் பதினேழாம் தேதி அன்று வரும் வாய்ப்பு அதிகம். என் கணக்குச் சரியாக இருந்தால்... இந்த டீ ஆறிப் போய்விட்டது. இன்னொரு டீயை சொல்லு. என் கணக்கு சரியாக இருந்தால்... சரியாக அன்றைய தினம் பதினோரு மணி பத்து நிமிடங்களுக்கு இந்த ஊடுருவல் நிகழும்."

சர்வர் வந்தான். "இன்னொரு டீ" என்றான் ரமணன்.

சர்வர் போய் விட்டான்.

"ஆகஸ்ட் பதினேழு. பகல் பதினோரு மணி பத்து நிமிடத்திலிருந்து மூன்று வினாடிகள் வரை அந்த நட்சத்திரத்தின் காந்த சக்தி பூமியின் மீது இருக்கும்."

சர்வர் டீயைக் கொண்டு வந்தான்.

"அப்படி நடந்தால் என்ன ஆகும்?" ரமணன் கேட்டான்.

"என்ன ஆகும்? பூமி படீர் என்று வெடித்து விடும். இந்தாப்பா சர்வர். இதிலும் சர்க்கரை கம்மியாக இருக்கு."

ரமணனுக்கு ஒரு நிமிஷம் எதுவும் புரியவில்லை. புரொபசர் ஸ்பூனால் டீயை கலக்கிக் கொண்டிருந்தார். மாலை வேளையில் ஜாலியாக வந்தார் போல் காஷூவலாக இருந்தார். ரமணனுக்குச் சிரிப்பு வந்தது. வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டு "அப்பொ நாம் எல்லோரும் செத்துப் போய் விடுவோமா?" என்று கேட்டான்.

"அதை இப்பொ என்னால் உறுதியாகச் சொல்ல முடியவில்லை."

இருவரும் எழுந்து வெளியில் வந்தார்கள்.

"மறுபடியும் எப்போ சந்திக்கலாம் மிஸ்டர் கிராட்யுயேட்?"

புரொபசரின் குரலில் தென்பட்ட பிரிவு அவன் இதயத்தைத் தாக்கியிது. எந்த உலக விஷயத்திலும் பற்றில்லாத அந்த வயோதிகர் தன் மீது அன்பு வைத்திருப்பது தன்னுடைய அதிர்ஷ்டம். இந்த ஒரு மாதகாலம் அவருடன் பழகியதில் தனக்குத் தெரியாத விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறான். பூமியைப் பற்றி, நட்சத்திரங்களைப் பற்றி...

"கூடிய சீக்கிரம் உங்க வீட்டுக்கு வருகிறேன்." ரமணன் சொன்னான்.

"வருவாய் என்று எதிர்பார்க்கிறேன். மிஸ்டர் கிராட்யூயேட்! உன் எதிர்காலம் வளமாக இருக்கட்டும்."

ஆசீர்வதிப்பது போல் கைகளை உயர்த்தினார். பிறகு மெதுவாகத் திரும்பிப் போகத் தொடங்கினார். தளர்ந்த நடையுடன் சென்று கொண்டிருந்த அவரைக் கண் மறைவாகும் வரையிலும் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு வீட்டை நோக்கி நடந்தான். அவன் வீட்டை அடையும் போது இரவு ஏழுமணியாகிவிட்டது. மனதில் ஏதோ அதிருப்தி பரவியிருந்தது.

கையை அலம்பிக் கொண்டு சாப்பிட உட்கார்ந்து கொண்டான்.

"நாளைக்குப் போய்ச் சேரப் பேகிறாயா?" ஜானகி பரிமாறிக் கொண்டே கேட்டாள்.

தலையை அசைத்தான்.

"உங்க புரொபசர் என்ன சொன்னார்?"

"ரொம்ப வருத்தப்பட்டார். மறுபடியும் சீக்கிரமாகத் திரும்பி வரச் சொன்னார்."

ஜானகி சிரித்தாள். "சம்பளம் மட்டும் ஒன்றும் தர மாட்டாராமா?" என்றாள்.

ரமணன் பதில் சொல்லவில்லை. சாப்பிட்டு முடித்து விட்டுப் புத்தகத்தைப் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

பிரகாஷ் இன்னும் வரவில்லை. அவனுக்குர் பிராக்கெட் விளையாட்டுப் பைத்தியம் இருந்தது. கிளோசிங் முடியும் வரை வரமாட்டான்.

கோடை காலம் முடிந்து விட்ட போதிலும் இன்னும் மழை பெய்யத் தொடங்கவில்லை. பகல் முழுவதும் நல்ல வெயில் அடித்தது. ரமணன் படுக்கையை வராண்டாவில் போட்டுக் கொண்டான்.

நாளையிலிருந்து தானும் ஒரு உத்யோகஸ்தன். மாதம் முடிந்ததும் சம்பளம் கிடைக்கும். ஆயிரக் கணக்கில் இல்லாவிட்டாலும் இத்தனை ஹீனமாக வாழ வேண்டியதில்லை. ஏதோ தன்னால் முடிந்த உதவி. மாலதி விஷயத்தில் சீக்கிரமாக ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

தலையின் கீழே கைகளைக் கட்டிக் கொண்டு மல்லாந்து படுத்தான். குளிர்ந்த காற்று அலை அலையாக வந்து மோதிக் களைப்பைப் போக்கியது. வானம் தெளிவாக இருந்தது. நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டு இருந்தன. மினுக் மினுக்கென்று சில நட்சத்திரங்கள், பிரகாசமாக சில நட்சத்திரங்கள்...

நட்சத்திரங்கள்...

கோடிக்கணக்கில் நட்சத்திரங்கள்...

அப்படிப் படுத்துக்கொண்டே தலையை லேசாகத் திருப்பி பக்கத்தில் பார்த்தான். வடக்குத் திசையில் மற்ற நட்சத்திரங்களை விட மிகப் பிரகாசமாய் ஒரு நட்சத்திரம் ஒளி வீசிக் கொண்டிருந்தது.

பிராக்ஸிமா செஞ்சுவரி!

9

ஆகஸ்ட் ஒன்று

ரமணன் வேலையில் சேர்ந்து நான்கு நாட்கள் ஆகிவிட்டன. அன்று அவனுக்கு நான்கு நாட்களின் சம்பளம் கையில் கிடைத்தது. நாற்பது ரூபாய்கள் ரொம்ப குறைவான தொகைதான். ஆனால் அதில் எத்தனை மகிழ்ச்சி இருக்கும் என்று முதல் சம்பளம் பெற்றுக் கொண்டவர்களுக்குத் தான் தெரியும்.

நாற்பது ரூபாயில் பதினைந்து ரூபாய்க்கு கோபிக்குச் சட்டை வாங்கினான். அண்ணிக்கு என்ன வாங்குவது என்று புரியவில்லை. இனிப்புகளை வாங்கினான். அவன் முகம் மகிழ்ச்சியால் பிரகாசமாக இருந்தது. எவரெஸ்ட் மலையை ஏறிவிட்டது போல் உற்சாகமாக உணர்ந்தான்.

வீட்டுக்கு வந்ததும் சட்டைத் துணியையும், இனிப்புகளையும் அண்ணியிடம் தந்தான். மீதி பணத்தில் ஐந்து ரூபாயை மட்டும் எடுத்துக் கொண்டு மற்றதை அண்ணியிடம் கொடுத்தான்.

"உன்னிடம் இருக்கட்டுமே" என்றாள் ஜானகி.

"எப்படியும் பஸ் சார்ஜுக்கும், லஞ்சுக்கும் கேட்டு வாங்கிக்கத்தான் போகிறேன் அண்ணீ" என்றான். அவள் சிரித்துவிட்டு உள்ளே போய் விட்டாள்.

மாலை ஆறுமணி

ரமணன் உடைகளை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தான். சட்டைப் பையில் ஐந்து ரூபாய் இருந்தது. ஹோட்டலுக்கு வந்தான். புரொபசரை முதல் முதலில் சந்தித்த ஹோட்டல்.

இரண்டு கேக்குகளை வாங்கிக் கொண்டான். அதை எடுத்துக் கொண்டு பிரொபசரின் பழைய மாளிகையை நோக்கி நடந்தான். அவன் அங்கே போய்ச் சேர்ந்த போது மணி ஆறே கால் ஆகிவிட்டது.

கதவு திறந்தே இருந்தது. உள்ளே நுழைந்து கதவைப் பலமாக சாத்தினான். பிறகு தான் நினைவு வந்தது, கதவை ஓங்கி சாத்தினால் வெளியே பூட்டிக்கொண்டு விடுமென்று. மறுபடியும் திறந்து பார்த்தான். அதிர்ஷ்டவசமாக லாக் ஆகவில்லை.

அவன் உள்ளே போனபோது புரொபசர் வழக்கம் போல் பேப்பர்களை முன்னால் பரத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தார். ரமணனைப் பார்த்து விட்டு "வா... கிராட்யுயேட்... வா" என்று வர வேற்றார். "அந்த நட்சத்திரத்தைப் பற்றி இன்னும் சில விஷயங்களைச் சேகரித்து விட்டேன்."

"நட்சத்திரங்களைப் பற்றிச் பிறகு பேசுவோம். முதலில் இந்தக் கேக்கைச் சாப்பிடுங்கள். என் முதல் சம்பளத்தில் வாங்கியது" என்று கேக்கை நீட்டினான்.

"இரண்டையும் நானே சாப்பிட்டால் உனக்கு ஆட்சேபனை இல்லையே? நான் சாப்பிட்டு மூன்று நாட்களாகி விட்டது."

கண்களில் நிறைந்த நீரை அவர் பார்த்து விடாமல் ரமணன் சட்டென்று தலையைத் திருப்பிக் கொண்டு "சாப்பிடுங்கள்" தழுதழுக்கும் குரலில் சொன்னான்.

அவர் வேகமாகச் சாப்பிட்டு முடித்துவிட்டு "சொல்லு என்ன விசேஷம்?" என்று கேட்டார்.

"நீங்கதான் சொல்லணும்."

புரொபசர் காகிதங்களை ஒருமுறை பார்த்துவிட்டு "நான் சொல்வதற்கு ஏதாவது இருக்குன்னா அது அந்த நட்சத்திரத்தைப் பற்றித்தான். அதில் உஷ்ணம் அவ்வளவாக இல்லை என்று தெரிந்து விட்டது. ஏன் என்றால் கொஞ்சமாவது உஷ்ணம்

இருந்திருந்தால் நாம் இந்நேரத்திற்குச் சாம்பலாகி விட்டிருப்போம். ஈர்ப்பு சக்தியைப் பற்றி மட்டும் ஆராயணும்."

ரமணன் பேசவில்லை. அவனுக்கு இதெல்லாம் அர்த்தம் இல்லாதது போல் தோன்றியது. முன்பு என்றால் அவனுக்கு வேலையில்லை. ஆனால் இன்று வேறு வேலைகள் இருந்தன.

அவன் யோசித்துக் கொண்டிருக்கும் போதே புரொபசர் ஒரு கடிதத்தை எடுத்துக் கொடுத்தார்.

"நான் எழுதிய கடிதத்திற்கு ஒரு நகலை எடுத்து வைத்திருக்கிறேன்" என்றார்.

ரமணன் அதைப் பெற்றுக் கொண்டு படிக்கத் தொடங்கினான்.

அன்புள்ள பிரதமர் ஜெகதீஷ் சந்திரன் அவர்களுக்கு,

நான் நலம், நீங்களும் நலமாக இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். இதற்கு முன்னால் நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேன். சமீபகாலத்தில் நீங்கள் இந்தப் பக்கம் வரவே இல்லை போலும். போகட்டும். உங்களுக்கு ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல வேண்டுமென்று இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். பிராக்ஸிமா செஞ்சுவரி பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி உங்களிடம் சொல்ல வேண்டும்.

அன்புடன்
புரொபசர் குழப்பம்

பி.கு. அந்த நட்சத்திரத்திற்கு மட்டும் ஈர்ப்பு சக்தி இருந்தால் பூமி மீது இருக்கும் பொருட்கள் எல்லாம் போய் அதனுடன் ஒட்டிக் கொண்டு விடும்.

ரமணன் கடிதத்தை மடித்துத் திருப்பித் தந்து விட்டான். பயன் இல்லை. இந்தப் புத்தியில்லாத பிரொபசரின் மூளையை யாராலும் குணப்படுத்த முடியாது. பதினைந்து வயது பிராயத்தில்

இருக்கும் பெண்கள் தங்கள் அபிமான நடிகர்களுக்குக் கடிதம் எழுதுவதுபோல் இவர் நாட்டின் பிரதமருக்குக் கடிதம் எழுதுகிறார். பர்வர்ஷன் என்றால் இதுதான் போலும்.

* * *

பிரதமரின் செயலாளர் கோபால கிருஷ்ண எக்பொடே கையில் அந்தக் கடிதம் கிடைத்தது. அதைப் படித்த பிறகு அவரால் சிரிப்பை அடக்கிக் கொள்ள முடியவில்லை. பிரதமருக்கு பல விதமான கடிதங்கள் வந்து கொண்டிருக்கும். சில கடிதங்கள் கோபமாக எழுதப் பட்டிருக்கும். சிலது நாட்டின் பிரச்சனைகளைப் பற்றி, சிலது சொந்தப் பிரச்சனைகள்... வேண்டுகோள்கள்... ரொம்ப அரிதாகக் காதல் கடிதங்கள் கூட. ஆனால் இது போன்ற கடிதங்கள் வருவது மிகக் குறைவு.

அவருக்கு முன்னால் ரேக்குகள் இருந்தன. ஒன்று, முதல் காரியதரிசிக்கு போக வேண்டிய கடிதங்கள். அவற்றில் சிலவற்றை தேர்ந்தெடுத்து முதல் காரியதரிசி பிரதமருக்கு அனுப்புவார். இரண்டாவது ரேக்கில் தான் பதில் போட வேண்டிய கடிதங்களை போட்டு வைப்பார். மூன்றாவது ரேக்கில் போடப்படும் கடிதங்களுக்கு பதில் எதுவும் எழுத வேண்டிய அவசியம் இல்லை.

பிரொபசரின் கடிதம் மூன்றாவது ரேக்கை அடைந்தது.

கடிதங்களை மூன்று விதமாக பிரித்த பிறகு பைல்களில் வைக்கப்பட்டு பிரதமரின் மேஜைக்கு அனுப்பி வைப்பார்கள். முதல் பைலை மட்டும் அவர் பார்வையிடுவார். எஞ்சிய இரண்டும் அவர் விரும்பினால் திறந்து பார்ப்பார்.

இந்தக் கடிதங்களை பார்வையிட பிரதமர் தன்னுடைய தினசரி நிகழ்ச்சி நிரலில் காலை ஒன்பதிலிருந்து ஒன்பதரை வரையில் ஒதுக்கியிருந்தார்.

ஆகஸ்ட் ஒன்றாம் தேதி. காலை ஒன்பதரைக்கு அவருக்கு கட்சித் தலைவர் அவினாஷுடன் அப்பாயிண்ட் மெண்ட் இருந்தது. அதாவது கடிதங்களை பார்வையிட்ட பிறகு.

ஒன்பதரை வரையிலும் வழக்கம் போலவே அவர் முதல் பைலைப் பார்த்து முடித்து விட்டார்.

அவினாஷ் இன்னும் வரவில்லை.

சாதாரணமாக பிரதமரின் நிகழ்ச்சி நிரலின் படி சந்திக்க வேண்டியவர்கள் தாமதம் செய்யமாட்டார்கள். அப்படி ஏதாவது இருந்தால் வேறொரு விசிட்டரை அனுப்புவார்கள். இது போன்ற விசிட்டர்கள் இரண்டு மூன்று நிமிடங்களில் தங்களுடைய உரையாடல்களை முடித்துக் கொள்ள வேண்டியிருக்கும்.

ஆனால் அவினாஷுடன் மீட்டிங் ஒரு மணி நேரம் நடக்க வேண்டியிருந்தது. எதிர்கட்சி ரொம்ப பலமாக இருந்தது. ஆளும் கட்சி எந்த நிமிடத்திலும் மெஜாரிட்டியை இழந்து விடும் போல் இருந்தது. அன்று மிகவும் முக்கியமான விஷயங்களைப் பற்றி பேச்சு வார்த்தை நடப்பதாக இருந்தது.

கட்சித் தலைவர் இன்னும் வரவில்லை.

ஒன்பது முப்பத்தைந்து

சாதாரணமாக இது போன்ற சூழ்நிலை ஏற்படும்போது மக்களின் ஆர்வத்தை திசை திருப்பிவிடும் சம்பவங்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அதைப்பற்றி பேசுவதற்காகத்தான் கட்சித் தலைவர் வரப்போகிறார்.

ஒன்பது நாற்பது.

பிரதமர் அலுத்துக் கொண்டே இரண்டாவது ஃபைலை எடுத்துக் கொண்டார். இரண்டாவது செயலாளர்கள் பதில் அளிக்க வேண்டிய கடிதங்கள் அந்த பைலில் இருந்தன. சாவனீருக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் படியும், தொழிற்சாலை திறப்பு விழாவுக்கு வரச் சொல்லி அழைப்பு விடுத்தும்...

பைலை மேஜை மீது வைத்து விட்டு பின்னால் சாய்ந்து கொண்டே மூன்றாவது ஃபைலைப் பார்த்தார். ஒரு காகிதம் நழுவி வெளியில் நீட்டிக் கொண்டிருந்தது. அதில் பின்குறிப்பு தென்பட்டது.

பிரதமருக்கு பின் குறிப்பு எழுதுவதாவது? அது யாராக இருக்கும்? தெரிந்து கொள்ளும் ஆர்வத்தில் கடிதத்தை வெளியே இழுத்தார்.

"அந்த நட்சத்திரத்துக்கு மட்டும் ஈர்ப்பு சக்தி இருந்தால் பூமி மீது இருக்கும் பொருட்கள் எல்லாம் போய் அதனுடன் ஒட்டிக் கொண்டு விடும்."

ரொம்ப நேரம் அதையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார் பிரதமர்.

ஒவ்வொரு கடிதத்திற்கும் கடைசியாகப் பின்குறிப்பு எழுதும் பிரொபசரின் வழக்கமானது இந்தக் கதையை வேறு விதமாக திசைதிருப்புவதற்கு உறுதுணையாக இருந்தது. மிகவும் வேதனைமயமான திருப்பம்.

* * *

"இந்தியன் டைம்ஸ்" என்ற நாளேடு தமிழ் நாட்டிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்தது. மிகக் குறுகிய காலத்தில் அது அதிகமான விற்பனையை எட்டி விட்டது. அதற்குக் காரணம் அது பிரசுரிக்கும் அரிய செய்திகள் தான். சாதாரண விஷயங்களை கூட மிக அழகாக, படிப்பவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தும் விதமாக செய்திகளை பிரசுரித்து வந்தது.

அந்த அலுவலகத்தில் திறமையான நான்கு உதவி ஆசிரியர்கள் இருந்தார்கள். மற்ற பத்திரிகைகளுக்குக் கிடைக்காத பல செய்திகளைச் சேகரித்து பிரசுரித்து வந்தார்கள் அவர்களுக்குள் ஒருத்தி சைலஜா.

அன்று ரமணன் வழக்கம்போல் மதிய இடைவெளியில் தேநீர் குடித்து விட்டு வந்து தன் இருக்கையில் அமர்ந்து கொண்டு வேலை செய்து கொண்டிருந்தான்.

அப்பொழுது ப்யூன் வந்து டைம்ஸ் அலுவலகத்தில் யாரோ அவனுக்காகக் காத்துக் கொண்டு இருப்பதாகச் சொன்னான்.

சாதாரணமாக பத்திரிகை அலுவலகங்களில் வெளியாட்களை உள்ளே விடமாட்டார்கள். போனில் வேண்டியவர்களைக் கேட்டு தெரிந்துகொண்டு பிறகு பாஸ் கொடுத்து உள்ளே அனுப்புவார்கள்.

வந்திருப்பது யார் என்று பார்த்தால்... புரொபசர்.

"வெல்கம் டு மை ஆஃபீஸ்." மகிழ்ச்சியுடன் வரவேற்றான் ரமணன்.

பிரொபசர் எதிர் சீட்டில் வந்து அமர்ந்து கொண்டு சுற்றிலும் பார்த்தார். எல்லோரும் அவரவர் வேலைகளில் மூழ்கியிருந்தார்கள்.

"தேநீர் குடிக்கிறீங்களா?" ரமணன் கேட்டான்.

"தேநீர் முக்கியமில்லை. உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று வந்திருக்கிறேன்."

"என்ன?"

"நாம் இன்று மாலை ப்ளைட்டில் டில்லிக்குப் போகிறோம்."

* * *

சைலஜாவுக்கு நினைவாற்றல் அதிகம். பல வருடங்களுக்கு முன் நடந்த விஷயங்கள் கூட அவளுக்கு நினைவில் இருக்கும். அதான் புரொபசரை அடையாளம் கண்டு கொண்டு விட்டாள்.

அவர் இந்த அலுவலகத்திற்கு எதற்காக வந்திருக்கிறார்?

ரமணன் எதிரில் இருந்த நாற்காலியில் அவர் அமர்ந்திருப்பதைப் பார்த்து விட்டு அவளும் அங்கே சென்றாள். அவள் அங்கு போன போது ரமணனும் அவரும் எதற்காகவோ வாதாடிக் கொண்டிருந்தார்கள். "விடுமுறை கிடைக்காது" என்றான் ரமணன். எப்படியாவது அவன் வர வேண்டும் என்றும், தனக்கு அங்கே யாரையுமே தெரியாது என்று புரொபசர் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஹலோ" என்றாள் சைலஜா. "நீங்க மிஸ்டர் குழந்தைவேல் பழனி மாணிக்கம் தானே?" நாற்காலியில் அமர்ந்து கொண்டே கேட்டாள்.

"இல்லை. குழப்பம்" என்றார் புரொபசர். அவள் முறுவலித்து விட்டு "உங்க ஞாபக மறதியைப் பார்த்தாலே தெரிகிறது. நீங்க குழப்பம்தான்" என்றாள்.

"இவரை உங்களுக்குத் தெரியுமா?" ரமணன் கேட்டான்.

"ரொம்ப நாட்களுக்கு முன்னால் பேப்பரில் போட்டோவைப் பார்த்திருக்கிறேன்." என்றாள்.

"உன் நினைவாற்றலைப் பாராட்டத்தான் வேண்டும்" என்றார் புரொபசர்.

"என்ன? இந்தப் பக்கம் வந்திருக்கீங்க ஏதாவது விசேஷமா?" சைலஜா கேட்டாள்.

வந்த வேலையைச் சொன்னார் புரொபசர்.

"எனக்கு விடுமுறை கிடைக்காது. சேர்ந்து நான்கு நாட்கள் கூட ஆகவில்லை. அதற்குள் லீவ் கேட்டால் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள்" என்றான் ரமணன்.

"டில்லிக்கு ஏதற்கு?" சைலஜா கேட்டாள்.

"பிரதமர் சுயமாக வரச்சொல்லியிருக்கிறார்."

அதுவரையிலும் நாற்காலியில் சாய்ந்து கொண்டு பேசிக் கொண்டிருந்த சைலஜா இந்த வார்த்தையைக் கேட்டதும் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்தாள் "பிரதமரா?" என்றாள் வியப்புடன்.

புரொபசர் கடிதத்தைக் காட்டினார்.

அவளுக்கு ஆர்வம் கூடியது. "அசல் விஷயம் என்ன? முதலிலிருந்து எல்லாவற்றையும் விவரமாக சொல்லுங்கள்" என்றாள்.

நட்சத்திரத்தைப் பற்றியும், அது பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதைப் பற்றியும் விவரித்துச் சொன்னார். ஒரு நிமிடம் அவள் மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தாள்.

பிறகு "ஒரு நிபந்தனையின் பெயரில் ரமணனுக்கு லீவு தருகிறோம்" என்றாள்.

"நிபந்தனையா? என்ன?"

"இந்த விஷயத்தை டில்லியில் நீங்கள் எந்தப் பத்திரிகைக்கும் வெளியிட்டுவிடக் கூடாது."

"சரி. அதற்கென்ன வந்தது?" என்றார் புரொபசர். மேலும் சொன்னார். "ஒருக்கால் வெளியிட்டாலும் யாரும் நம்ப மாட்டார்கள். நான் எழுதிய ஒரு சாதாரணக் கடிதத்திற்கு இத்தனை முக்கியத்துவம் கிடைத்தது எனக்கே வியப்பாக இருக்கிறது. ஏதோ குருட்டாம் போக்கில் கணக்குகளைப் போட்டுக் கொண்டிருப்பேன்" என்றார்.

அவள் சிரித்துவிட்டு "எங்களுக்கு வேண்டியதும் அது போன்ற செய்திகள்தான். மக்கள் ஆட்டு மந்தையைப் போன்றவர்கள். இதோ புலி என்றால் அதோ வால் என்பார்கள்" என்றாள்.

அன்று மாலை போயிங்க் விமானத்தில் புரொபசரும், ரமணனும் டில்லிக்கு புறப்பட்டார்கள்.

10

மறுநாள் இந்தியன் டைம்ஸ் நாளேட்டில் ஒரு மூலையில் கட்டமிடப்பட்டு ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

> ஆகஸ்ட் 4: பூமியிலுள்ள சகல ஜீவன்களும் அழியப் போகின்றனவா? புரொபசர் குழந்தைவேலின் ஊகம் உண்மையாகும் என்றால் அந்த நாள் ரொம்ப

> தொலைவில் இல்லை. பிராக்ஸிமா செஞ்சுவரி என்ற நட்சத்திரம் பூமிக்கு சமீபத்தில் விண்ணில் ஊடுருவிச் சென்று கொண்டிருக்கிறது சில ஆயிரம் கோடி மைல் வேகத்தில் வந்து கொண்டிருக்கும் இந்த நட்சத்திரம் பூமியின் எல்லைக்கு ஆகஸ்ட் பதினேழாம் தேதி காலை பதினோரு மணி பத்து நிமிடங்களுக்கு நுழைந்து மூன்று வினாடி நேரம் வரையிலும் இருந்து எல்லையில்லாத விண்ணுக்குள் கலந்து விடுகிறது. பூமியில் இருக்கும் பொருள்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு அந்த நட்சத்திரத்தினால் ஈர்க்கப்பட்டு பூமியே பிளந்து விடும் ஆபத்து இருக்கிறது. பதினேழாம் தேதிவரையிலும் காத்திருந்து பார்ப்போம். புரொபசரின் வார்த்தை உண்மையானால் அதற்குப் பிறகு பார்ப்பதற்குத்தான் நாம் எப்படியும் இருக்கப் போவதில்லையே.
>
> எங்கள் நிருபர்.

இந்தியன் டைம்ஸ் நாளேடு மிகக் குறுகிய காலத்தில் முன்னுக்கு வந்து விட்டதைக் கண்டு பொறுக்க முடியாத மற்றொரு நாளேடு மாலை வெளியீட்டில் கீழ்க்கண்டவாறு செய்தியை வெளியிட்டது.

> "பிரபல நாளேடு ஒன்றில் வெளியான பொய்யான செய்தியை படித்துவிட்டு நகரத்தில் சஞ்சலனம். பிரளயம் வரப்போகிறது என்று அந்த நாளேட்டில் வெளியான செய்தியினால் மக்கள் பீதி அடைந்துவிட்டார்கள். இதய நோயாளிகளின் நிலைமை மேலும் மோசமடைந்துவிட்டது. இந்தச் செய்தியைக் கேட்ட பிறகு தன்னுடைய உடல்நிலை பாதிக்கப்பட்டுவிட்டதென்றும், அதற்கு நஷ்ட ஈடாக ஐம்பதாயிரம் ரூபாய்க்கு வழக்குப் போடப் போவதாகவும் ஹைகோர்ட் வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்."

இந்தச் செய்தியைப் பார்த்ததும் இந்தியன் டைமஸ் நாளேட்டில் எடிட்டர் கலவரமடைந்தார். அனாவசியமான சிக்கல்களில் மாட்டிக் கொள்வதில் அவர் விரும்பவில்லை. சைலஜாவைக் கூப்பிட்டுக் கடிந்து கொண்டார்.

மனிதனின் வாழ்க்கையின் மீது சூதாட்டம் தொடங்கிவிட்டது.

* * *

ஆகஸ்ட் நாலு. டில்லி.

பதினொரு மணிக்கு அப்பாயிண்ட்மெண்ட். ஒன்பது மணிக்கு இருவரும் செக்ரடேரியட்டை அடைந்து விட்டார்கள். ரமணனின் இதயம் வேகமாக துடித்துக் கொண்டிருந்தது. பிரதமருடன் நேரில் பேசப் போகிறான். கனவில்கூட ஊகித்திராத விஷயம் இது.

பத்து மணி ஆவதற்குக் கால்மணி இருக்கும் போது அப்பாயிண்ட்மென்ட் ஆர்டர் வெரிஃபிகேஷன் நடந்தது. நிகழ்ச்சி நிரலில் பெயர் எழுப்பப்பட்டது.

பத்தே முக்காலுக்கு விசிடர்ஸ் சேம்பரில் நுழைய அனுமதி கிடைத்தது. அந்தச் சேம்பருக்குள் நுழைய வேண்டும் என்றால் காரிடார் வழியாகச் செல்ல வேண்டும். அந்த இடத்தில்தான் விசிடர்கள் ஏதாவது ஆயுதம் கொண்டு வந்திருக்கிறார்களா என்று சோதனை நடைபெறும்.

பதினொரு மணி ஆகும் போது வரவேற்பு அறைக்குள் நுழைந்தார்கள். ஜெகதீஷ் சந்திரன் இவர்களைப் பார்த்துவிட்டு வரவேற்பது போல் தலையை அசைத்தார். ரமணன் உணர்ச்சிகளின் கொந்தளிப்பினால் மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டிருந்தான்.

அவர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த நேரம் ஐந்தே நிமிடங்கள்.

"நீங்கள்தான் புரொபசர் குழந்தைவேல் பழனி மாணிக்கமா?"

ஆமாம் என்பது போல் தலையை அசைத்தார். ஒரு நிமிடம் பொதுவாகப் பேச்சு நடந்தது.

"நட்சத்திரம் ஒன்று பூமியை நோக்கி வந்து கொண்டிருப்பதாக எப்படிச் சொல்றீங்க?" பிரதமர் கேட்டார்.

"பார்த்ததால் சொல்கிறேன்."

"எங்கே?"

"என்னுடைய டெலிஸ்கோபில்"

"உங்களிடம் டெலிஸ்கோப் இருக்கிறதா?"

"இருக்கு"

"நம் நாட்டில் மற்ற அப்சர்வேட்டரிக்கள் கண்டுபிடிக்க முடியாத விஷயத்தை நீங்க எப்படிக் கண்டுபிடித்தீங்க?"

"நம் நாட்டில் எங்கேயும் என்னிடம் இருக்கும் அளவுக்கு பெரிய டெலிஸ்கோப் இல்லை. நம் நாட்டில் மட்டும் இல்லை. இந்த உலகத்திலேயே இல்லை."

ஜெகதீஷ் சந்திரன், அவினாஷ் இருவரும் அவரை வினோதமாக நோக்கினார்கள். சிறிது நேரம் யாருமே பேசவில்லை.

"அந்த நட்சத்திரம் பூமியை நோக்கி வருவதாக ஏன் நினைக்கிறீங்க? அப்படி வந்தாலும் அது பதினேழாம் தேதி அன்றுதான் வரும் என்று என்ன நிச்சயம்?"

"கணக்குப் போட்டுப் பார்த்தேன்."

"உங்களிடம் கம்ப்யூட்டர் இருக்கிறதா?"

"என் மூளைதான் எனக்குக் கம்ப்யூட்டர்"

"என்பத்து எட்டை தொண்ணூற்றி மூன்றால் பெருக்கினால் எவ்வளவு வரும்?" அபினாஷ் சிரித்துக் கொண்டே கேட்டார்.

"எட்டாயிரத்து நூற்று என்பத்து நான்கு."

மறுபடியும் சிறிது நேரம் நிசப்தம்

"உலகத்தில் எந்த வான இயல் நிபுணரும் கண்டுபிடிக்க முடியாத விஷயத்தை நீங்க எந்தக் கருவியும் இல்லாமல் கண்டுபிடித்து இருப்பதாகச் சொல்றீங்களா?"

"நான் கண்டுபிடித்தது உண்மையாகவும் இருக்கலாம். இல்லாமலும் போகலாம். மற்ற உலகத்தைப் பற்றி எனக்குத் தெரியாது. எந்த அப்சர்வேட்டரியும் செயல்படவில்லை."

ஜெகதீஷ் சந்திரனின் நெற்றி சுருங்கியது.

"செயல்படவில்லையா?" யோசனையில் ஆழ்ந்தார்.

ஐந்து நிமிடங்கள் முடிந்து விட்டதாக பஜ்ஜர் ஒலித்தது. சந்திப்பு மேலும் கொஞ்சம் நேரம் நீட்டிக்கப்பட்டது.

ஜெகதீஷ் சந்திரன் கேட்டார். "அந்த நட்சத்திரத்திற்கு நீங்கள் சொன்னது போல் ஈர்ப்பு சக்தி மட்டும் இருந்தால் பூமியில் உள்ள பொருள்கள் எல்லாமே போய் அதனுடன் இணைந்துவிடும் இல்லையா."

"அது அந்த நட்சத்திரத்தின் ஈர்ப்பு சக்தியைப் பொறுத்து இருக்கும்."

"அப்படியென்றால்?"

"காந்தமானது இரும்புத்துண்டை ஈர்க்கிறது. அந்த நட்சத்திரத்தின் காந்த சக்தியானது தங்கத்தின் மீது அதிகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்றால் எல்லாவற்றையும் விடத் தங்கம் முதலில் பூமியிலிருந்து ஈர்க்கப்பட்டு போய் இணையும்."

"அந்த நட்சத்திரத்தின் பாதிப்பு எந்த எந்த உலோகங்கள் மீது அதிகமாக இருக்கும் என்று நீங்க நினைக்கிறீங்க?" ஜெகதீஷ் கேட்டார்.

"மன்னிக்கவும். நான் ஆஸ்ட்ரானமிஸ்ட் தான். ஜியாலஜிஸ்ட் இல்லை" என்றார் பிரொபசர். "எது எப்படி இருந்தாலும் பதினேழாம்

தேதி பதினொரு மணிக்குப் பூமிக்கு மிகவும் அண்மையில் வந்துவிடும் இல்லையா. அப்பொழுது எல்லாப் பொருட்களும் அதனால் ஈர்க்கப்பட்டு விடும்" என்றார்.

"என்னுடைய கேள்வியை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அந்த நட்சத்திரம் எதை எதை அதிகமாக ஈர்க்குமோ அந்தப் பொருள்கள் எல்லாம் பூமியை விட்டு அகன்று அதை நோக்கிச் சென்றுவிடும். உதாரணமாக அது இரும்பை அதிகமாக ஈர்க்க வல்லது என்று வைத்துக் கொள்ளுங்கள். பதினோரு மணி பத்து நிமிடங்களுக்கு முன்னரே லிதோஸ்பியரில் உள்ள 19% இரும்பு அதை நோக்கிப் போய்விடும். அதாவது பூமி பிளக்க ஆரம்பித்துவிடும். அப்படித்தானே?"

புரொபசர் ஒரு நிமிடம் யோசித்தார். "அப்படி நிகழக் கூடிய சாத்தியக் கூறுகள் இருக்குமானால்" அந்த அசைவு ஏதாவது ஒரு பொருளில் முன்னாடியே தோன்றலாம்."

"தோன்றலாம் இல்லை. தோன்றிவிட்டது." தாழ்வான குரலில் தெளிவாகச் சொன்னார் ஜெகதீஷ் சந்திரன். கேட்டுக் கொண்டிருந்த மூவரும் திடுக்கிட்டார்கள். அறையில் ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது.

"நான் சுயமாகப் பார்த்தேன். சில நாட்களுக்கு முன்னால் பெரிய பாறாங்கல் ஒன்று யாரோ தூக்கியது போல் மேலே எழும்பிக் கீழே விழுந்துவிட்டது. என் எண்ணம் என்னவென்றால் அந்தக் கல்லில் உள்ள பொருளானது அன்று முதலில் ஈர்ப்பு சக்திக்கு உள்ளாகி இருக்கும் என்று சொல்லிக் கொண்டே எழுந்தார். மேலும் சொன்னார். "அந்தப் பொருள் என்னவென்று கண்டுபிடியுங்கள். அதனால் உங்களுடைய தியரிக்கு ஏதாவது பயன்படுமா என்று பாருங்கள். உங்க ரிப்போர்ட்டை எனக்கு அனுப்புங்கள்."

இருவரும் கைகுலுக்கி விட்டு வெளியே வந்தார்கள்.

"இதெல்லாம் என்ன?" அவர்கள் போன பிறகு அவினாஷ் கேட்டார்.

"மனிதனின் வாழ்க்கைக்கு முடிவு காலம் வந்துவிட்டது என்று இந்தப் புரொபசர் சொல்கிறார். அது எவ்வளவு தூரம் உண்மையோ தெரியாது. அதுவே உண்மையாகி, இந்த மனித இனமே அழிய நேரிட்டால், அப்பொழுது இந்த அரசியல் இருக்காது. மனிதர்கள் பணத்திற்காக, புகழுக்காக, பதவிக்காக ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்ள மாட்டார்கள். ஒருக்கால் இது உண்மை இல்லை என்றால் அதுவும் நமக்கு நல்லதுதான். மக்களின் கவனம் அந்தப் பக்கமாகத் திரும்பிவிடும். மனிதனுக்கு உயிரைவிட முக்கியமானது வேறு எதுவும் இல்லை. ஒரு மாத காலத்திற்கு நாட்டில் எந்த மூலையிலும் இந்தப் பிரச்னையைப் பற்றிய சர்ச்சைகள் நடந்து கொண்டிருக்கும். ஒவ்வொரு நாளேடும் இதைப் பற்றி எழுதுவதற்கு அதிக இடத்தை ஒதுக்கத் தொடங்கும். அதற்குள் நாம் கொஞ்சம் பலத்தைப் பெற்றுவிடலாம். நம் இடத்தை உறுதியாக்கிக் கொள்ள இந்த பதினைந்து நாட்கள் போதுமானது. மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்கு இதைக்காட்டிலும் நல்ல விஷயம், இந்தச் சமயத்தில் நமக்குக் கிடைக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை" ஜெகதீஷ் சந்திரன் சொன்னார்.

கட்சித் தலைவர் முறுவலித்தார். மனிதர்களின் வாழ்க்கையின் மீது அரசியல் சதுரங்கமானது தொடங்கிவிட்டது.

11

டில்லி, ஆகஸ்ட் நான்காம் தேதி இரவு

இரண்டு கைகளையும் தலைக்குக் கீழே வைத்துக் கொண்டு, மல்லாந்து படுத்துக் கொண்டு, வானத்தை பார்த்துக் கொண்டிருந்தார் புரொபசர். பக்கத்தில் ரமணன் படுத்திருந்தான்.

நேரம் ஒன்பதாகிவிட்டது. பிரதமரைச் சந்தித்துப் பத்து மணி நேரம் தாண்டிவிட்டது.

"பாறாங்கல் காற்றில் எழும்பியது வேடிக்கையாக இருக்கிறது" ரமணன் சொன்னான்.

"இதில் வேடிக்கை என்ன இருக்கு? அதிலுள்ள பொருள் ஏதோ ஈர்ப்பு சக்திக்கு உள்ளாகி இருக்கிறது."

"அந்த விஷயத்தைப் பிரதமர் அன்றைக்கே ஏன் வெளியிடவில்லை?"

"என்னவென்று வெளியிடுவார்? நள்ளிரவில் ஒரு கல் மேலே எழும்பியதைப் பார்த்தேன் என்றா? அப்படிச் சொன்னால் எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் அவரை உயிரோடு விட்டு வைப்பார்களா? பிரதமருக்கு மூளை கலங்கிவிட்டதென்று பிரசாரம் செய்ய மாட்டார்களா?"

உண்மைதான் என்று நினைப்பதுபோல் ரமணன் பேசவில்லை.

"அவங்கவங்க கஷ்டங்கள் அவங்கங்களுக்கு. பை தி பை உனக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா?"

ரமணன் சிரித்தான் "இல்லை."

"பின்னெ பிரளயம் வந்து உலகம் முடிந்துவிட்டால் என்ன செய்வாய்?"

"பிரம்மசாரியாகவே செத்துப் போய்விடுவேன்."

"இல்லை. இல்லை. விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டபோது, இந்தப் பத்து நாட்களுக்கு நன்றாக என்ஜாய் பண்ணு. நாளைக்கே திருமணம் செய்துகொண்டு விடு."

ரமணன் மௌனமாக இருந்தான்.

"எந்த மாதிரிப் பெண் வேணும்?"

"பத்து நாட்கள்தான் எனும்போது பெண் எப்படி இருந்தால் என்ன?"

"அப்படிச் சொல்லாதே. கண்கள் தாமரைப் பூவைபோல், கழுத்து சங்குபோல் இருக்கணும்."

ரமணன் புன்முறுவல் செய்தான். அவனுக்கு மாலதியின் நினைவு வந்தது.

"இதழ்கள் வெற்றிலையால் சிவந்தாற்போல் இருக்க வேண்டும்." புரொபசர் மேலும் சொன்னார்.

"உங்களுக்கும் கவிதை வந்து..." ரமணன் முடிக்கவில்லை.

"கன்னங்கள் மாம்பழத்தைப் போல் இருக்கணும்."

"மாதுளை முத்துகளோ எனும் பற்கள்..."

"சம்பங்கிப் பூ போன்ற மூக்கு."

"கருநாகம் போன்ற கூந்தல்"

"பொட்டு - சிருங்கார திலகம்"

"தங்கச்சிலைப் போன்ற உடல்"

"முகமோ சந்திரபிம்பம்"

"சாதாரண சந்திரன் இல்லை. முழு நிலவு"

"ஆஹா..... பறந்த வானத்தில் அப்படியே...."

"இன்றைக்கு அமாவாசை." ரமணன் சொன்னான்.

"ஆஸ்ட்ரானமிஸ்ட்க்கு அமாவாசை என்றைக்கு, பௌர்ணமி என்றைக்கு என்று கற்றுத் தருகிறாயா? ஆகஸ்ட் நாலாம் தேதி..... இன்னிக்குப் பௌர்ணமி.

"பின்னெ சந்திரன் எங்கே?

புரொபசர் வானத்தை நோக்கினார்.

நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. எங்கேயும் சின்ன மேகம் கூட இல்லை. வானம் நிர்மலமாக இருந்தது. சந்திரன் மட்டும் இல்லை.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"ஆறுமணியோடு வரவேண்டிய சந்திரன் எந்தத் தாரகையோடு சரசமாட போய் விட்டான்?" புரொபசர் சிரித்துக் கொணடே சொன்னார்.

ரமணன் சிரிக்கவில்லை. இதுவரையிலும் எல்லாமே விளையாட்டாக, ஏதோ கனவில் நடப்பது போல் நிகழ்ந்தது. ஆனால் ஒவ்வொரு விபரீதத்தையும் யோசித்துப் பார்த்தால் நடப்பதெல்லாம் உண்மைதான் என்ற நம்பிக்கை தோன்றுகிறது. அந்த எண்ணம் வந்ததும் அவன் உடல் சிலிர்ந்தது. லேசாக நடுங்கியது.

"சந்திரன் என்னவானான்? பார்ப்போம்" என்று கண்களை மூடிக் கொண்டார் புரொபசர். அவர் இதழ்கள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு கண்களைத் திறந்து "என்னுடைய கணக்கு சரியாக இருந்தால் இன்று இரவு பத்தரை மணி வரையிலும் சந்திரன் வரமாட்டான்" என்றார்.

அப்போது கீழே போன் மணி ஒலிக்கும் சத்தம் கேட்டது.

புவியியல் விஞ்ஞானி மிஸ்டர் பட் போன் செய்தார்.

"ஹலோ புரொபசர்!"

"எஸ் மிஸ்டர் பட்."

"நீங்க அர்ஜெண்டாக வர முடியுமா?"

"அந்தக் கல்லைச் சோதித்துப் பார்த்தீங்களா?"

"அதைப் பற்றிப் பேசத்தான் வர்றீங்களா?"

"இப்போழுதே வருகிறேன்."

ரமணனும், புரொபசரும் சோதனைக் கூடத்திற்குள் நுழையும்போது இரவு பத்து மணி ஆகிவிட்டது.

பட் அவர்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். உள்ளே அழைத்துச் தென்றார்.

"இந்தக் கல்லில் என்னென்ன எலிமெண்ட்ஸ் இருந்தன? ரொம்ப வினோதமான விஷயம்" பட் சொன்னார்.

"சொல்லுங்கள்"

"பூமியின் மீது இருக்கும் எலிமெண்ட்ஸ்... இரும்பு, செம்பு, பித்தளை... இது போன்றவை ஒன்றுமே அதில் இல்லை. எந்த உலோகமும் இல்லை அதிலுள்ள பொருள்..."

"ஊம். பொருள்?"

"மன்னியுங்கள். என்னுடைய முப்பது வருட அனுபவத்தில் அந்த பொருள் என்னவென்று கண்டுபிடிக்க முடியவில்லை. பூமியில் கிடைக்கும் எல்லா விதமான உலோகங்களைக் கொண்டும், எலிமெண்ட்ஸுக்களைக் கொண்டும் பரிசீலித்துப் பார்த்து விட்டேன். எனக்குப் புரிபடவில்லை."

புரொபசர் குழப்பமாக மூச்சை விட்டுக்கொண்டே "டிடானியம் இருக்கா என்று பார்த்தீங்களா?" என்று கேட்டார்.

"சாரி புரொபசர். இல்லை" என்றார் பட்

"பரிசோதனை செய்து பாருங்கள். நானும் யோசிக்கிறேன்" புரொபசர் சொன்னார்.

வெளியில் வரும்போது. "மணி என்ன?" புரொபசர் கேட்டார்.

"பத்தரை" ரமணன் சொன்னான்.

"சந்திரன் வந்து விட்டானா?"

சட்டென்று தலையை உயர்த்திப் பார்த்தான் ரமணன். ஆகாயம் தெளிவாக இருந்தது. நட்சத்திரங்கள் மினுக் மினுக்கென்று ஒளி வீசிக் கொண்டிருந்தன. ஒரு மூலையிலிருந்து சந்திரன் மெதுவாக உயரே கிளம்பி வந்து கொண்டிருந்தான்.

ஏதோ யோசனை பளீரென்று மின்னியதும் புரொபசர் லேசாக நடுங்கினார்.

* * *

மறுநாள் விடியற்காலை ஐந்து மணிக்கு ரமணனுக்கு விழிப்பு வந்தது. கண்களைத் திறந்ததுமே அறையில் நடை பயின்று கொண்டிருந்த புரொபசர் தென்பட்டார். கட்டில் முழுவதும் காகிதங்கள் சிதறிக் கிடந்தன. கணக்குப் போட்ட காகிதங்கள்.

ரமணன் எழுந்து கொண்டதைப் பார்த்து விட்டு அருகில் வந்தார் புரொபசர். "இன்று நாம் ஒரு பொருளைத் திருட வேண்டும்" என்றார்.

"காலை வேளையில் பேசுவதற்கு வேறு நல்ல விஷயமே உங்களுக்குக் கிடைக்கவில்லையா?" என்றான். அவரை ஏற இறங்கப் பார்த்துவிட்டு.

"விளையாட்டு இல்லை. உண்மைதான்."

"எதைத் திருட வேண்டும்?"

"சந்திர மண்டலத்திலிருந்து கொண்டு வந்த கற்களை."

ரமணன் குழம்பினான்.

புரொபசர் சொன்னார். "உனக்கு நினைவு இருக்கா? சில வருடங்களுக்கு முன்னால் ஆர்ம்ஸ்ட்ராங்க் என்பவர் சந்திர மண்டலத்திலிருந்து கற்களைக் கொண்டு வந்தார். அந்தக் கற்களிலிருந்து அமெரிக்கா ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு பவுண்ட் எடையுள்ள கல்லை அன்பளிப்பாகக் கொடுத்தது.

தெரியும் என்பது போல் தலையை அசைத்தான் ரமணன்

"சந்திர மண்டலத்திலிருந்து கொண்டு வந்த அக்கற்களில் பூமிக்குத் தீங்கு விளைவிக்கும் பொருள் ஏதேனும் இருக்கக் கூடுமோ என்ற ஐயத்தில் ஒவ்வொரு நாடும் அவற்றை வெகு கவனமாகப் பாதுகாத்து வைத்திருக்கின்றன."

"ஏன்?"

"கேள்வி கேட்காதே. உண்மையில் எனக்கும் ஏனென்று தெரியாது."

* * *

மறுநாள் பத்துமணிக்கு அவர்கள் இருவரும் இன்ஸிட்யூட் ஆஃப் ஜியாலஜி மியூசியத்தில் இருந்தார்கள். பிரதமரின் விருந்தினர் என்பதால் அவர்களுக்குத் தனிப்பட்ட வரவேற்பு கிடைத்து. திரும்பி வரும் போது புரொபசர் தன்னுடைய லாங்க் கோட்டிற்க்கு மறைவில் சந்திரமண்டலத்துக் கற்களில் ஒரு துண்டை எடுத்து வந்தார்.

பதினோரு மணிக்கு இருவரும் ஜியாலடிஸ்ட் மிஸ்டர் பட்டின் சோதனைக் கூடத்தில் இருந்தார்கள்.

"இதோ... இதைப் பாருங்கள்" என்று கல்லை நீட்டினார் புரொபசர்.

" இந்தக் கல் எந்த இடத்திலிருந்து கிடைத்தது?" இதை வாங்கிக் கொண்டே பட் கேட்டார்.

"எங்க வீட்டுக் கொல்லையில். இதைப் பரிசோதித்து விட்டு இதிலும் அந்தக் கல்லிலும் இருப்பது ஒரே உலோகமா இல்லையா என்று பாருங்கள்" என்றார் புரொபசர்.

பட் உள்ளே போனார்.

"இதெல்லாம் என்ன?" ரமணன் கேட்டான்.

"சந்திரனிடமிருந்து கொண்டு வந்த கற்களில் ஒரு புது உலோகம் இருக்கிறது. அது பூமியில் இல்லை. நம் விஞ்ஞானிகள் அதற்கு 'ஆர்பால்கோலைட்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். அதன் பொருள் என்ன தெரியுமா?."

"தெரியாது."

"சந்திரனிடமிருந்து கற்களைக் கொண்டு வந்தது யார்?"

"நீல் ஆர்ம்ஸ்ட்ராங்க், ஆல்ட்ரின், கேலென்ஸ் மூவரும்.

''அவங்க மூன்று பேரின் பெயர்களை இணைத்து உலோகத்திற்குப் பெயர் சூட்டியிருக்கிறார்கள்: இந்தக் கல்லில் மட்டும் அந்தப் பொருள் இருந்து விட்டால்...."

"இருந்து விட்டால்?" புரியாதவன் போல் ரமணன் கேட்டான்.

புரொபசரின் முகம் வாடிவிட்டது. "நாளை இரவு தான் சந்திரனின் இறுதி நாள், நாளை மறுநாள் இரவு பன்னிரண்டு மணிக்கு அந்த நட்சத்திரத்தை நோக்கிச் சென்று ஸ்மாஷ் ஆகிவிடும்."

"எப்படி?"

"எத்தனையோ தொலைவில் இருக்கும் போதே அந்த நட்சத்திரம் பூமியின் மீது இருக்கும் இந்தக் கல்லை ஈர்த்து இருக்கிறது. ஆர்மால்கோலைட் அந்தக் கல்லில் இருப்பதாக நிரூபிக்கப்பட்டுவிட்டால் நான் சொன்னது நிச்சயமாக நடக்கும். ஏன் என்றால் சந்திரனில் அந்த உலோகம் அதான் ஆர்மால் கோலைட் இருப்பதால்," பிரொபசர் நிறுத்தினார். "நாளை மறுநாள் சந்திரனுக்கு இறுதிநாள், நாம் தெரிந்து கொள்ள வேண்டியதெல்லாம் இந்தக் கல்லிலும், சந்திரனில் இருப்பதும் ஒரே பொருள் தானா? அதுவும் இதுவும் ஒன்றுதான் என்றால் நாளை மறுநாள் சந்திரனுக்கு கடைசிநாள். அதுவே பிரளயத்திற்கு நாந்தி."

அதற்குள் உள்ளே சத்தம் கேட்டது. பட் வெளியே வந்தார். அவர் முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது.

"இரண்டு கற்களிலும் இருக்கும் உலோகம் ஒன்றேதான் பிரபொசர்" என்றார் உற்சாகத்துடன்.

12

இந்தியன் டைம்ஸ் நாளேட்டில் வெளிவந்த அச்சிறிய செய்தி மிகப் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. பூமியின் இறுதி நாள் பற்றிய கடிதங்கள், கட்டுரைகள் மறுநாளே பத்திரிகை அலுவலகத்திற்கு வந்து குவிந்து விட்டன.

உயிரின் மேல் மனிதனுக்கு எவ்வளவு ஆசை இருக்கு என்பதற்கு எடுத்துக் காட்டுவது போல் இதைப் பற்றி விசாரித்து போன் கால்கள்.

இந்தச் செய்தியை வெளியிட்ட பிரொபசரின் தகுதிகள் சாமானியமானவை இல்லை. அதைப் பற்றித் துப்புத் துலக்கிய எடிட்டர் சைலஜாவை உடனே டில்லிக்கு அனுப்பி வைத்தார்.

இது போன்ற செய்திகள் தான் பத்திரிகையின் விற்பனையை உயர்த்துகின்றன. அதிலும் எந்தப் பத்திரிகையிலும் வெளிவராத செய்தி இது.

தான் தேர்ந்தெடுத்த விஷயத்தின் மீது எட்டிடர் அக்கரை காட்டியதும் சைலஜாவின் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அன்றே அவள் டில்லிக்குப் புறப்பட்டுவிட்டாள்.

அவள் டில்லிக்குப் போய்ச் சேருவதற்குள் பிரொபசர் பூமியின் இறுதி நேரம் எப்பொழுது என்பதைக் கணித்து விட்டார். அது போலவே சந்திரன் தன்னுடைய வட்டத்தை விட்டு நகர்ந்து எப்பொழுது ஸ்மாஷ் ஆகப் போகிறான் என்றும் கணித்து விட்டார்.

முதலாவது ஆகஸ்ட் பதினேழாம் தேதி இரவு பதினோரு மணி மூன்று நிமிடம் ஐந்து வினாடிகளுக்கு.

பிரதமரிடம் தருவதற்காக ரிப்போர்ட்டைத் தயாரித்துக் கொண்டிருந்த போது சைலஜா அந்த அறைக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

ரமணன் வியப்பு அடைந்தவனாய் "இதென்ன? நீங்க இங்கே வந்திருக்கீங்க?" என்றான்.

அவள் முறுவலித்து விட்டுப் பேசாமல் இருந்தாள். பிரபொசரின் கண்கள் சிவந்திருந்தன. இரவு முழுவதும் அவர் உறங்கவில்லை, அந்தக் கல்லில் இருந்த உலோகமும், சந்திர மண்டலத்திலிருந்து கொண்டு வந்த கல்லில் இருந்த உலோகமும் ஒன்றுதான் என்று தெரிந்து கொண்ட வினாடியிலிருந்து அவர் முகத்தில் சிரிப்பு மறைந்து விட்டது. ஆனால் அது உயிரைப் பற்றிய பயத்தினால் இல்லை. அவருக்குத் தெரியும். பூமி அழிந்து விடப்போகிறது என்றும், கடவுள் என்று ஒருவர் இருந்தால் அவரால் கூட அதைக் காப்பாற்ற முடியாது என்றும்.

புதிய விஷயத்தைக் கண்டுபிடிக்கும் ஆர்வத்தில் இதுவரை உற்சாகமாகச் செயல்பட்டார். ஆனால் இறுதியில் எல்லாம் கண்டுபிடித்த பிறகு திரும்பிப் பார்த்தால்..... தான் சாதித்தது என்ன?

அழிவு.....சர்வநாசம்!!

அவருக்குச் சிரிப்பும், அழுகையும் ஒரே சமயத்தில் வந்தன. உலகப் பற்றுகளுக்கு அப்பாற்பட்டவராக இருந்த அந்த வயோதிகரின் மனதில் கலவரம் தொடங்கிவிட்டது.

"என்ன கண்டுபிடித்தீங்க?" சைலஜா கேட்டாள்.

"ரொம்ப பெரிய விஷயத்தைக் கண்டுபிடித்து விட்டோம்." ரமணனால் உற்சாகத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. "நாளை இரவோடு...."

"நிறுத்து!!" கத்தினார் பிரொபசர்.

சொல்வதை நிறுத்திவிட்டு ரமணன் அவரை வினோதமாகப் பார்த்தான்.

"இந்த விஷயம் வெளிப்படுத்தக் கூடாது" என்றார், சுருக்கம் விழுந்த அவருடைய கன்னங்கள் ஆவேசத்தினால் முறுக்கேறிக் கொண்டன. கண்கள் தீட்சண்யமாக இருந்தன. ஆவேசத்தின் மிகுதியால் அவருடைய உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. உள்ளங்கையை அழுத்தமாக மூடிக் கொண்டு "இந்த விஷயத்தை வெளியிடக் கூடாது. முக்கியமாக பத்திரிகைக்காரர்களுக்கு." இத்தனை நாட்களாக எஞ்சிய அப்சர்வேட்டரிக்கள் இந்த விஷயத்தை ஏன் வெளியிடவில்லை? அமெரிக்காவும், ரஷ்யாவும் ஏன் சொல்லவில்லை? பிரொபசருக்கு இப்பொழுது தான் புரிந்தது.

இந்த விஷயத்தை வெளியிடுவதால் வரப்போகும் லாபம்தான் என்ன? மக்கள் மனதில் பீதியை ஏற்படுத்துவதைத் தவிர. எப்படியும் சாவிலிருந்து மீள முடியாது என்ற போது அது தெரியாமல் சாவதே மேல். எல்லாம் நிசப்தமாக நடந்து முடிந்துவிட வேண்டும். தன்னுடைய பரிசோதனை தன்னுடனே சமாதியாகி விட வேண்டும் என்று ரமணனைத் தடுத்தார்.

ரமணன் அவரை நிதானமாக ஏறிட்டு நோக்கினான். ரமணனின் எண்ணங்கள் வேறு விதமாக இருந்தன. அவன் புரொபசரைத் தவறாக புரிந்து கொண்டான்.

உலகம் இன்னும் பன்னிரண்டு நாள்களில் முடிவடைந்து விடப்போகிறது. இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்து விட்டால் இந்த ஆபத்தான சூழ்நிலையிலிருந்து உலகத்தை மீட்க எல்லோரும் முன் வருவார்கள். ஒவ்வொரு விஞ்ஞானியும் தன் உயிரையும் கொடுத்து அதைத் தடுத்து நிறுத்துவதற்காகப் பரிசோதனைகளை மேற்கொள்வான். இந்தக் கிழவர் எதற்காக தன்னைச் சொல்லக் கூடாது என்று தடுக்கிறார்?

அவனுக்குச் சட்டென்று ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது.

நோபல் ப்ரைஸ்! ஆமாம் நோபல் ப்ரைஸ்.

இந்தப் பத்து நாள்களுக்குள் பாடுபட்டு எப்படியாவது இதை தானே சாதிக்க வேண்டும் என்பது இந்த பிரொபசரின் எண்ணம். ஒருக்கால் தன்னால் சாதிக்க முடியாவிட்டால், இந்த உலகம்

அழிந்து போனால், அதற்குத் தயாராக இருப்பாரே தவிர இந்த வாய்ப்பை அடுத்தவர்களுக்குக் கிடைக்க விடமாட்டார்.

'மனிதன் தான் எத்தனை சுயநலவாதி!' ரமணன் நினைத்துக் கொண்டான்.

ஒரு பக்கம் வீடு பற்றி எரியும் போது இன்னொரு பக்கம் அதிலிருந்து தனக்கு ஏதாவது ஆதாயம் கிடைக்குமா என்று கிழவர் தேடுகிறார்.

அவன் ஒரு முடிவுக்கு வந்தான். பிரொபசர் பக்கம் நேராகப் பார்த்து விட்டு "நான் சொல்லத்தான் போகிறேன். சொல்லாமல் என்னை யாரும் தடுத்து நிறுத்தி விடமுடியாது" என்று மேலும் ஏதோ சொல்லப் போனான்.

பிரொபசர் தன் பலத்தை எல்லாம் திரட்டிக் கையில் வர வழைத்துக் கொண்டு ரமணனின் வாயை பொத்த முயன்றார். ஆனால் அவருடைய பலம் போதவில்லை. ஒரே உதறலில் ரமணன் அவரைத் தள்ளி விட்டான்.

ரமணன் சைலஜா பக்கம் திரும்பி "நம் பத்திரிகைக்கு ஒரு செய்தி! யாராலும் நம்ப முடியாதது. யாரும் நம்பவில்லை என்றாலும் உண்மை அதுதான். இந்தப் பிரொபசர் எவ்வளவு திறமையானவரோ எனக்குத் தெரியும். சுயநலத்தின் காரணமாக இப்படிச் சொல்கிறாரே தவிர உண்மையிலேயே அவர் ஒரு ஜீனியஸ். அவருடைய கணக்கு பொய்யாகாது, சைலஜா! கேளுங்கள் நாளை சந்திரனுக்கு இறுதி நாள். சந்திரன் நாளை இரவு அந்த நட்சத்திரத்தின் ஈர்ப்பு சக்திக்குப் பலி ஆகப்போகிறான். இதை நம் பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளியிடுங்கள். உலகத்தின் எதிர்காலம் நாளை பன்னிரண்டு மணிக்குத் தெரிந்து விடப் போகிறது. எல்லோரையும் பார்க்கச் சொல்லுங்கள். உலகத்தைக் காப்பாற்ற எல்லோரையும் முன்னுக்கு வரச் சொல்லுங்கள்." ஆவேசமாகச் சொன்னான்.

சைலஜா வேகமாக வெளியே சென்று விட்டாள். இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த துப்புரவுப் பணியாளர் ஒருவர் அங்கிருந்து நழுவினார்.

அறையில் அமைதி நிலவியது.

அறையில் ஒரு மூலையில் விழுந்து கிடந்த கிழவர் உள்ளங்கையை ஊன்றிக் கொண்டு மெதுவாக எழுந்து கொள்ள முயன்றார். "என்ன காரியம் செய்து விட்டாய்? இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்து விட்டால் எத்தனை அல்லகல்லோலமாகி விடும்? மற்ற விஞ்ஞானிகள் இது தெரியாமலா சும்மா இருக்கிறார்கள்? இந்த பதினோரு நாளும் உலகம் தத்தளிக்கப் போகிறது. கடவுளே! இப்போ என்ன செய்வது?" புலம்பிக் கொண்டு இருந்தார்.

* * *

பதினைந்து நாட்கள் பின்னோக்கி.....

சான்பிரான்ஸிஸ்கோ.

"இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்து விட்டால்?" என்றார் வில்லியம்ஸ் ரோஜர்ஸ், யுனைடெட் ஸ்டேட்ஸ் பிரசிடெண்ட்.

யாருமே பேசவில்லை.

"மெக் உள்ளே வந்து அமர்ந்து கொண்டான். ஜான் பார்வையாலேயே மெக்கை விஷ் செய்தான். அவன்தான் அனைவரிலும் இளைஞன்.

பொழுது கொஞ்சம் கொஞ்சமாக புலர்ந்து கொண்டிருந்தது.

"என்ன விஷயம்?" மெக் தாழ்ந்த குரலில் கேட்டான்.

எல்லோரின் முகங்களும் சீரியஸாக இருந்தன. ஜான் மௌனமாக ஒரு காகிதக் கட்டை எடுத்து நீட்டினான். கிட்டத்தட்ட பத்து பக்கங்களைக் கொண்ட ரிப்போர்ட், ஒரு மூலையில்

"மௌண்ட்பலாமோர் அப்சர்வேடரி, கலிபோர்னியா" என்று இருந்தது. மெக் அவசர அவசரமாகப் பார்வையை ஓடவிட்டு அதில் எழுதியிருந்ததைப் படிக்கத் தொடங்கினான்.

படித்து முடிக்க ஐந்து நிமிடங்கள் ஆயிற்று, ப்ராக்ஸிமா செஞ்சுவரி என்ற நட்சத்திரம் பூமியை நோக்கி வந்து கொண்டு இருப்பதாக முதலில் கண்டுபிடித்தது ராயல் அப்சர்வேடரி. உடனே க்ரீன்விச்சுடன் தொடர்பு கொண்டார்கள். ஆஸ்ட்ரலாஜிகல் கருவிகள் மூலம் அது எந்த திசையில், எத்தனை வேகத்துடன் வருகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த விதமாகப் புரொபசர் குழப்பம் கண்டுபிடித்த விஷயம் அதற்குப் பதினைந்து நாட்களுக்கு முன்னரே சரியான தேதியும், நேரமும் கணக்கிடப்பட்டு விட்டது.

'ஆகஸ்ட், பதினேழாம் தேதி, பதினோரு மணி பத்து வினாடிகளுக்கு அந்த நட்சத்திரம், பூமியின் புவி ஈர்ப்பு எல்லையின் வழியாக மூன்று வினாடிகள் பயணம் செய்யும் பூகம்பத்தினுள் இருக்கும் இரும்பு, லாவா போன்றவை அதனுடைய ஈர்ப்பு சக்தியால் கவரப்பட்டு மேலே பொங்கி எழும்.

மில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்த பூமியின் மீது இருக்கும் எல்லா உயிர்களும் அடையாளம் கூட இல்லாமல் அழிந்துவிடும். அண்டத்தில் இருக்கும் கோடானு கோடி கிரகங்களைப் போலவே பூமியும் ஜீவராசியற்று விடும்.

கடல்கள் வற்றிப் போய் அதன் மீது லாவா இறுகிவிடும்.

இரண்டு பரமாணுக்களைக் கொண்ட ஆக்ஸிஜன் மூன்றாவதாகச் சேர்ந்து கொண்டு ஒரு மண்டலமாக உருவாகும்.

புவிஈர்ப்பு வட்டத்தில் அந்த நட்சத்திரம் வந்ததும் அதன் தாக்குதலால் நில நடுக்கம் ஏற்படும். எரிமலைகள் வெடித்துச் சிதறும்.'

அதற்கு மேல் மெக் படிக்கவில்லை. அவனுக்கு நிலைமை புரிந்து விட்டது.

ஆனால் அதை உண்மையென்று நம்புவதற்குக் கொஞ்சம் நேரம் தேவைப்பட்டது. எங்கேயோ லாஸ் ஏஞ்செல்ஸில் கதகதவென்று ரஜாய்க்கு அடியில் படுத்துக் கிடந்தவனை எழுப்பி, இன்னும் சில நாள்களில் உலகமே அழிந்து விடப் போகிறது என்று சொன்னால், அத்தனை சீக்கிரமாக நம்பி விட முடியாது. இதெல்லாம் கனவாக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணம்தான் மேலோங்கியது.

"இது உண்மைதானா? உண்மையிலேயே இது போல் நடக்கப் போகிறதா? அந்த நட்சத்திரம் தன் பாதையை மாற்றிக் கொள்ளும் வாய்ப்பே இல்லையா? இந்த ரிப்போர்ட்டைப் படித்ததுமே என் மனதில் தோன்றிய கேள்விகள் இவை" என்றார் ரோஜர்ஸ், "இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் ஆகஸ்ட் ஆறாம் தேதி அன்று தெரியும், எப்படி என்ற கேள்வி கேட்காதீர்கள். இந்த ஒரு விஷயம் மட்டும் ரகசியமாக வைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் அதை விட முக்கியமான பிரச்சனை 'பிரெஸ்'. இந்த விஷயம் வெளியில் தெரிந்தால் பத்திரிகைகள் தங்களுடைய சரக்யுலேஷனை உயர்த்திக் கொள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும்."

"எல்லோருக்கும் தெரிந்தால் என்ன ஆகிவிடும்?" ஃபின்ஸ் கேட்டான்.

அது வரையிலும் மௌனமாக காகிதங்களைப் பரிசீலித்துக் கொண்டிருந்த காஸ்டநோவா தலையை உயர்த்தித் தாழ்வான குரலில் சொன்னான். "என்ன ஆகி விடும் என்றா கேட்டீங்க மிஸ்டர் ஃபின்ஸ்? உயிர் எப்படியும் போய்விடும் என்று தெரிந்ததும் மனிதன் வேலை செய்வதை விட்டு விடுவான். எஃப்.ஆர்.ஐ. இருக்காது. உயிரே போகும் போது மனிதன் அடிப்படை பண்புகளை துறந்து விடுவான். போலீஸ் இருக்காது. கடந்த பதினோரு வருடங்களில் வாஷிங்க்டனில் ஐநூறு சதவீதம் குற்றங்களின் எண்ணிக்கை பெருகிவிட்டது. இந்த நாற்பது நாட்களில் அது மேலும் மூன்று மடங்கானாலும் வியப்பு இல்லை. நாள் தோறும் என்பது கொள்ளைகள் நடந்து வருகின்றன. அவை எண்ணூறாகி விடும். கற்பழிப்புக் குற்றங்கள் கணக்கில் அடங்காத

அளவுக்குப் பெருகிவிடும். என்னவாகும் என்று கேட்காதீங்க. என்ன ஆபத்து வரும் என்று கேளுங்கள். மனிதனின் பலவீனங்கள் நமக்குத் தெரியும்.

வரப் போகும் பிரளயத்தை எப்படியும் தடுத்து விட முடியாது எனும்போது அதை முன்னாடியே வெளியிட்டு இன்னும் கலக்கத்தை அதிகரிக்கச் செய்வது விவேகமற்ற செயல். அதைத் தடுத்து நிறுத்த நம்மால் முடிந்த வரையிலும் பாடுபடுவோம். ஆனால் தடுத்துவிட முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. இயற்கையின் முன்னால் மனிதன் எந்த மூலை?"

நாம் செய்யக் கூடியது ஒன்றுதான். நம் முயற்சிகளை நாம் செய்துகொண்டே உலகத்திற்கு இந்த விஷயம் தெரியாமல் தடுத்து நிறுத்த வேண்டும். அப்சர்வேடரிகளை எல்லாம் மூடிவிட வேண்டும். ஏதாவது சாக்கில் ஆஸ்ட்ரானமிஸ்டுகளை எல்லாம் அரெஸ்ட்..... அதாவது சிறைச்சாலை இல்லை, அரெஸ்ட் செய்ய வேண்டும். வரப்போகும் சாவை நினைத்துக் கொண்டே மனிதன் இறந்து போகலாம். அல்லது மனிதனுள் மறைந்திருக்கும் அரக்கன் விழித்துக் கொண்டு விஸ்வரூபமெடுக்கலாம். இவ்விரண்டையும் நம்மால் முடிந்தவரையிலும் தடுத்து நிறுத்த வேண்டும். அரக்கன் உருவாகாமல், மனிதன் சாகாமல் நாம் தடுக்க வேண்டும்."

எல்லோரும் எழுந்து கொண்டார்கள். கூட்டம் நிறைவு பெற்றது.

சாதாரணமாக நாளேடுகள் முக்கியமான இடங்களில் தினசரி கூலி என்ற கணக்கில் ஆட்களைத் தங்களுக்குச் செய்திகளை சேகரித்து தருவதற்காக நியமனம் செய்யும். அவர்கள் தெரிவிக்கும் தகவல்களைப் பொறுத்து அவர்களுடைய சம்பளம் முடிவு செய்யப் படும், இவர்களை "இன்ப்பார்மர்" என்பார்கள். அரசு மருத்துவ மனையில் டீ சப்ளை செய்யும் பையன் ஒருவன் ஒரு முக்கிய நாளேட்டுக்கு இன்ப்பார்மர் ஆக இருந்து வந்தான். யார் எங்கே அடித்துக் கொண்டு செத்தாலும், சாகப் போவதாக இருந்தாலும் மருத்துவ மனைக்குத்தானே வரவேண்டும்.

நாளேடுகளில் எந்தச் செய்தியும் உடனுக்குடன் பிரசுரமானால் தான் அதற்கு மதிப்பு. ஒரு நாள் தாமதம் ஆனாலும் அதற்கு முக்கியத்துவம் குறைந்துவிடும்.

இந்தியன் டைம்ஸ் உதவி ஆசிரியர் சைலஜா தனக்குக் கிடைத்த செய்திகளை தன் பத்திரிகைக்கு அனுப்பிக் கொண்டிருந்த அதே நேரத்தில் பிரதமரின் கெஸ்ட் ஹவுஸில் வேலையாள் உருவில் இருந்த இன்ப்பார்மர் மூலம் மற்ற பத்திரிகைகளுக்கும் இந்தச் செய்தி தெரிந்து விட்டது. உலகத்தில் எல்லா அப்சர்வேட்டர்களும் மூடப்பட்டிருப்பது, ஆஸ்ட்ரானமிஸ்டுகளுடன் பேட்டி கிடைக்காமல் போனது... எல்லாமாகச் சேர்ந்து செய்தி உண்மைதான் என்ற முடிவுக்குப் பத்திரிகைகள் வந்து விட்டன.

பத்திரிகைகளுக்கும் சில கொள்கைகள் இருந்தாலும், மற்ற பத்திரிகைகள் பிரசுரிக்கும் போது நாம் பிரசுரிக்காமல் இருந்தால் எப்படி என்ற எண்ணத்தில் எல்லாப் பத்திரிகைகளும் செய்தியை வெளியிட்டன.

சில பத்திரிகைகள் பெரிய எழுத்தில் தலைப்புச் செய்தியாக "சந்திரன் சாசுவதமாக அஸ்தமித்து விடப் போகிறானா?" "சந்திரன் இனி இருக்கப் போவதில்லையா?" என்று பிரசுரித்தால், மேலும் சில பத்திரிகைகள் இன்னும் பத்து நாள்களில் பூமிக்கு நேரப் போகும் ஆபத்தைப் பற்றி விவரமாக வெளியிட்டன. வெடித்துச் சிதறும் எரிமலையின் புகைப்படங்களை, உள்ளத்தை உருக்கும் விதமாக அழுது கொண்டிருந்த குழந்தைகளின் புகைப் படங்களை வெளியிட்டன.

உண்மையிலேயே பத்து நாள்களில் இதெல்லாம் நடக்கும் என்று யாரும் முழுவதுமாக நம்பவில்லை. ஆத்ம வஞ்சனை மகிழ்ச்சியைத் தரும்போது அதை இழக்க யாரும் தயாராக இல்லை.

எங்கு பார்த்தாலும் அதைப் பற்றிய பேச்சுக்கள்தான். ஆமாம் என்று சிலர் இல்லை என்று சிலர் வாதம் புரிந்து கொண்டிருந்தார்கள். வெளியில் கம்பீரமாகத் தென்பட்டாலும்

உள்ளுக்குள் கவலைப் பட்டார்கள். அப்படி ஆகி விடாது என்று தைரியம் சொல்லிக் கொண்டாலும், என்ன ஆகுமோ என்ற திகில் மக்களை வாட்டிக் கொண்டுதான் இருந்தது.

நேரம் ஓடிக் கொண்டே இருந்தது. மாலை ஆகிவிட்டது. இரவும் வந்தது.

அலுவலகங்களில் யாரும் வேலை செய்யவில்லை. கல் உயரே எழும்பியதைப் பிரதமர் நேரில் பார்த்த விவரம் பத்திரிகைகளில் செய்தியாக வந்து விட்டது. கற்பனையாக ஜோடிக்கப்பட்ட செய்திகளும் வெளியாகி இருந்தன.

இரவு பதினொரு மணி.

இந்தச் செய்தியை நம்பாதவர்கள் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

உள்ளூர நம்பினாலும், நம்பாதவர்களைப் போல் நடித்தவர்கள் ஏதோ ஒரு வேலை இருப்பது போல் வெளியில் வந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள் ஸ்ரீலங்காவை அடைந்தார்கள்.

பன்னிரண்டடிக்கக் கால் மணி நேரம் இருந்தது.

எல்லோர் மனதிலும் பதற்றம்!

டெலிஸ்கோப் பக்கத்தில் புரொபசர் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல் நின்று கொண்டிருந்தார்.

ரமணன் முகத்தை முழுங்காலில் புதைத்துக் கொண்டு மௌனமாக அமர்ந்திருந்தான். தான் எவ்வளவு பெரிய தவறு செய்து விட்டோமென்று புரிந்தபிறகு அவன் ஊமையாகி விட்டான்.

பன்னிரண்டு மணி ஆகப் போகிறது. எங்கு பார்த்தாலும் மக்கள் கும்பல் கும்பலாக அண்ணாந்து வானத்தை நோக்கிக் கொண்டிருந்தார்கள். நம்பிக்கைக்கும் அவ நம்பிக்கைக்கும் இடையில் மௌனப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது.

பன்னிரண்டு.

ராஜய்யா தலையை உயர்த்தி பார்த்தான். கிழவர் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தார். பிரகாஷ் வெளிறிப்போன முகத்துடன் நின்றிருந்தான். பன்னிரண்டு மணி இரண்டு நிமிடங்கள்..... நான்கு நிமிடங்கள்.....ஆறு நிமிடங்கள்.

ரமணன் மகிழ்ச்சியால் கத்தினான். "சந்திரன் அசையவே இல்லை. தி மூன் ஹேஸ் நாட் மூவ்ட்." அவன் குரல் காற்றில் எதிரொலித்தது.

பிரொபசர் முகத்தில் புன்முறுவல் மலரவில்லை. தொலைவில் மக்கள் ஆனந்தமாக, நிம்மதியாக ஆரவாரம் செய்யும் சத்தம் கேட்டது. ரமணனுக்குச் சந்தேகம் வந்தது.

மறுபடியும் வானத்தை நோக்கினான். சந்திரன் அப்படியே இருந்தான்.

ஆனால்...ஆனால், கால்பந்து போல் வட்டமாகப் பெரிதாகத் தோன்ற வேண்டிய சந்திரன், டென்னிஸ் பந்து போல் சிறியவனாகத் தென்பட்டான். மேலும் மேலும் சுருங்கிக் கொண்டிருந்தான்.

ரமணனுக்கு விஷயம் புரிந்து விட்டது.

பக்கவாட்டில் நகராமல் பின்னோக்கி நகர்ந்து கொண்டிருந்தான். அந்த நட்சத்திரத்தை நோக்கி சந்திரன் போய்க் கொண்டிருந்தான்.

கிட்டத்தட்ட இருபத்து ஐந்து மில்லியன் ஆண்டுகளாக, பூமியை மையமாகக் கொண்டு சுற்றிவந்த சந்திரன், எத்தனையோ கவிஞர்கள், காதலர்களின் எண்ணங்களுக்கு உயிரூட்டிய சந்திரன், எத்தனையோ தாய்மார்கள் தம் குழந்தைகளுக்கு விளையாட்டுக்

காட்டிய சந்திரன் மெல்ல மெல்ல எல்லை இல்லாத விண்ணை நோக்கி மறைந்து கொண்டிருந்தான்.

ஆரவாரங்கள்!

யாரோ பயந்து கத்தினார்கள். போலீஸ் வேன் சைரனை ஊதிக் கொண்டு சுற்றிக் கொண்டிருந்தது.

பத்திரிகை நிருபர்கள் வெளிநாடுகளுக்குச் செய்தி அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

மக்களின் முகத்தில் பயம்....வேதனை.

ஒரு பெண்மணி நினைவுதப்பி கீழே விழுந்து விட்டாள். சிறுவன் ஒருவன் கதறி அழுதுகொண்டிருந்தான். கண்ணால் கண்ட காட்சியை நம்ப முடியாமல் பலர் கற்சிலையாகி விட்டார்கள்.

வானத்தில் இருள் பரவியது. குங்குமப் பொட்டு இல்லாத பெண்ணின் முகத்தைப் போல் வானம் களை இழந்து தென்பட்டது. குளிர்ச்சியான ஒளியைத் தரும் சந்திரன் இனி இல்லை.

பத்து நாள்களில் பூமியும் இருக்காது.

யாரோ பெரிதாக ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்தார்கள்,

பிரளயம் ஆரம்பமாகி விட்டது.

14

ஆகஸ்ட் ஆறு

ஆகஸ்ட் ஆறாம் தேதி. இரவு பன்னிரண்டு மணிக்குச் சந்திரனைப் பிராக்ஸிமா செஞ்சுவரி நட்சத்திரம் ஈர்க்கும் சமயத்தில் பூமியில் உள்ள ஒரு இடத்தில், மாண்டினோவா தீவில் பிரம்மாண்டமான நிலவெடிப்பு நிகழ்ந்தது. மறுநாள் தான் அந்த விஷயம் வெளிச்சத்துக்கு வந்தது.

ஒரு தியரியின்படி சந்திரன் ஒரு காலத்தில் பூமியின் ஒரு பகுதியாக இருந்திருக்கிறது. தற்போது பசிஃபிக் மகா கடலுக்கு நடுவில் இருந்த இடத்திலிருந்து பிரிந்து விட்டது. அந்த இடத்தை மாண்டிநோவா தீவு என்பார்கள். சந்திரனில் உள்ள கோலைட் என்னும் பொருள் பசிபிக் கடலுக்கு நடுப்பகுதியில் இன்னும் கொஞ்சம் இருக்கிறது போலும்.

சந்திரன் நட்சத்திரத்தை நோக்கி ஈர்க்கப்பட்ட அதே நேரத்தில் அதுவும் ஈர்க்கப்பட்டு மேலே எழும்பிற்று. அதன் பலனாகக் கடலுக்கு நடுவில் இதற்கு முன் யாரும் கண்டும் கேட்டுமிராத அளவுக்குப் பெரிய நில வெடிப்பு ஏற்பட்டது.

"மௌண்ட் விஸாலின்" என்ற எரிமலை வெடித்தபோது ஏற்பட்ட விபத்தை விட இது இருமடங்கு பெரியது. கடலின் நடுவில் சிவப்பாகத் தீ உயரே எழும்பியது. அந்த ஓசை சில நூறு மைல்கள் தொலைவு வரையிலும் கேட்டது. அன்றிரவு முழுவதும் பொங்கி வரும் எரிமலைக் குழம்பிற்கும் கடலுக்கும் நடுவில் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

நில வெடிப்பு ஏற்பட்டதும் தண்ணீர் ஆவியாகி மேகமாய் மேலே எழும்பியது. நீரில் வாழும் உயிரினங்கள் செத்து நீரில் மேலே மிதந்தன. ஆவியான நீர் மேகமாய் மாறி பல மைல் தொலைவுக்கு பரவியது. அந்தச் சூடான நீரின் வெப்பம் ஆஸ்ட்ரேலியா வரை தாக்கியது. செத்துப்போன உயிரினங்கள் ந்யூஜிலாண்ட் நதிக்கரை வரையில் அடித்து வரப்பட்டன.

எல்லாவற்றைக் காட்டிலும் மனதை உருக்கும் விஷயம் என்னவென்றால், அந்த எரிமலையின் வெடிப்புக்கு டஹீட், ஹனலுலு, ஹவாய், சாலமன் தீவுகளில் வாழும் மக்கள் வாய்விட்டு அலறும் நேரம் கூடக் கிடைக்காமல் கருகிவிட்டார்கள்.

மறு நாள் இந்தச் செய்தி உலகமெங்கும் பரவியது. மக்கள் இடிந்து போய் விட்டார்கள். பிரளயம் உறுதி என்பது தெளிவாகி விட்டது.

பிராக்ஸிமா செஞ்சுவரி பூமியை நோக்கி வந்து கொண்டே இருந்தது.

இன்னும் பத்து நாள்கள்தான். சாவிலிருந்து தப்ப முடியாது என்று தெரிந்த பிறகு மனிதன் என்ன செய்வான்.

* * *

ஆகஸ்ட் ஏழு

பிரகாஷ் வீடு:

ரேடியோவில் செய்தி ஒலிபரப்பு முடிவடைந்தது. முக்கியமாகச் சந்திரனைப் பற்றி, பசிஃபிக் கடலில் நடந்த பிரளயத்தைப் பற்றி சொன்னார்கள். எல்லாவற்றையும் கேட்டு விட்டு "இதைத் தடுத்து நிறுத்த அராசாங்கம் என்ன முயற்சி செய்கிறது? அதைச் சொல்ல வேண்டாமா?" கிழவரின் குரலில் ஆத்திரமும், எரிச்சலும் கலந்திருந்தது.

"அரசாங்கத்தால் என்ன செய்ய முடியும்? நோயாக இருந்தால் மருந்தைக் கண்டு பிடிப்பார்கள். போர் என்றால் சமாதான பேச்சு வார்த்தைகளை நடத்துவார்கள். ஆனால் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கும் பிரம்மாண்டமான நட்சத்திரத்தை எப்படித் தடுத்து நிறுத்த முடியும்? அந்த நட்சத்திரம் பூமியைவிட சில நூறுகணக்கான மடங்கு பெரியதாம். "பிரகாஷ் சொன்னான். அவன் முகம் இல்லாமல் கண்கள் இடுங்கி இருந்தன.

அதற்குள் உள்ளே இருந்து ஜானகி வெளியில் வந்தாள்.

விறகுக் கட்டைகள் சரியாக எரியாமல் புகைந்ததால் அவள் கண்கள் சிவந்திருந்தன. கசங்கிய புடவை... களைத்துப்போன முகம்.

"வேலைக்காரி வரவில்லையா?" கிழவர் கேட்டார்:

"இன்னும் வரவில்லை" என்று சொல்லிக் கொண்டே வெளியில் போனாள்.

"வரவர வேலைக்காரி மட்டம் போடுவது ஜாஸ்தியாகி விட்டது." கிழவர் முணுமுணுத்தார். ஏதோ ஒன்று பேசவில்லை என்றால் நிசப்தம் மேலும் பயமுறுத்துவது போல் இருந்தது.

எப்போதும் வாகனப் போக்குவரத்துடன் சந்தடியாக இருக்கும் சாலை ஆரவாரமற்று இருந்தது.

"ஒரு முறை அஷ்டகிரகச் சேர்கைன்னு என் சிறு வயதில் வந்தது." என்றார் கிழவர்.

அதற்குள் ரமணன் வந்து விட்டான். கையில் இருந்த பையில் மளிகைப் பொருட்கள், அரிசி இருந்தன.

"இதெல்லாம் எதுக்கு?"

"அப்புறமாய்க் கிடைக்கிறதோ இல்லையோ?" என்றான் ரமணன்.

யாரும் பேசவில்லை.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் வீட்டைக் காலி செய்து கொண்டிருந்தார்கள், சொந்த ஊருக்குப் போவதற்காக.

தெரு முனையில் யாரோ வருவது போல் தோன்றவே கூர்ந்து பார்த்தாள் ஜானகி.

வேலைக்காரி லட்சுமி வீட்டைத் தாண்டிக் கொண்டு போகப் போனவளைத் தடுத்து நிறுத்தினாள்.

"என்ன லட்சுமி? வேலைக்கு வரவில்லையா?"

"இன்னும் வேலைக்கு வருவானேன்? பத்துநாள் கழித்து உலகமே இருக்காதாமே?" என்றாள்.

"அதற்காக வேலைக்கு வர மாட்டாயா?"

"அப்பொழுது பார்த்துக்கலாம், உயிரோடு இருந்தால்...!"

லட்சுமி சொன்னதைக் கேட்ட போது ஜானகிக்கு சிரிப்புதான் வந்தது.

"இந்தச் செய்தியைக் கேட்டீங்களா?" என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளே போனாள், வீட்டில் இருப்பவர்களுக்கு இந்த விஷயத்தைச் சொல்வதற்கு.

அது சிரிக்க வேண்டிய விஷயம் இல்லை என்றும், வேலை செய்வதற்கு வேலைக்காரி மறுப்பு தெரிவித்தது, சமுதாயக் கட்டுபாடுகளை மனிதன் அறுத்துக் கொள்ளும் முதல் முயற்சி என்றும் ஜானகி அந்த நிமிஷம் புரிந்து கொள்ளவில்லை.

கிராமத்தில்...

சுவாமி புத்புதானந்த பாபா புன்முறுவல் செய்தார்.

"இந்த உலகத்தை நான் காப்பாற்றுகிறேன். இரண்டு நாட்களுக்குமுன் கடவுள் என் கனவில் தோன்றி உலகம் அழியப் போவதைப் பற்றிச் சொன்னார். இவ்வளவு சீக்கிரம் ஏன் சுவாமி என்று கேட்டேன்."

"பாவங்கள் பெருகிவிட்டன. கல்கி அவதரிக்க வேண்டிய வேளை வந்துவிட்டது" என்றார்.

"கல்கி வானத்திலிருந்து இறங்கி வருவார். கடலைச் சங்காகவும், சந்திரனை சக்கரமாகவும் உருமாறி அவர் கையில் இருக்குமாம். அதனால்தான் அன்று கடல் கொந்தளித்து விட்டது. கடவுளுக்குச் சக்கிரமாக மாறுவதற்காக சந்திரன் போய்விட்டான். இனி கல்கி வர வேண்டியதுதான் தாமதம்."

பக்தர்கள் பயத்தால் நடுங்கிவிட்டார்கள்.

"இப்போ என்ன செய்யப்போகிறீர்கள் சுவாமி?" பிரதான பக்தை ஹைமவதி கேட்டாள்.

"எனக்கு இந்த விஷயம் முழுவதும் ஒரு வருடத்திற்கு முன்னாடியே தெரியும். சொன்னால் பயப்படுவீர்கள் என்று சொல்லவில்லை, நான் உங்களைக் காப்பாற்றுவேன்." புன்முறுவலுடன் சொன்னார் சுவாமிகள்.

"ஸ்ரீ புத்புதானந்த சுவாமி பாபாவுக்கு" ஹைமவதி கத்தினாள் பக்திபரவசத்துடன்.

"ஜை!" என்றார்கள் பக்தர்கள்.

கிராமம் முழுவதும் அங்கே திரண்டிருந்தது. கர்ணம், முன்சீப், ராஜய்யா, ரங்கசாமி, கர்ணத்தின் மருமகள் ஹைமவதி, தாய் பாகிரதி.....எல்லோரும்.

சுவாமிகள் அனைவருக்கும் விபூதியை வழங்கிக் கொண்டே சொன்னார். "நான்தான் கடவுள். உங்களைக் காப்பாற்றவே அவதாரம் எடுத்திருக்கிறேன். என்னை நம்பியவர்களை நான் காப்பாற்றுவேன். உங்கள் கைகளில் தாயத்துகளைக் கட்டுகிறேன். இன்னும் நான்கு நாட்களில் என்னுடைய உண்மையான பக்தர்களின் கைகளில் தாயத்து கட்டப்படும்."

'இதெல்லாம் மோசடி' என்று பெரிதாகக் கத்த வேண்டும் போல் இருந்ததை வலுக்கட்டாயமாக அடக்கிக் கொண்டார், அந்த ஊருக்குப் புதிதாக வந்த டாக்டர்.

அப்படிக் கத்தினால் கிராமமே ஒன்றாகத் திரண்டு தன்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கும், அறிவில்லாத மக்களுக்குப் புத்தி புகட்ட முயற்சிப்பதை விட மௌனமாக இருப்பதே நல்லது.

எழுந்து வெளியே வந்தார்.

"சுவாமிகளின் சன்னிதி... அதுதான் எங்களுக்கு பென்னிதி" சினிமா பாட்டு ஸ்டைலில் பக்தர்கள் பாடிக் கொண்டிருந்தார்கள்.

டாக்டர் மௌனமாக நடந்து போய்க் கொண்டிருந்தார்.

"ஏஞ்சாமி போறீங்க?" பின்னாலிருந்து ராஜய்யா குரல் கொடுத்தான்

"இங்கே இருந்து என்ன செய்வது?" பதில் சொல்லிவிட்டு டாக்டர் இருளில் மறைந்துவிட்டார்.

மழை வந்து பத்து நாள்களுக்கு மேலிருக்கும். மழையின்

ஈரம் பட்டதோ இல்லையோ தரையில் காளான்கள் முளைத்து விட்டிருந்தன.

நாடு

ஆகஸ்ட் ஆறாம் தேதி இரவு நன்றாக உறங்கியது அவினாஷ் மட்டுமே, சுகமாகக், கவலையின்றி தூங்கினார்.

சந்திரன் காணாமல் போன ரகளையில் மக்களின் கவனம் திசை திரும்பிவிட்டது. பிரளயம் வருமோ என்ற பயத்தில் அரசியலில் ஆர்வம் காட்டமாட்டார்கள். பிரளயம் வருமா வராதா என்பது வேறு கேள்வி. வந்தாலும் வராவிட்டாலும் பெரிய ஆபத்து எதுவும் இல்லை. அரசியலில் ஒவ்வொரு நிமிடமும் பிரளயம் தானே. யார் எந்த நிமிடத்தில் கட்சி மாறி விடுவார்களோ தெரியாது.

தென்னிந்தியன் பிரதமராக வரவேண்டும் என்று ஒரு பக்கம் ரகளை. கட்சி இரண்டாகப் பிளவுபடும் ஆபத்து இன்னொரு பக்கம்.

எல்லாவற்றைக் காட்டிலும் பெரிய ஆபத்து தன் கட்சி பதவிக்கு வந்ததுமே நாட்டின் கரென்ஸியின் மதிப்பு உலக மார்கெட்டில் நாளுக்கு நாள் குறைந்து கொண்டிருந்தது. ஏதாவது அற்புதம் நிகழ்ந்தாலொழிய நாட்டை யாராலும் காப்பாற்ற முடியாது. இது வரையிலும் நாடு நாசமடைந்து கொண்டிருக்கிறதே என்ற கவலை. இப்போ நம்மோடு சேர்ந்து அனைவருமே அழியப் போகிறார்கள் என்ற திருப்தி.

அதற்குள் போன் வந்தது.

செகரெட்ரியும், பிரதமரும் வந்து கொண்டிருப்பதாகத் தகவல் வந்தது. சற்று நேரத்திற்கெல்லாம் ஜெகதீஷ் சந்திரன் பரபரப்புடன் உள்ளே நுழைந்தார்.

"வாங்க. நாம் அவசரமாக ஜனாதிபதியிடம் போகணும்."

"எதற்கு?"

"வழியில் பேசிக் கொள்ளலாம்."

அவர் முகத்தைப் பார்த்து ஏதோ உபத்திரவம் நிகழ்ந்து விட்டிருக்கிறது என்று ஊகித்துக் கொண்டார் அவினாஷ்.

இருவரும் காரில் ஏறிக்கொண்டதும் கார் புறப்பட்டது. உள்ளே ட்ரான்ஸிஸ்டரில் செய்தி அறிவிப்பு ஒலித்துக் கொண்டிருந்தது.

"ஒரு முக்கிய அறிவிப்பு, ஆகஸ்ட் பதினேழாம் தேதி நிகழப் போகும் ஆபத்தை ஊகித்துக் கொண்டு, இப்பொழுதிலிருந்தே பீதி அடைய வேண்டாம் என்று பிரதமர் மக்களிடம் வேண்டுகோள் விடுக்கிறார். தம் வேலைகளை விட்டுவிட்டு இந்த யோசனைகளால் மேலும் கலவரத்தை உண்டாக்க வேண்டாமென்று எச்சரிக்கிறார். பி.பி.சி. ரேடியோ இப்பொழுதிலிருந்து மூன்று மணிக்கொரு தடவை....."

"டப்" என்ற சத்தத்துடன் ரேடியோ நின்றுவிட்டது, இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்கொண்டார்கள்.

"என்ன ஆச்சு?"

"என்னவாகும்?"

ரொம்ப சின்ன விஷயம் வானொலி நிலையத்தில் இருந்த ட்யூட்டி ஆஃபீசருக்கு ஆறு குழந்தைகள். அவர் கோவாவைச் சேர்ந்தவர், வானொலியில் இந்தச் செய்தி ஒலிபரப்பாகிக் கொண்டிருந்த போது அவருக்குத் திடீரென்று தன் மனைவி, குழந்தைகளை பார்க்க வேண்டும் போல் தோன்றியது. அடுத்த நிமிடம் அந்த விருப்பம் மேலும் திடமடைந்தது.

எதற்காக இந்த விதி, ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்? போய் விட்டால் தான் என்ன?

வேலை போய்விடும். அவ்வளவுதானே. உயிரே போகும் போது இந்த வேலை போனால் மட்டும் என்ன? அவருடைய கண்களுக்கு முன் ஆறு வயது மகள், கடைக்குட்டி தீனமான குரலில் "அப்பா! வரமாட்டாயா?" என்று அழைப்பது போல் இருந்தது.

உடனே அவர் ஒரு முடிவுக்கு வந்து விட்டவர் போல் ரிசீவரின் மெயின் சுவிட்சை அணைத்துவிட்டு வெளியே வந்து விட்டார்.

அந்த நிமிடத்திலிருந்து வானொலியின் ஒலிபரப்பு நின்றுவிட்டது.

ஜெகதீஷ் சந்திரன் பதற்றத்துடன் அவினாஷ் பக்கம் பார்த்தார். அவினாஷ் புரிந்து கொண்டாற்போல் தலையை அசைத்தார்.

இருவருக்கும் இடையே மௌனம் நிலவியது. நடந்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு நடக்கப் போவதை அவர்களால் ஊகித்துக் கொள்ள முடிந்தது.

உண்மையில் ஜெகதீஷ் சந்திரனின் மனைவியும் இந்த இறுதி நாள்களில் கிராமத்திற்குச் சென்று, தங்களுடைய மனிதர்களுடன் தங்கிவிட வேண்டும் என்று விரும்பினார். ஆனால் 'எதுவும் நடக்காவிட்டால்' பிற்பாடு எதிர்க் கட்சியினரின் ஏளனத்திற்கு ஆளாக வேண்டி வருமோ என்று அஞ்சினார் அவர்.

"உயிரே போய்விடும் போது இந்தப் பதவி எதற்கு?" என்று கேட்டாள் அவள்.

உண்மைதான். பிரதமர் என்ற பெயர்தானே தவிர வங்கியில் இருப்பு ஐயாயிரத்திற்கு மேல் இல்லை. ஒரு மாதம் முன் மனைவி பட்டுப்புடவை வாங்க வேண்டும் என்று கேட்டபோது சிக்கனத்தைப் பற்றி தான் சொற்பொழிவு ஆற்றியது நினைவுக்கு வந்தது. பிரதமர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு கிடைக்கப் போகும் ஓய்வூதியம் கூட அதிகமாக இருக்காது.

பிரதமருக்குப் பர்சனல் லோன் தருவதற்கு எந்த வங்கியும் தயாராக இருக்கும். ஆனால் அந்தக் கடனை எப்படி அடைப்பது? (வேண்டாமென்று நினைத்தால் அதை அடைக்க வேண்டிய அவசியம் இருக்கப் போவதில்லை.) ஆனால் செத்தாலும் தன்னால் அப்படி நடந்து கொள்ள முடியாது.

யோசனை மறுபடியும் சாவைப் பற்றித் திரும்பியதால் அவர் சற்றே நடுங்கினார். அருகில் வைக்கப்பட்டிருந்த பேப்பர்களின் மேல் அவர் கை பட்டது.

கார் சென்று கொண்டே இருந்தது. அவர் படிக்கத் தொடங்கினார்.

நாளேடுகளில் விதவிதமாகச் செய்திகள் பிரசுரிக்கப் பட்டிருந்தன. நாளையிலிருந்து இந்த நாளேடுகள் கூட வருமோ, வராதோ, உலகமே ஸ்தம்பித்துப் போய் விட்டது என்றால் இதுதான் போலும்.

"ஆயுள் இன்னும் ஐந்து நாள்கள்" என்ற தலைப்பில் பெரிய எழுத்துக்களுடன் செய்தி வெளியாகியிருந்தது. அதற்குக் கீழே "டில்லியில் தலைவர்கள் கூடுகிறார்கள்" என்றிருந்தது.

அவருக்குச் சிரிப்பு வந்தது.

பிரளயத்தைத் தடுத்து நிறுத்தி டில்லியில் தலைவர்கள் கூடி என்ன பண்ணி விடமுடியும்?

எந்த ஒரு சின்ன விஷயத்தையும் பெரிதுபடுத்தி சர்க்குலேஷனை உயர்த்திக் கொள்ளும் நாளேடு ஒன்று பிரளயத்தைப் பற்றிய செய்திகளை விவரமாகப் பிரசுரித்திருந்தது. விதவிதமான தலைப்புகள். அதன் கீழே வினோதமான செய்திகள்.

"கடவுளே சரணம்"

'நாட்கள் செல்லச் செல்ல மரணம் நெருங்கி வருகிறது என்ற பயத்தினால் மக்கள் நடுநடுங்கிக் கொண்டு இருக்கிறார்கள். பலகீன இதயம் படைத்தவர்கள் தினமும் செத்துப் பிழைத்து வருகிறார்கள்.'

இன்னொரு இடத்தில் வேறு விதமான செய்தி இருந்தது.

"ராம்நாம ஜெபம்"

'இன்று முதல் ஐந்து நாள்கள் தொடர்ந்து ராமநாமத்தை ஜெபித்து வருபவர்களை அந்த நட்சத்திரம் எதுவும் செய்யாது என்று திரு பாகவதர் தெரிவிக்கிறார்.

பூனாவைச் சேர்ந்த பிரபல ஜோதிட நிபுணர் ஒருவர் V,E,U,N, என்ற ஆங்கில எழுத்துக்களைத் தங்களுடைய பெயரில் கொண்டவர்கள் சாவிலிருந்து தப்ப முடியாது என்று சொல்கிறார்.

பிரதமருக்குச் சிரிப்புத்தான் வந்தது. இந்த நாலு எழுத்துக்களில் ஏதோ ஒன்று இல்லாமல் எப்படி இருக்கும்? இந்தப் பத்திரிகைக் காரர்களுக்குக் கொஞ்சம் கூட மூளை இல்லை. ஏற்கனவே மக்கள் பயந்து சாகும் போது இது போன்ற செய்திகளை பிரசுரிக்கலாமா?

இவர்களுடைய மொராலிடி என்னவாச்சு?

தவறு தன் மீதும் இருக்கிறது. பத்து நாட்களுக்கு முன்பே ஆர்டினென்ஸ் மூலமாக இந்தப் பத்திரிகைகளைக் கண்ட்ரோல் செய்திருக்க வேண்டும். இப்பொ வருந்தி என்ன பயன்? ஜெகதீஷ் சந்திரன் கவலையாக உணர்ந்தார்.

அவர்கள் ஜனாதிபதி இருப்பிடத்திற்குப் போய் சேரும் போது மணி எட்டாகி விட்டது. ஏற்கனவே அங்கே மற்றவர்களும் வந்து சேர்ந்து விட்டிருந்தனர். ஐந்து ஏரியாக்களைச் சேர்ந்த லெப்ட்னென்ட் ஜெனரல்ஸ் (ஆர்மீ), சீஃப் ஆஃப்தி நேவல் ஸ்டாஃப், மார்ஷல் ஆஃப் தி ஏர் போர்ஸ், எல்லோரையும் விட உயர்ந்த பதவி சுப்ரீம் கமேண்டர் ஆஃப்தி ஆர்ம்ட் ஃபோர்ஸெஸ்.... இந்திய ஜனாதிபதி, இவர்கள் போனதும் கூட்டம் தொடங்கியது.

பிரச்சனை ரொம்ப சின்னது. ஆனால் விளைவுகள் ஊகிக்க முடியாதவை.

படைவீரர்களில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய வீடுகளுக்குப் போய் விட வேண்டும் என்று நினைக்கிறார்கள். பிரச்னையே அதுதான். இந்த பத்து நாள்களும் தங்களுடைய மனைவி, மக்களுடன் கழித்து, மரணத்தை குடும்ப சமேதமாக வரவேற்க நினைக்கிறார்கள்.

அந்த ஹாலில் இருந்தவர்களின் முகங்கள் கம்பீரமாக இருந்தன. படை வீரர்கள் கட்டுப்பாடான பயிற்சியை மேற்கொண்டவர்கள் என்பதால், தங்களுடைய விருப்பத்தை மேலதிகாரிகளிடம் தெரிவித்துக் கொண்டார்கள், சில நாடுகளில் அதற்குள் போர் வீரர்களிடம் சலசலப்பு தோன்றி பலர் 'காணாமல்' போய் விட்டார்கள்.

கூட்டம் ரொம்ப நேரம் நடந்தது. வரப்போகும் பத்து நாட்களும் எப்படி இருக்குமோ தெரியாது. எப்போ என்ன தேவை வருமோ தெரியாது. அதற்காகப் படைவீரர்களை கட்டாயப்படுத்தி தடுத்து நிறுத்தி விட முடியாது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

கேப்டனும் அதற்கு மேல் மட்டத்தில் இருக்கும் அதிகாரிகள் மட்டும் இருந்தாக வேண்டும். மற்றவர்கள் ஆகஸ்ட் பன்னிரண்டாம் தேதிக்குப் பிறகு போய்விடலாம்.

இரவு பத்து மணிக்குக் கூட்டம் முடிவடைந்தது.

இங்கே இது முடிவடையும் நேரத்தில்.....

* * *

உலகம்

லிபியாவின் தலைநகர் ட்ரிபோலில் ஒரு ரகசியக் கூட்டம் நடைபெற்றது.

இரான், சிரியா, யமென், சூடான், ஜோர்டான் நாடுகளின் பிரதமர்கள் இதில் பங்கேற்றார்கள்.

இத்தனை பேர் ஒரு இடத்தில் கூடினார்கள் என்றால் எல்லோரின் லட்சியமும் ஒன்றுதான்.... இஸ்ரேல்.

ஜெரூஸலம் என்றால் "சாந்தி நிலையம்" என்று பொருள். ஆனால் அதென்ன வேடிக்கையோ, அந்த நகரத்தில் 'சாந்தி' ஒருநாளும் இருந்தது இல்லை. கி.பி.70ம் ஆண்டில் ரோமன்கள் அதை அழித்தார்கள். சுமார் பத்து லட்சம் யூதர்களை நிர்தாட்சிண்யமாகக் கொன்று குவித்தார்கள். மூன்றடுக்கு மாளிகைகளிலிருந்து பச்சிளம் குழந்தைகளைச் சாலையில் வீசியெறிந்தார்கள். ஜெரூஸலத்தில் யூதர்களின் பிரவேசம் தடை செய்யப்பட்டது.

இது நடந்து ஆயிரத்துத் தொள்ளாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு இஸ்ரேலுக்கு விமோசனம் கிடைத்தது. இதற்கு இடைப்பட்ட காலத்தில் அந்நகரம் நாற்பத்தாறு முறை போர் தாக்குதலுக்கு இலக்காகிவிட்டது. முகம்மது நபி சுவர்க்கத்திற்குச் சென்றது இவ்விடத்திலிருந்துதான் என்பது முஸ்லிம்களின் நம்பிக்கை. மெக்கா மதினாவுக்குப் பிறகு முஸ்லிம்களுக்கு இதுதான் புனிதமான இடம்.

கிருஸ்துவைச் சிலுவையில் ஏற்றிய இடமும் இதுதான். அதனால்தான் கிருஸ்துவர்கள் இதை "தேவன் தன் பெயரை எழுதிய நகரம்" என்று வழிபட்டு வந்தார்கள்.

1948ல் பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து இஸ்ரேல் சுதந்திரம் பெற்ற சில மணி நேரத்திற்குள்ளேயே சுற்றிலும் இருந்த எட்டு அரபு நாடுகளும் ஒன்றாகச் சேர்ந்து படையெடுத்து வந்து அதை நிர்மூலமாக்கி விட முயன்று தோல்வியுற்றன.

யூதர்களின் கோவிலும், முஸ்லிம்களின் மசூதியும் உள்ள "டும் ஆஃப் தி ராக்" பூமியின் மேல் மனிதர்கள் இருக்கும் வரையிலும் பிரச்னை நீடித்துக் கொண்டேதான் இருக்கும் என்பது அறிஞர்களின் ஊகம்.

15

சூடான் நாட்டுக் கமேண்டர் இன் சீஃப் "இந்த இறுதி காலத்தில் ஜெரூஸலத்தை வெற்றி - கொள்ளா விட்டால் கடவுள் நம்மை மன்னிக்க மாட்டார்" என்றார்.

ஈஜிப்ட் ஜனாதிபதி ஒரே வார்த்தை தான் சொன்னார். "இஸ்ரேல் கடலுக்குள் மூழ்கடிக்கப்பட வேண்டும்."

எல்லோரும் மகிழ்ச்சியுடன் ஆரவாரித்தனர். ஐந்து நிமிடங்கள் கழித்து ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

"உலகத்தின் இறுதிநாளை மகிழ்ச்சியோடு கொண்டாடுவதற்காக நாம் எல்லோரும் ஜூரூஸலத்தில் கூடுவோம். ஜூரூஸலத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், புனித இடத்தை இந்தக் கடைசி நாட்களில் நம் ஆதினத்தில் வைத்துக் கொள்வதற்காக உயிரையும் கொடுப்போம். போர் தொடுப்போம்."

எல்லோரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்கள்.

உலக அரசியலின் போக்கு இவ்வாறு மாறிக் கொண்டிருக்கையில் இன்னொரு பக்கம் சமுதாய ரீதியான மாற்றம் வேறுவிதமாக இருந்தது.

போதை மருந்துகள் மனதளவில் பலவீனப்படுத்தும் அமெரிக்காவில் சுமார் ஒன்றரை கோடி மக்கள் போதை மருந்து பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பதாகக் கணக்கெடுப்பில் தெரியவந்தது. உலகம் அழியப் போகிறது என்று தெரிந்ததும் அது மூன்று கோடிக்கு உயர்ந்தது.

பூமி பிளந்தாலும் மலையின் உச்சிப்பகுதி பாதுகாப்பானது என்ற நம்பிக்கையை சில விஞ்ஞானிகள் வெளியிட்டார்கள். அந்தப் பேச்சை நம்பியவர்கள் பத்து நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை மூட்டை கட்டிக் கொண்டு காஞ்சன கங்கா, மௌன்ட் ப்ளாக், ஆல்பஸ் முதலிய மலைகளை நோக்கிச் சென்றார்கள். ஆனால் உலகத்திலேயே உயர்ந்த மலைகளான இவை அடுத்த இரண்டு நாள்களில் பிளந்து விட்டன. போனவர்கள் உயிரோடு சமாதியாகி விட்டார்கள், நிசப்தமாய்.... எஞ்சிய உலகம் காணமுடியாதவாறு.

* * *

ஆகஸ்ட் பன்னிரண்டு

புரொபசர் குழப்பம் தன்னுடைய வீட்டில், அறையினுள் யோசித்துக் கொண்டிருந்தார். டீபாயின்மீது கோப்பையில் டீ டிகாஷன் இருந்தது. அது ஆறிப்போய் இரண்டு மணி நேரமாகி

விட்டது. அவர் எதையும் பொருட்படுத்தாமல் யோசித்துக் கொண்டே இருந்தார். கிட்டத்தட்ட எழுபத்து இரண்டு மணி நேரமாய் ஒரே யோசனைதான்.

பதினேழாம் தேதி பதினோரு மணி பன்னிரண்டு நிமிடங்களுக்கு மூன்று வினாடி நேரம் பூமியை அந்த நட்சத்திரத்தின் ஈர்ப்பிலிருந்து தப்பிக்கச் செய்வது எப்படி?

புரொபசருக்கு முன்னால் ஒரு காகிதம் இருந்தது. அதையே வெகு நேரம் பரிசீலித்துக் கொண்டிருந்தார்.

கதவு தட்டிய சத்தம் கேட்டது.

ரமணன்!

"ஆஃபீசுக்குப் போகவில்லையா?" என்று கேட்டார். ரமணன் ஒரு நிமிடம் வியப்படைந்தாலும் உடனே சமாளித்துக் கொண்டான்.

"நீங்க வெளியே வந்து எத்தனை... நான்கு நாட்கள். இப்பொழுதுதான் வெளியே போகலாம்னு நினைத்துக் கொண்டிருந்தேன். வீட்டில் எதுவுமே இல்லை."

"வெளியிலும் எதுவும் கிடைக்காது. ஒருமுறை வெளியில் வந்து பாருங்கள், எல்லா இடமும் மயானம் போல் காட்சியளிக்கிறது."

புரபொசர் ஒரு நிமிடம் பேசவில்லை.

ரமணன் மேலும் சொன்னான்.

"இறுதி நாட்களை எங்கப்பா காசியில் கழிக்க வேண்டும் என்று விரும்பினார். விசாரித்தால் ரயில்கள் ஓடுவதை நிறுத்தி இரண்டு நாட்களாகிறதாம்."

"உலகமே ஸ்தம்பித்துப் போய் விட்டது போலிருக்கு."

"அப்படி இல்லை." ரமணனின் குரல் கம்பீரமாக ஒலித்தது. "மனிதனில் அரக்கத்தனம் நாளுக்கு நாள் அதிகரித்து விட்டது,"

"அப்படி என்றால்?"

குண்டர்கள் அழகான பெண்கள் இருக்கும் வீடுகளில் புகுந்து கற்பழிக்கிறார்கள். உணவுப் பொருள்களைக் கொள்ளை அடிக்கிறார்கள். தட்டிக் கேட்பவர்கள், தடுப்பவர்கள் யாருமே இல்லை என்பதால் ராட்சஸத்தனம் வளர்ந்து விட்டது. சாவு நிச்சயம் என்று தெரிந்ததும் மனிதன் எல்லாவற்றுக்கும் துணிந்துவிட்டான். இந்த இருளில் ஒரே ஒரு ஒளிக்கீற்று தென்படுகிறது. அதான் பாவத்திற்கு அஞ்சி பணக்காரர்கள் செய்யும் தான தர்மங்கள்.

"பாவத்திற்கு அஞ்சுவதா?"

"ஆமாம். அந்தப் பயம் தான் பல விஷயங்களை வெளிப்படுத்துகிறது. சேட்டு ஒருவர் தலைமுறை தலைமுறையாக நியாயமற்ற வழிகளில் சம்பாதித்து வைத்திருந்த சொத்தைத் தங்கமாகப் பதுக்கி வைத்திருந்தார். உலகம் அழியப் போகிறதென்று தெரிந்த பிறகு பயந்து போய் தன்னுடைய மூன்றடுக்கு மாளிகையின் மொட்டை மாடியிலிருந்து தங்கக் காசுகளை இறைந்து விட்டு பைத்தியமாகி விட்டார்."

"பிரளயத்தைத் தவிர்க்க முடியாதுங்கிற நம்பிக்கை மக்களின் மனதில் அத்தனை அழமாகப் பதிந்து விட்டதா?"

"சாதாரணமாக இருந்தால் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கும் இடையே ஊசலாடிக் கொண்டு இருப்பார்கள். இப்போ கண்ணெதிரில் தரை வெடித்ததைக் கண்டுவிட்டதால், இனி தம்மை யாராலும் காப்பாற்ற முடியாது. என்று உறுதியாக நம்பத் தொடங்கி விட்டார்கள்."

புரொபசர் திடுக்கிட்டு "தரை வெடித்து விட்டதா?" என்று கேட்டார்.

ரமணனுக்கு அலுப்புத் தட்டியது. "ஒரு முறை வெளியே வந்து பார்த்தால் நடைபெற்றுக் கொண்டிருக்கும் முறைகேடுகளை கண்ணாரக் காணமுடியும்" என்றான்.

"இல்லை... இல்லை... இங்கேயே இருந்து ஏதாவது செய்யணும். ஏதாவது செய்து உலகத்தைக் காப்பாற்ற வேண்டும்."

ரமணன் புரொபசரை இரக்கமாக பார்த்தான். சூறாவளி காற்றுபோல் வேகமாக வந்து கொண்டிருக்கும் அந்த நட்சத்திரத்தை இந்த அற்ப பிராணியால் எப்படி தடுக்கமுடியும்?

எழுந்து கொண்டு "போய் வருகிறேன்" என்றான்.

"இதற்குள்ளாகவா?" என்றார்.

"முறை போட்டுக் கொண்டு காவல் காத்து வருகிறோம்."

புரொபசர் வியப்புடன் பார்த்து விட்டு "எதற்கு?" என்றார்.

"எதற்காகவா?" உயிரற்ற சிரிப்பை உதிர்த்தான் ரமணன். "அரசாங்கம் முற்றிலும் செயலற்றுப் போய் விட்டதால். மக்களை மக்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதால்."

புரொபசர் எழுந்து கொண்டே "இங்கேயே இப்படி இருந்தால் மற்ற நாடுகளில் எப்படி இருக்கும்?" என்று கேட்டார்.

"தெரியாது."

"ஏன்?"

"வானொலி நிலையங்கள் செயல்படுவதை நிறுத்தி விட்டு இரண்டு நாள்களுக்கு மேல் ஆகி விட்டது,"

புரொபசர் கற்சிலையாக நின்றுவிட்டார்.

"போய் வருகிறேன்" என்றான் ரமணன்.

புரொபசர் மௌனமாக இருந்தார்.

ரமணன் எழுந்து வெளியில் வரும் போது கதவைப் பலமாகச் சாத்திவிட்டு முன்னோக்கி நடந்தான். உள்ளே புரொபசர் மறுபடியும் கணக்குப் போடுவதில் மூழ்கி விட்டார்.

கதவைப் பலமாகச் சாத்தியபோது ஆட்டோமேடிக் தாழ்ப்பாள் பூட்டிக் கொண்டு விட்டது. இந்த விஷயம் வெளியில் இருந்த ரமணனுக்கோ உள்ளே இருந்த புரொபசருக்கோ தெரியாது.

* * *

அன்று நன்றாக இருட்டிய பிறகு பெருத்த ஓசைகள் கேட்டன. கதவைச் சாத்திக் கொண்டு வீட்டுக்குள் உட்கார்ந்திருந்தவர்கள் கூச்சலிட்டுக் கொண்டே வெளியே வந்தார்கள். முன்னைவிட இப்பொழுது அதிகமாக பூமி பிளக்கத் தொடங்கியது. சளசளவென்று சத்தமிட்டுக் கொண்டு இரண்டாகப் பிளந்து கொண்டது. அந்த எல்லைக்குள் இருந்த வீடுகள், மரங்கள் பூமிக்குள் புதைந்துவிட்டன. கத்தலும்....கூச்சலும்..... இன்னும் ஐந்து நாட்களுக்குப் பிறகு வரவேண்டிய பிளயம் அன்றே வந்து விட்டாற்போல் இருந்தது.

சுமார் பத்து வினாடிகளுக்குப் பிறகு அமைதியாகி விட்டது.

பதினொருமணி இரண்டு நிமிடங்கள்.

நேற்றும் அதே நேரத்திற்கு,

ஆனால் இத்தனை நடந்த பிறகும் கலங்காமல் பீதி அடையாமல் இருந்தவர்கள் அந்தக் கிராமத்து மக்கள்தான். சுவாமிகள் அந்தக் கிராமத்தை மட்டும் காப்பாற்றுவதாக வாக்களித்து இருந்தார். தொடர்ந்து பிரார்த்தனைகள் நடந்து வந்தன.

ராஜய்யாவும் தன்னால் முடிந்த பொருளோ பணமோ சுவாமிகளுக்குச் சமர்ப்பித்துக் கொண்டான். திரும்பி வரும்போது யாரோ இரு நபர்கள் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது. ஒருவன் பூஷணம். இன்னொருவன் முன்சீப். பேச்சில் தன்னுடைய பெயர் அடிப்பட்டதைக் கேட்டு ராஜய்யா நின்றுவிட்டான். மரத்தின் பின்னால் மறைவாக நின்றிருந்தவனை அவர்கள் கவனிக்கவில்லை. அவனைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"ராஜய்யாவின் நிலத்தை நாம் சுவாதீனப்படுத்திக் கொள்ளாமல் ரங்கசாமி தடுத்து நிறுத்தப் போகிறானாம்." பூஷணம் சொன்னான்.

"ரங்கசாமி அவ்வளவு பெரியவனாகி விட்டானா?" முன்சீப் மீசை முறுக்கிக் கொண்டே கேட்டார்.

"எப்படியாவது நம்மை வீழ்த்த வேண்டும் என்று பார்க்கிறான்" பூஷணம் சொன்னான்.

"அவனுடைய பக்கபலம் இருப்பதால்தான் ராஜய்யா திமிராகப் பேசுகிறானா?"

பூஷணம் பதில் சொல்லவில்லை.

"சரி, ரங்கசாமியால் என்ன செய்ய முடியுமோ பார்த்துவிடலாம். அவன் கண்முன்னாடியே அந்த ராஜய்யாவை மரத்தில் கட்டிப் போட்டுத் தீயிட்டு கொளுத்துவோம். என்ன செய்வான் பார்க்கலாம்."

கேட்டுக் கொண்டிருந்த ராஜய்யாவின் முதுகுத் தண்டு சில்லிட்டது. மோதிக் கொண்ட இரண்டு யானைகள் நடுவில் மாட்டிக் கொண்ட முயலைப் போல் நடுநடுங்கி விட்டான்.

வேகமாக ஓடினான். எங்கேயும் நிற்காமல் நேராக ரங்கசாமியின் முன்னால் போய் நின்றான். ஓடிவந்ததில் மூச்சு இரைத்தது. விஷயம் முழுவதும் கேட்டுவிட்டு ரங்கசாமி மீசையை முறுக்கினான்.

"அவ்வளவு தைரியம் வந்து விட்டதா அவர்களுக்கு?"

ராஜய்யாவுக்குப் பயத்தினால் பேச்சு வரவில்லை.

"சரி அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்." தைரியம் தருவது போல் சொன்னான் ரங்கசாமி.

தொலைவிலிருந்து பக்தர்கள் "மமு ப்ரோவரா" என்று கோரஸாகப் பாடிக் கொண்டிருந்தார்கள்.

ஆசிரமத்தில் சுவாமிகள் சேஷசயனத்தின் மீது விஷ்ணு பகவானைப் போல் பள்ளிக்கொண்டிருந்தார். அங்கே இருந்த பக்தர்களின் கைகளில் தாயத்துக்கள் கட்டப்பட்டிருந்தன. தொடர்ந்து பூஜைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

டாக்டர் படியிறங்கி வந்துகொண்டிருந்த போது ரங்கசாமி எதிர்ப்பட்டு வணக்கம் தெரிவித்தான்.

"எங்கேயோ கிளம்பறீங்க போலிருக்கு." வீட்டின் முன் இருந்த ஸ்கூட்டரைப் பார்த்துக் கொண்டே ரங்கசாமி கேட்டான்.

"இந்தக் கடைசி ஐந்து நாள்களும் நிம்மதியாகக் கழிக்கலாம் என்று பட்டணத்திற்குப் போகிறேன் ரங்கசாமி.'' டாக்டர் சொன்னார்.

"என்ன சார்? இந்த கிராமத்திற்கு வந்து தங்கவேண்டும் என்று எல்லோரும் தவிச்சுகிட்டு இருக்கும் போது நீங்க மட்டும் போறீங்களே?"

"இந்தக் கிராமத்துக்கா?" புரியாதவராய்க் கேட்டார்.

"ஆமாம், உலகமெல்லாம் அழிஞ்சிடப் போவுது. இந்தத் தாயத்தைக் கட்டிக் கொண்டவர்கள் மட்டும்தான் பிழைச்சிருப்பாங்க."

டாக்டருக்கும் அவனைப் பார்த்தால் பரிதாபமாக இருந்தது. கிராமத்தை விட்டுப் போய்க் கொண்டிருந்த டாக்டரைப் பார்த்து ரங்கசாமிக்கு இரக்கம் ஏற்பட்டது.

அப்பாவியைப் பார்த்து ஞானி எப்படி இரக்கப் படுவானோ, ஞானியை பார்த்து அப்பாவியும் அதே அளவுக்கு இரக்கப்படுவான்.

டாக்டர் மௌனமாக ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்தார். கடைசி தடவையாக இத்தனை நாட்களாகத் தான் வசித்து வந்த வீட்டைப் பார்த்துவிட்டு, வண்டியை வேகமர்கச் செலுத்தினார்.

ஊரைத் தாண்டும் போது கோவில் தென்பட்டது. ஸ்கூட்டரின் இஞ்சினை அணைக்காமலேயே வண்டியை நிறுத்தி ஒருமுறை அந்தப் பக்கம் பார்த்தார்.

மக்கள் சுவாமிகளைச் சூழ்ந்து கொண்டு பஜனை செய்து கொண்டிருந்தார்கள். பக்தி பரவசத்தில் மூழ்கியிருந்தார்கள். பிரளயத்தை வென்றுவிட்ட மகிழ்ச்சி அவர்களுடைய முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. சாவு தம்மை நெருங்கக் கூட முடியாது என்ற நம்பிக்கையில் மகிழ்ச்சியுடன் உச்சஸ்தாயில் பஜனை செய்து கொண்டிருந்தார்கள்.

டாக்டருக்கு ஒரு விஷயம் புரிந்தது.

அங்கே சுவாமிகள் முக்கியம் இல்லை.

நம்பிக்கை!

அதுதான் கோட்டையை போல் அவர்களைக் காப்பாற்றுகிறது. ஐந்து நாட்கள் அவர்கள் அந்த நம்பிக்கையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். பிறகு செத்துப் போவார்கள். அது வேறு விஷயம். தனக்கு இருக்கும் மனப் போராட்டம் அவர்களுக்கு இல்லை. சாவு நெருங்கிக் கொண்டிருக்கிறது என்ற பயமோ, கவலையோ இல்லை. பக்தி அவர்களைக் காப்பாற்றுகிறது. அதன் நிழலில் அவர்கள் பாதுகாப்பாக இருக்கிறார்கள்.

அஞ்ஞானம் மனிதனைக் காப்பாற்றுகிறது.

தன்னால் அதை நம்பமுடியாது. நம்ப முடிந்தால் போதும். எந்த மன உளைச்சலும் இருக்காது.

தன்னுடைய யதார்த்த வாதத்தை எடுத்துச் சொல்லி அவர்களுடைய மகிழ்ச்சியை ஏன் கெடுக்க வேண்டும்? அப்படிச் செய்வதற்குத் தனக்கு என்ன உரிமை இருக்கிறது?

டாக்டர் ஸ்கூட்டரில் பயணத்தைத் தொடர்ந்தார்.

இன்னும் ஐந்து நாள்கள் மகிழ்ச்சியை, வேதனையைப் பகிர்ந்து கொள்ள அவருக்கு யாருமே இல்லை. இந்த ஐந்து நாள்களும் நிம்மதியாக, சந்தோஷமாகக் கழிக்க வேண்டும். எங்கிருந்து கிடைக்கும் அந்த நிம்மதி? What is the best way of spending the last five days of the human life?

அவர் நகரத்திற்குள் நுழைந்தார். அது நகரமாகத் தென்படவில்லை. பாழடைந்த மயானம் போலிருந்தது. தெருக்களில் மக்கள் நடமாட்டம் இருக்கவில்லை. சில வீடுகள் முதல் நாள் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இடிந்து கிடந்தன. பெரிய ஹோட்டலுக்கு முன் ஸ்கூட்டரை நிறுத்தி உள்ளே நுழைந்தார். கௌண்டரில் யாருமே இல்லை. சர்வர்களும் இல்லை. தின்பண்டங்கள் எல்லாம் தரையில் சிதறிக் கிடந்தன.

ஸ்டார் ஹோட்டல் அது

படிகளை ஏறிமாடிக்குப் போனார். முதல் மாடியில் ஏ.சி. அறைகள் இருந்தன. மின்சாரம் இல்லாவிட்டாலும் யாரோ ஜெனரேட்டரை இயக்கி இருக்க வேண்டும். மெலிதாகச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

வராண்டாவில் ஆள் நடமாட்டம் இருக்கவில்லை. ரூம் நம்பர் நூற்றி ஒன்றின் முன்னால் நின்றார். மெதுவாகப் பிடியைத் திருகிக் கதவைத் திறந்தார். உள்ளே ஏ.சி. ஓடிக் கொண்டிருந்த சத்தம் கேட்டது. கதவைத் திறந்ததும் குளிர்ந்த காற்று முகத்தை வந்து தாக்கியது. லேசாக உடல் நடுங்கியது அவருக்கு.

ஆனால் அந்த நடுக்கம் குளிர்ந்த காற்றினால் ஏற்பட்டது இல்லை. உள்ளே தென்பட்ட காட்சியைப் பார்த்து. உள்ளே இரண்டு பிச்சைக்காரர்கள் கட்டில் மீது குழந்தைகளுடன் அமர்ந்திருந்தார்கள். இன்னொரு மூலையில் குஷ்டநோயாளி ஒருவன் உணவருந்திக் கொண்டிருந்தான்.

அவர் கதவைத் திறந்ததும் படுக்கையில் அமர்ந்திருந்தவன் சட்டென்று எழுந்து உரத்த குரலில் "நாங்க போக முடியாது.

போக மாட்டோம்" என்று கத்தினான். போருக்குத் தயாராக இருப்பவன் போல் தென் பட்டான்.

டாக்டர் ஒரு நிமிடம் அப்படியே நின்று விட்டார். மெதுவாக அவர் இதழ்களில் புன்முறுவல் மலர்ந்தது. "எஞ்சாய் பிரண்ட்ஸ்! ஜாலியாக இருங்கள்" என்று சொல்லி விட்டுக் கதவைச் சாத்திவிட்டு வெளியில் வந்தார்.

ஹோட்டல் முழுவதும் தேடி அலைந்த போது ஐந்தாவது மாடியில் ஒரு அறை காலியாக இருந்தது. மறுபடியும் கிழே வந்தார். கௌண்டரில் தேடிய போது பிரிஜ்ஜின் சாவி கிடைத்தது. சமையல் அறைக்குச் சென்று பிரிஜ்ஜை திறந்தார்.

மேல் வரிசையில் வேக வைத்த கோழி முட்டைகளும், சிக்கனும் இருந்தன. கீழ் வரிசையில் பீர் பாட்டில்கள் இருந்தன. அலமாரியைத் திறந்தார் ஸ்காட்ச் கிடைத்தது.

இரண்டு ஸ்காட்ச்களையும், அறுபது பீர்பாட்டில்களையும், தேவையான சிக்கனையும் எடுத்துக் கொண்டு போய்த் தன் அறையில் இருந்த பிரிஜ்ஜில் வைத்துக் கொண்டார். கதவை உள்பக்கம் சாத்தினார்.

நாற்காலியில் அமர்ந்துகொண்டு எதிரே இருந்த மேஜைமீது கால்களை நீட்டிக் கொண்டார்.

"பாழாய்ப் போன உலகம், அழிந்தால்தான் என்ன?" என்று நினைத்துக் கொண்டே பாட்டிலைத் திறந்தார்.

ட்ரிபோலில் அரபுநாடுகள் இஸ்ரேல் மீது படையெடுக்க வேண்டும் என்று எடுக்கப்பட்டிருந்த முடிவு எப்படியோ லீக் ஆகி விட்டது.

ஆகஸ்ட் 14ம் தேதி இரவு எல்லாப் பக்கமும் சூழ்ந்து கொண்டு இஸ்ரேல் திடீரென்று தாக்க வேண்டும் என்று அரபு நாடுகள் செய்த முயற்சி படுதோல்வி அடைந்தது. அதற்கு முதல்நாள் இரவே இஸ்ரேலின் ஏர்ஃபோர்ஸ் முழுவதும் ஒன்றாகத் திரண்டு

விட்டது. ரகசியமாக சேகரித்து வைத்த அணு ஆயுதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன.

அரபு நாடுகளின் கையில் இருந்த எண்ணெய் வளத்திற்காக இது நாள்வரை பொறுமையாக இருந்த அமெரிக்காவால் இந்த ஐந்து நாள்களுக்காக இஸ்ரேல் மீது நடந்த தாக்குதலைச் சகித்துக் கொள்ள முடியவில்லை.

அமெரிக்கா திடீரென்று படையெடுத்து வந்தால் தங்களுடைய எண்ணை வளங்களை நாசமாக்கி விடும் என்ற எண்ணத்தில் அரபு நாடுகள் பல வருடங்களுக்கு முன்பே எண்ணைக் கிணறுகளுக்கு அருகில் வெடிகுண்டுகள் ஏற்பாடு செய்து வைத்திருந்தன.

மூன்று மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இஸ்ரேல் சிறப்புப் பயிற்சி பெற்று போருக்காக தயாராகி விட்டது. மூன்று இலட்சம் போர் வீரர்கள் இஸ்ரேலைக் காப்பாற்றுவதற்காகக் கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

இஸ்ரேல் சொந்தமாகத் தயாரித்த "ஜெங்கோ மிஸல்ஸ், எம்.டி 6660 சர்ஃபேஸ் டு சர்ஃபேஸ் மிஸேல்ஸ்" தயார் நிலையில் வைக்கப்பட்டன. ஐயாயிரம் டாங்குகள், ஆறு நூறு ஏர்க்ராப்ட்ஸ் எல்லைகளைப் பாதுகாத்து வந்தன.

அமெரிக்கன் இண்டர் காண்டினெண்டல் மிஸேல்கள் அரபு நாடுகளை நோக்கிப் பாயத் தொடங்கிவிட்டன. அரபு நாட்டுத் தலைவர்கள் எண்ணெய்க் கிணறுகளை வெடிக்க செய்யச் சொல்லி உத்தரவுகளை பிறப்பித்தார்கள்.

வெடிகுண்டுகள் வெடித்து, அதிலிருந்து கிளம்பிய தீ வானத்தைத் தொட்டது. பிரளயம் அப்போதே வந்து விட்டதோ என்ற அளவுக்கு தீ கொழுந்து விட்டெரிந்தது. எண்ணைக் கிணறுகள் தகதகவென்று எரிந்து கொண்டிருந்தன.

பார்த்துக் கொண்டிருந்த போதே எண்ணைக் கிணறுகள் முழுவதும் எரிந்து முடிந்து விட்டன. உலகம் அழிய நான்கு

நாட்கள் இருக்கும் போதே உலகத்தில் கிடைக்கும் பெட்ரோலில் எழுபது சதவிதமானது நாசமாகிவிட்டது.

16

ஆகஸ்ட் பதினான்கு

புரொபசர் தன்னுடைய அறையில் அமர்ந்து இருந்தார். அவர் ஒரு வாய் தேநீர் குடித்து இரண்டு நாள்கள் ஆகிவிட்டன. யோசித்து யோசித்து மூளை மறுத்து விட்டது போல் இருந்தது அவருக்குத், தாடி வளர்ந்து விட்டது. எண்ணைப் பசை காணாத தலைமுடி பிரிபிரியாக தொங்கியது. கன்னங்கள் ஒட்டிப் போயிருந்தன.

நாற்காலியில் அமர்ந்து கொண்டு உள்ளங்கையை முகவாய்க் கட்டையில் ஊன்றி சூனியத்தில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஒரு எலி அவர் காலைத் தாண்டி ஓடியது. அவர் அதைப் பொருட்படுத்தவில்லை. இன்னொரு எலி கொஞ்சம் துணிந்து மேஜை மீது ஏறி இரண்டு நாள்களுக்கு முன் அவர் சாப்பிட்டு மீதம் வைத்திருந்த பிரட் துண்டை எடுத்துக் கொண்டு ஓடியது.

புரொபசர் அசையவில்லை.

எப்படி?

பிராக்ஸிமா செஞ்சுவரியின் ஈர்ப்புச் சக்தியிலிருந்து பூமியைக் காப்பாற்றுவது எப்படி? அவர் யோசித்துக் கொண்டிருந்தார்.

நான்கு நாட்களாக அதே யோசனைதான்.

அன்ன ஆகாரமின்றி க்ஷீணித்துவிட்ட அந்த வயோதிகரின் உடலில் யோசிப்பதற்குத் தேவையான சக்தி இருக்கவில்லை. அப்படியும் யோசித்துக் கொண்டுதான் இருந்தார். அனுபவம் கற்றுத் தந்ததை ஏட்டில் படித்து தெரிந்து கொண்டதை

நினைவுப்படுத்திக் கொண்டார். கம்ப்யூட்டரை விட வேகமாகத் கணக்குப் போட்டும் பிரச்னைக்கு தீர்வு காணமுடியவில்லை.

ஒரு அடித் தொலைவில் எலி இரண்டு கால்களில் நின்றுகொண்டு பிரட் துண்டில் ஒட்டிக் கொண்டிருந்த மண்ணைத் தட்டிவிட முயன்றுகொண்டிருந்தது.

புரொபசர் காகிதத்தின் மீது பூமியின் படத்தை வரைந்தார். அதைச் சுற்றி சில வட்டங்களை வரைந்தார். ஒவ்வொரு வட்டத்திலும் அந்தந்த லேயர்களின் பெயர்களை எழுதினார். ஒரு மணி நேரமாய் அதையே பார்த்துக் கொண்டிருந்தார். மாக்னடோஸ்பியருக்கு அந்தப் பக்கத்திலிருந்து ஒரு அம்புகுறி, அந்த நட்சத்திரம் எந்த திசையில் செல்கிறதோ அந்த திசையில் குறிப்பிட்டார். ஆகஸ்ட் பதினேழாம் தேதி இரவு பதினோறு மணி, பன்னிரண்டு வினாடிகளுக்கு.....

எலி அவரையே பார்த்துக் கொண்டிருந்தது. அவரும் அதையே பார்த்தார். ஹலோ என்பது போல் எலி மீசையை அசைத்தது. பிரொபசர் அசையவில்லை. எப்போதும் மகிழ்ச்சியாக, கலகலவென்று சிரித்துக் கொண்டிருக்கும் பிரொபசர் இன்று யோசனையில் ஆழ்ந்தவாறு கம்பீரமாக விளங்கினார்.

எலி தன் வேலையில் ஆழ்ந்தது.

புரொபசர் காகிதங்கள் பக்கம் பார்த்தார்.

பூமியின் மேல் வரிசையாக ட்ரோஸோஸ்பியர், ஸ்ட்ராடோ ஸ்பியர்.... அயிநோஸ்பியர். புரொபசரின் பார்வை ஒரு இடத்தில் நின்று விட்டது.

அய்னோஸ்பியர்.... மூன்று பரமாணுக்கள் கொண்ட ஆக்ஸிஜன்.

எலி பிரட்டின் மீது இருந்த தூசியைத் தட்டிக் கொண்டிருந்தது. தூசியுடன் பிரட்டின் தூளும் சேர்ந்து உதிர்ந்தது. கீழே விழுந்த துகளுடன் தூசியும் மேலே எழும்பியது.

மூன்று பரமாணுக்களைக் கொண்ட "ஓ" ஜோனை ஆக்ஸிஜனாகப் பிரிக்கமுடிந்தால், எஞ்சிய ஒரு பரமாணு அதைச் சுற்றித் திரிந்து கொண்டு அத்துடன் கலந்து விட முயற்சி செய்யும். இந்தப் போராட்டத்தில் பூமியைச் சுற்றிலும் தற்காலிகமாக 'ஆண்டி மாக்னடிக் ஃபீல்ட்' ஏற்படும்.

போதும். அந்தச் சொற்பகாலம் அந்த ஈர்ப்பு சக்தியைத் தடுக்க முடிந்தால் போதும். செய்ய வேண்டியதெல்லாம் "ஓ" ஜோனை சூப்பர்சானிக் வைப்ரேஷன்ஸ் மூலமாகப் பிரிக்க வேண்டியதுதான்.

கிடைத்து விட்டது!

பிரச்னைக்குத் தீர்வு கிடைத்து விட்டது.

புரொபசர் நாற்காலியிலிருந்து சரேலென்று எழுந்து "யுரேகா" என்று பெரிதாகக் கத்தினார். தன் வயதையும் மறந்து போய் டான்ஸ் செய்தார். பயந்து ஓட்டமெடுத்த எலியைப் பார்த்துப் பெரிதாக சிரித்தார். நாற்காலியை பின்னால் தள்ளிவிட்டு வாசலுக்கு வந்து கதவைத் திறக்க முயன்றார்.

பத்தடி உயரமுள்ள அக்கதவு கம்பீரமாக நின்று கொண்டிருந்தது. வெளிப்பக்கமாகப் பூட்டப்பட்ட நிலையில் ஆட்டோமேட்டிக் லாக்.

புரொபசரின் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாய் மறைந்தது. கதவை வேகமாகத் தட்டிக் கொண்டிருந்தார்.

* * *

கடந்த நான்கு நாட்களாகத் தினந்தோறும் இரவு பதினோரு மணி அளவில் பூமி அதிர்வதும், பிளவுப் படுவதும் நிகழ்ந்து கொண்டு இருந்ததால் கிராமத்து மக்களில் சிலருக்கு சுவாமிகளின் மீது நம்பிக்கை குறையத் தொடங்கியது. அதில் பூஷணம் ஒருவன்.

அதற்கு முதல் நாள் இரவு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சுவாமிகள் சயனித்து இருந்த அறையின் கூரை இடிந்து மேலே

விழுந்ததில் அவருடைய வலதுகால் முறிந்து விட்டது. எல்லோருக்கும் தாயத்துக்களைக் கட்டி விடுவதில் மூழ்கியிருந்த சுவாமிகள் தன் கைக்குத் தாயத்தைக் கட்டிக் கொள்ள மறந்து விட்டதால்தான் இந்த அனர்த்தும் நேரிட்டுவிட்டது என்று பக்தர்கள் ஒரு மனதாக முடிவு செய்தார்கள். முன்சீப் பூஷணத்திடம் வந்தார்.

"மக்கள் என்ன சொல்றாங்க?" சுருட்டுப் புகைத்துக் கொண்டே பூஷணம் கேட்டான்.

"நம் கிராமத்துக்கு எதுவும் ஆகாதாம்."

"எதனால்?"

"சுவாமிகள் மந்திரித்த எலுமிச்சம் பழத்தைச் சாறு பிழிந்து ஊரைச் சுற்றிலும் தெளிக்கப் போகிறாராம்."

"எனக்கு நம்பிக்கை இல்லைப்பா. சாவு தப்பாது என்று தோன்றுகிறது."

அந்த விஷயத்தை நம்புவதற்கு விரும்பாத முன்சீப் பேச்சை மாற்றிக் கொண்டே "ராஜய்யாவை என்ன செய்வது?" என்றார்.

"ஒரு பக்கம் மனுஷன் உயிரோடு இருப்பதே சந்தேகம் என்ற போது ராஜய்யாவை என்ன செய்வது என்று கேட்கிறாயே?" பூஷணம் சுருட்டைப் புகைத்துக் கொண்டே கேட்டான்.

"அது பாட்டுக்கு அது. நாம் உயிரோடு இருக்க மாட்டோம் என்று நினைப்பானேன்? சுவாமிகள் இருக்கும் வரையில் நமக்குக் கவலை இல்லை."

"பார்க்கலாம். பதினேழாம் தேதி தாண்டட்டும்."

"அது வரையில் கைகளை கட்டிக் கொண்டு இருந்தால் எதிராளி நம்மைப் பார்த்து கைக் கொட்டி சிரிப்பான். ராஜய்யாவை எப்படியாவது எரித்து சாம்பலாக்க வேண்டும். இல்லாவிட்டால் நாளையிலிருந்து சின்னப் பையன் கூட நம்மை சல்லிக்காசுக்கு மதிக்க மாட்டான்."

"அவனை எரிக்கணும், அதுதானே உனக்கு வேண்டியது? இந்தப் பதினேழாம் தேதி ஆவட்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம்."

"பிறகு என்றால்?"

அவசரப்படுவானேன்? பிறகு பார்த்துக் கொள்ளலாம்." பூஷணம் எழுந்து கொண்டான்.

அரைமணியில் ரங்கசாமிக்கு இந்தச் செய்தி தெரிந்தது. ராஜய்யாவின் காது வரைக்கும் வந்தது. அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது. நிலம் போனால் போகட்டும். உயிர் தப்பினால் போ...து...ம்.

* * *

ஆகஸ்ட் பதினைந்து

விடியற்காலை ஐந்தரை மணி.

பிரகாஷுக்கு விழிப்பு வந்தது. தூக்கம் வந்தால்தானே? கண்களை மூடினால் சாவைப் பற்றிய நினைவுதான் முதலில் வந்தது.

மனிதன் செத்த பிறகு எங்கே போவான்?

இன்னும் மூன்று நாள்கள்தான். எல்லோரும் சாக வேண்டியதுதானா?

மாலை வேளைகள்.... தோட்டங்கள்... அலுவலகம்..... காண்டீனில் அரட்டை... சினிமாக்கள்... கோபியுடன் விளையாடுவது... சாப்பிடுவது...இவை எதுவுமே இருக்கப் போவதில்லையா?

உடலை விட்ட பிறகு ஆன்மாவானது இன்னொரு ஜீவனைப் போய்ச் சேரும் என்று சொல்வார்கள். பூமியில் ஜீவனே இல்லாத போது இந்த உயிர்கள் எல்லாம் என்னவாகும்? மனித சஞ்சாரமற்ற

இவ்வுலகத்தைச் சுற்றி ஆவிகள் சுற்றிக் கொண்டு இருக்குமா? தானும் அதில் ஒருவனாகி விடுவானா?

சாவு என்றால் என்ன?

கபால மோட்சம் என்றால் என்ன?

இதயம் நின்று விட்டால் நமக்குத் தெரியுமா?

வலியால் உடல் துடிதுடிக்குமா?

அவனுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. யாராவது இதெல்லாம் கனவு என்று சொன்னால் எவ்வளவு நன்றாக இருக்கும்? இல்லையில்லை. இது கனவு இல்லை.

படுக்கையில் குப்புறப்படுத்துக் கொண்டு தலையணையில் முகம் புதைத்துக் கொண்டு அவன் ரொம்ப நேரம் அழுதான். தான் ஒரு அற்பஜீவி. யாராலும் தன்னைக் காப்பாற்ற முடியாது. அலுவலகத்தில் ஹெட்கிளார்க்கிடமிருந்து, மரணத்திலிருந்து தன்னை யாரும் காப்பாற்ற முடியாது.

எல்லோரும் உறங்கிக் கொண்டு இருந்தார்கள். அவன் எழுந்து வெளியில் வந்தான்.

சர்க்கஸ் முடிந்த பிறகு கூடாரம் எப்படி இருக்குமோ அது போல் இருந்தது வெளி உலகம். துப்புரவுப் பணியாளர்கள் வேலை செய்யாததால் எங்கும் குப்பைக் கூளங்கள். தண்ணீர் இல்லை. மின்சாரம் இல்லை. எங்கும் வெறுமை நிறைந்திருந்தது.

தொலைவில் எங்கேயோ பெருத்த ஓசை. பின்னாலிருந்து யாரோ துரத்திக் கொண்டு வருவது போல் அவன் ஓடினான். சாவு அவனைத் துரத்தி வருகிறது. அவன் வேகத்தைக் கூட்டினான். கல்.....மண்.....மேடு..... எல்லாவற்றையும் தாண்டிக் கொண்டு ஓடினான்.

பிரளயம் அவனை துரத்திக் கொண்டு வருகிறது. ஊருக்கு வெளியில் இருந்த மயானத்திற்குப் போய்ச் சேர்ந்தான். மண்டை ஓடுகள் கல்லறைகளுக்கு இடையில் ஓடிக் கொண்டே இருந்தான்.

முட்கள் அவன் மேனியைக் காயப்படுத்தின. கால்கள் ரத்தத்தால் நனைந்து விட்டன. வியர்வை ஆறாகப் பெருகியது. வேகமாக ஓடியதால் மூச்சு இரைத்தது.

சட்டென்று அவன் நின்றான்.

மயானத்தின் நடுவில் அவன் நின்றிருந்தான். கிழக்குத் திசையில் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். கீழ் வானத்தில் வெளிச்சம் பரவிக் கொண்டிருந்தது.

சிவப்பாக உதித்துக் கொண்டிருந்த சூரியனைப் பார்த்துக் கொண்டே ஒரு நிமிடம் அப்படியே நின்றான்.

அப்பொழுது ஒரு வினோதம் நிகழ்ந்தது. எங்கேயோ ஆந்தை ஒன்று விகாரமாக அலறியது. கோழிக்குஞ்சு ஒன்று இறகுகளை படபடத்துக் கொண்டே தீனமாகக் கத்தியது.

சூரியன் மெதுவாக மேலேறி வந்து கொண்டிருந்தான். அதற்குச் சற்று கீழே பிராக்ஸிமா செஞ்சுவரி நட்சத்திரம் கிழக்கு மலைகளுக்குப் பின்னால் உதித்தது. வட்டமாக, கன்னங்கரேலென்று இருந்தது. சூரியனுக்கும், பூமிக்கும் நடுவில் வந்து நின்றது. நிலம் லேசாக அதிர்ந்தது.

சூரியன், நட்சத்திரம், பூமி ஒரே கோட்டில் வந்ததும் சூரியவெளிச்சம் மறைந்து விட்டது.

கிரகணம்!

சூரியன் தென்படவில்லை குறுக்கே பயங்கரமான நட்சத்திரம், அதே திசையில்.... பூமியை நோக்கி....

எல்லாம் இருள்மயம். எங்கு பார்த்தாலும் இருள்.

இனி எஞ்சிய மூன்று நாள்களும் இரவு பகல் இருக்காது. யோகா வசிஷ்டத்தில் சொன்னதும், பைபிளில் சொன்னதும் நிஜமாகப் போகிறது.

உலகம் இருளடைந்து விட்டது. நரி ஒன்று ஊளையிட்டது. உடைந்த மண்டை ஓட்டின் ஊடே காற்று புகுந்து வெளியேறிய போது யாரோ அழுவது போன்று ஒலித்தது.

உரத்த குரலில் கத்த வேண்டும் போல் இருந்தது பிரகாஷுக்கு. ஆனால் குரல் வளையத்தில் ஏதோ அடைப்பட்டது போல் வாயிலிருந்து வார்த்தை வெளியில் வரவில்லை. நடுநடுங்கினான். அதே சமயத்தில் மரத்திலிருந்து காய்ந்த கிளையொன்று முறிந்து அவன் மேல் விழுந்தது.

அவ்வளவுதான்.

வாயிலிருந்து புறப்படப் போன அலறல் தொண்டைக் குழியிலேயே நின்று விட்டது கிளம்பிய மூச்சு இதயத்திலேயே நின்று விட்டது.

அப்படியே தரையில் சரிந்தான்.

மனரீதியாய் என்றோ இறந்து விட்டிருந்த சந்திரன், இம்முறை உண்மையிலேயே உடல் ரீதியாகவும் இறந்து விட்டான்.

17

சைலஜா தன்னுடைய அறையில் கட்டில்மீது மல்லாந்து படுத்துக் கொண்டு மேற்சாரையைப் பார்த்தவாறு யோசித்துக் கொண்டிருந்தாள். நினைவுத் தெரிந்த பிறகு பதினெட்டு ஆண்டுகளாகத் தான் வாழ்ந்த வாழ்க்கையை நினைத்துப் பார்க்கும் போது ரொம்ப வியர்த்தமாகப், பொருளற்றதாகத் தோன்றியது.

பெரிதாக என்ன சாதித்து விட்டாள்?

இந்த உலகில் பெரும்பாலானவர்கள் எதையும் சாதிக்க மாட்டார்கள். ஆனால் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற

திருப்தியாவது அவர்களுக்கு இருக்கும். அந்த திருப்தி தனக்கு இருக்கிறதா?

யோசித்துப் பார்த்தால் இருக்கு என்று தான் தோன்றுகிறது.

ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுகிறோம் என்ற திருப்தி.... தம்பியை, அப்பாவை.

மற்ற விருப்பங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தால்! இந்த இறுதி நாட்களில் கூட எந்த கட்டுப்பாடுகளும் இன்றி வாழ்க்கையை அனுபவிக்காமல் தன்னை எது தடுத்து நிறுத்துகிறது? திருமணம் ஆகாத ஒரு பெண் இனி வாழ்க்கையில் திருமணமே ஆகாது என்று தெரிந்த பிறகும் (வாழ்க்கை இன்னும் நான்கு நாள்தான் என்பதால்) எதற்காக ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்டு இருக்கிறாள்? குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக மட்டும் தானா?

நிசப்தமான நள்ளிரவு வேளைகளில், திடீரென்று விழித்துக் கொள்ள நேர்ந்தால் வேட்கையால் உடலும், உள்ளமும் தவித்தது நினைவுக்கு வந்தது. ராணி சொன்னது போல் அது மானசீக விபச்சாரமா?

திடீரென்று எந்தக் கட்டுப்பாடுகளும் இன்றி ஆளரவமற்ற சாலையில் ஓட வேண்டும் என்ற விருப்பம் பலமாகத் தோன்றியது. பைத்தியக்காரத்தனமான விருப்பம்.

ப்ராயிட் சொன்னது போல் உள்மனிதன் வேட்கை எண்ணங்களைத் தூண்டிவிடுகிறதோ...

அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது.

அதற்குள் கதவு தட்டும் ஓசை கேட்டது. தந்தை உள்ளே வந்தார். அவள் எழுந்து கொள்ள முயன்றபோது தடுத்து நிறுத்தி விட்டு அருகில் வந்து அமர்ந்து கொண்டார்.

"உன்னிடம் பணம் எவ்வளவு இருக்கும்மா?"

அவள் வியப்பு அடைந்தாலும் வெளியில் காட்டிக் கொள்ளாமல் "பத்தோ இருபதோ இருக்கலாம். எதுக்குப்பா?" என்றாள்.

"அது போதாதும்மா. குறைந்தது ஐநூறாவது வேணும்."

"ஐநூறா? அவ்வளவு என்னிடம் எங்கே இருக்கும்?"

சிறிது நேரம் மௌனமாக இருந்தவர் பிறகு அந்த நிசப்தத்தைச் சிதறடித்தவாறு சொன்னார்.

"போகட்டும், உன்னுடைய சங்கிலியை விற்று விட்டால் என்ன?"

அவள் சட்டென்று நிமிர்ந்து வியப்புடன் பார்த்தாள்.

"இப்போ அவ்வளவு அவசரம் என்ன வந்து விட்டது? இன்னும் நான்கு நாள்களில் உலகம் அழியப் போகிறது. இப்பொழுது அத்தனைப் பணம் எதற்கு?" இரட்டிப்பது போல் கேட்டாள்.

அவரால் சொல்லாமல் இருக்கமுடியவில்லை.

"பக்கத்துக் கிராமத்தில் புத்புதானந்த சுவாமிகள் எழுந்தருளி இருக்கிறாராம். அவர் தாயத்துக் கொடுத்தால் பிரளயம் ஒன்றுமே செய்யாதாம்." முணுமுணுப்பது போல் சொன்னார்.

முதலில் அவளுக்குச் சிரிப்புத்தான் வந்தது. உயிர் பயமானது படித்தவர்களை, படிக்காதவர்களை.... எல்லோரையும் முட்டாளாக்குகிறது. ஆனால் அவளுக்குச் சந்தோஷமாகவும் இருந்தது. எந்த வழியிலாவது தங்களுடைய உயிரைக் காப்பாற்றுவதற்கு தன்னுடைய தந்தை, குடும்பத் தலைவர் என்ற முறையில் முயற்சி செய்து வருகிறாரே!

"அப்பா! அந்தத் தாயத்தின் விலை என்ன?"

"ஐநூறு ரூபாயாம்'' என்றார் அவர். மகள் இந்த அளவுக்காவது ஆர்வம் காட்டியது அவருக்கு சந்தோஷமாக இருந்தது. தன் வார்த்தையை எடுத்தெறிந்து பேசிவிடுவாள் என்று நினைத்திருந்தார். குடும்ப பாரத்தைச் சுமக்கும் மகளைக் கண்டால் அவர் மனதில் கொஞ்சம் பயம் இருந்து வந்தது உண்மைதான்.

அவள் கழுத்திலிருந்து சங்கிலியை எடுத்துக் கொண்டே சொன்னாள். "ஒரு தாயத்தை வீட்டில் வைத்துக் கொண்டால்

அந்த வீடு நிலைத்திருக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருந்தால் அதை நான் ஏன் மறுக்கணும். எடுத்துக் கொள்ளுங்கள் அப்பா."

கூந்தலில் சிக்கிக் கொண்ட சங்கிலியின் கொக்கி விரைவில் கழட்ட வரவில்லை.

"வீட்டில் வைத்துக் கொள்வதற்காக இல்லைம்மா. கையில் கட்டிக் கொள்ளணும். என் கைக்கு இல்லைன்னு வைச்சுக்கோ" என்று சொல்லி விட்டு சிரித்தார். ஆனால் அந்தச் சிரிப்பில் உயிர் இல்லை. "இருப்பது ஒரு ஐநூறுதான். வீட்டில் இருக்கும் அனைவருக்கும் எங்கேயிருந்து கொண்டு வர முடியும்?"

"எனக்கு இவற்றின் மீது நம்பிக்கை இல்லை அப்பா" என்றாள். உள்ளுக்குள் 'எனக்கு இந்த வாழ்க்கையின் மீது ஆசை அவ்வளவாக இல்லை' என்று நினைத்துக் கொண்டாள்.

கொக்கி விடுபட்டது. சங்கிலி அவள் கைக்கு வந்தது.

"போகட்டும் அம்மா. அவரவர்களுடைய நம்பிக்கை அவரவர்களுடையது." தந்தை சங்கிலியைப் பார்த்துக் கொண்டே சொன்னார். "ஒரு சின்ன தாயத்தைத் தம்பியின் கையில் கட்டி விட்டால் போதும். வம்சத்தைக் காப்பாற்றுவான்."

சங்கிலியை நீட்டிய கை ஒரு வினாடி அப்படியே நின்று விட்டது. இதயத்தின் ஆவேசமானது வேதனையாக உருமாறி பொங்கி எழும்பியது. தந்தையின் மடியில் சங்கிலி வேகமாக வந்து விழுந்தது. அதை எடுத்துக் கொண்டு அவர் போய் விட்டார். அறையில் அவள் தனித்து விடப்பட்டாள்.

அப்பொழுதுதான் அவளுக்குத் துக்கம் அலை அலையாகப் பொங்கி, கட்டுகளை மீறிக் கொண்டு வெளியில் வந்தது.

தாயத்து மனிதனைக் காப்பாற்ற வல்லதா இல்லையா என்பது அங்கே பிரச்னை இல்லை. குடும்பத்தில் இருக்கும் நபர்களுக்கு இடையில் உள்ள பந்தங்களைப் பற்றிய பிரச்சனை அது.

குடும்பம்

மிக உயர்ந்த வார்த்தை அது. தாய், தந்தை, தம்பி... மிக மென்மையான பந்தங்கள்தான்.

இத்தனை நாட்களாகக் கஷ்டப்பட்டு உழைத்து இந்த குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். தன் சுகங்களையெல்லாம் இந்த வீட்டுக்காக தியாகம் செய்தாள். அப்படி இருந்தும் யாராவது ஒருவர் பிழைத்துக் கொள்ளும் வாய்ப்பு கிடைத்தால் அதற்கு தன் மகனைத்தான் ஒரு தந்தை தேர்ந்தெடுக்கிறான். மகன் மூலமாகத்தான் வம்சம் தழைக்குமாம். இதென்ன சமுதாயம்? இதில் ஒரு பெண் வாழ்வதைக் காட்டிலும் செத்துப் போவதே மேல்.

அவள் கண்ணீரால் தலையணை நினைந்து விட்டது. விசும்பல் வெளியில் கேட்காதவாறு மௌனமாக அழுது கொண்டிருந்தாள்.

"எனக்குக் கொஞ்சம் அன்பு வேண்டும். கொஞ்சமாக இருந்தாலும் போதும். கொஞ்சம் பரிவு வேண்டும்." அவள் பரிதாபமாக வேண்டுகோள் விடுத்தாள்.

சற்று நேரத்தில் தேற்றிக் கொண்டாள். யதேச்சையாக அவளுடைய கை தலையணைக்கு அடியில் இருந்த புகைப்படத்தின் மீது பட்டது. தன்னையும் அறியாமல் அதை வெளியில் எடுத்தாள்.

"ஒரு பெண்ணின் வாழ்க்கையில் எப்பொழுதோ ஒருமுறை ஒரு ஆண் நெருக்கமாக வருவான். ஒரே ஒருமுறை, நிச்சயமாக அந்த ஆண் தந்தையோ, சகோதரனோ மட்டும் இல்லை. அந்த ஒருவனுக்காகவே பெண்ணாக இருப்பவள் கனவு காண்கிறாள்."

ஆனால் சைலஜா போன்ற துரதிர்ஷ்டசாலிகள் ஊமையாய் பந்தங்களை வளர்த்துக் கொள்வார்கள், உலகத்தின் இறுதி நான்கு நாள்களில் கூட சைலஜா போன்றவர்கள் பண்பின் எல்லைகளைத் தாண்டி தங்களுடைய மனதை வெளிப்படுத்த மாட்டார்கள். அவன் சம்மதிப்பானா இல்லையா என்பது வேறு விஷயம். அவள் மட்டும் சொல்லவில்லை.

காதல் எப்போது, எப்படி, யார் மேல் ஏற்படும் என்று சொல்வது மிகவும் கடினம். அது ஜாமெட்ரியோ அல்லது ஆல்ஜீப்ராவோ இல்லை.

அவள் தன்னுடைய தன்மையை இத்தனை நாளும் எப்படி மனதில் புதைத்துக் கொண்டாளோ அதேபோல் தன்னுடைய காதலையும் இந்த நான்கு நாள்களாய் ரகசியமாக பாதுகாத்து வந்திருக்கிறாள்.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் துளி ஒன்று வழிந்து அந்தப் போட்டோவை நனைத்தது.

அவனை இன்னொரு பெண் காதலித்து வருகிறாள் என்று தெரியும். அவன் தன்னைவிட வயதில் சின்னவன் என்றும் தெரியும். இருந்தும் அவளால் காதலிக்காமல் இருக்க முடியவில்லை.

அவள் போட்டோவைத் திருப்பினாள். அங்காங்கே காய்ந்த பசை ஒட்டிக் கொண்டிருந்தது. அப்ளிகேஷன் ஃபாரத்திலிருந்து பிய்த்து எடுக்கப்பட்ட போட்டோ அது.

இனி சைலஜாவைப் பற்றி சொல்ல எதுவுமே இல்லை. நான்கு நாள்களுக்குப் பிறகு அவள் இறந்து போகிறவளாக இருக்கலாம். கனவுலகில் அவள் என்றோ சமாதியாகி விட்டிருந்தாள்.

* * *

"பவதி பிட்சாந்தேஹி...மாதா அன்னபூர்ணேஷ்வரி." இரண்டு கைகளுக்கு நடுவில் திருவோட்டை ஏந்திக் கொண்டு கிழவன் ஒருவன் உரத்த குரலில் கத்தினான்.

ஜானகி வெளியே வந்தாள்.

காலை எட்டு மணி ஆகியிருந்தது. இருந்தும் இருட்டாகவே இருந்தது. சூரியனுக்குக் குறுக்கே ஒரு கருத்த கோளம். நட்சத்திரங்கள் தென்பட்டுக் கொண்டிருந்தன.

கோடிக்கணக்கான ஆண்டுகளாக குறிப்பிட்ட நேரத்தில் மாறி மாறி வந்து கொண்டிருந்த இரவு, பகல் இனி இல்லை. எல்லாம் இரவுதான் இருட்டுதான்.

"பவதி பிட்சாந்தேஹி!"

அத்தனை வேதனையிலும் ஜானகிக்குச் சிரிப்பு வந்தது." "உலகமே அழிந்து விடப் போகிறது. இன்னும் ஏன் தாத்தா பிச்சை எடுத்துக்கிட்டு இருக்கீங்க? கேட்டால் யாராவது மறுக்கப் போகிறார்களா? கேட்கவேண்டிய அவசியம்தான் என்ன? வேண்டியதை யாரையும் கேட்காமலேயே எடுத்துக் கொள்ளலாம் இல்லையா?"

"நினைவு தெரிந்தநாள் முதல் தெரிந்த தொழில் உஞ்ச விருத்திதான் அம்மா. இன்றைக்கு வாழ்க்கைக்கே ஆபத்து வந்துடுத்துன்னு அதை மாற்றிக் கொள்ளச் சொல்கிறாயா தாயே."

அவள் கற்சிலையாகிவிட்டாள்.

அந்தக் காரிருளில், ஸ்தம்பித்து விட்ட சூழ்நிலையில் தன் வீட்டின் முன்னால் நின்று கொண்டிருந்த அந்தப் பிச்சைக்காரனின் நேர்மையைக் கண்டு அவள் கண்களில் நீர் சுழன்றது. இந்த நேர்மை ஒவ்வொரு மனிதனிடம் இருந்திருந்தால், மனிதன் சாவை எவ்வளவு பெருந்தன்மையுடன் வரவேற்றிருப்பான்?

எண்ணங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு உள்ளே போய் ஹரிகேன் விளக்கின் உதவியோடு முதல்நாள் இரவு மீந்திருந்த உணவைக் கொண்டு வந்தாள்.

"இருட்டாக இருக்கே, எப்படி தாத்தா போவீங்க?"

"வெளிச்சம் எப்படி இருக்கும் என்றே எனக்குத் தெரியாதும்மா. நான் பிறவிக் குருடன்" என்றான் கிழவன். ஹரிகேன் விளக்கு வெளிச்சத்தில் கிழவனின் கண்கள் சலனமற்று இருந்தன. முகம் மட்டும் ஒளி வீசிக் கொண்டிருந்தது.

அவள் திருவோட்டில் சாதத்தைப் போட்டாள்.

அவன் கையை உயர்த்தி "தீர்க்க சுமங்கலீ பவ" என்றான். மெதுவாக நடந்து இருளில் மறைந்து விட்டான்.

அவள் அந்தப் பக்கமே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது உள்ளே இருந்து ரமணன் வந்தான்."யாரை அண்ணி பார்த்துகிட்டு இருக்கீங்க?" என்று கேட்டான்.

"மனிதனை."

அவனுக்குப் புரியவில்லை. இருப்பினும் அதைப் பற்றி எதுவும் விசாரிக்காமல் "அண்ணா எங்கே?" என்று கேட்டான்.

"தெரியாது, காலையில் பார்க்கும் போதே கட்டிலில் இருக்கவில்லை." கவலை மிகுந்த குரலில் சொன்னாள்.

"இவ்வளவு காலை வேளையில் எங்கே போயிருப்பான்? அதுவும் இந்த இருட்டில்?"

ஜன்னல் வழியாக மக்கள் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எல்லோருடைய முகங்களிலும் பயம் வெளிப்படையாகத் தெரிந்தது. காலை எட்டு மணியாகி விட்ட போதிலும் காரிருள், பயத்தினால் உடல் நடுங்கியது. வாய் விட்டு அலறுவதற்கும் தெம்பு இருக்கவில்லை.

உலகமே ஸ்தம்பித்து விட்டது போல் இருந்தது.

"எங்கே போகிறாய்?" ஜானகி கேட்டாள்.

"அண்ணன் எங்கேன்னு பார்த்துட்டு வர்றேன். முதலில் ஒரு தடவை புரொபசர் வீட்டுக்குப் போகணும். அவரைப் பார்த்து ரொம்ப நாள் ஆகிவிட்டது." சொல்லிவிட்டு ரமணன் புறப்பட்டான்.

18

மேஜைக்கும் நாற்காலிக்கும் இடையில் தரையில் விழுந்து கிடந்தார் புரொபசர். நான்கு நாட்களாய் ஆகாரமில்லாமல் பலகீனமடைந்து நினைவு தப்பிய நிலையில் கிடந்தார். இந்த

வினாடியோ அடுத்த வினாடியோ அவருடைய மூச்சுக் காற்று நின்று விடத் தயாராக இருந்தது. தன்னுடைய உயிர் போனாலும் பரவாயில்லை. தான் கண்டுபிடித்ததை உலகிற்குச் சொல்லி விட வேண்டும். குறைந்த பட்சம் பாதிபேராவது பிழைத்துக் கொள்வார்கள். பூமியில் மனித இனம் அழிந்து விடாது.

இந்த விஷயத்தை வெளியில் எப்படித் தெரியப்படுத்துவது?

அவர் கைகளை ஊன்றிக் கொண்டு எழுந்துகொள்ள முயன்றார். ஏற்கனவே வயதானவர். நான்கு நாட்களாய் ஒன்றுமே சாப்பிடாததினால் பலகீனம் உடலை ஆட்டிப் படைத்தது. தொப்பென்று சரிந்து விட்டார். மறுபடியும் எழுந்து கொள்ள முயன்றார்.

அப்பொழுது வெளியில் பேச்சுக்குரல் கேட்டது. ரமணனின் குரல்!

"புரொபசர் இல்லையா? யாரோ சிறுவன் பதிலளித்துக் கொண்டிருந்தான். இல்லை, நான்கு நாள்களுக்கு முன்னால் கதவைப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்."

"எங்கே?"

"தெரியாது."

புரொபசர் குரலை உயர்த்த முயன்றார். சிறிய முனகல் மட்டுமே வெளிப்பட்டது.

"நான் போகிறேன், அவர் வந்தால் நான் வந்துட்டுப் போனதாகச் சொல்லு."

உள்ளே புரொபசர் தவித்துக் கொண்டிருந்தார். நாற்காலியைக் கீழே தள்ளி விட முயன்றார். தன் பலத்தையெல்லாம் கூட்டிக் கொண்டார். இருந்தாலும் பலம் போதவில்லை. பலகீனம் உடலைத் தள்ளாடி விழச் செய்தது. ஆதரவின்றி விழுந்து கிடந்தார். இதயத்திலிருந்து அழுகை பொங்கிக் கொண்டு வந்தது.

வெளியே காலடி ஓசை கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து ஒய்ந்தது.

சற்று நேரம் ஆழமான அமைதி அந்த அறையில் நிலவியது. அணையும்முன் விளக்கு பிரகாசமாக ஒளி தருவது போல் அவர் உடலில் கொஞ்சம் தெம்பு வந்தது. மெதுவாக கையை நீட்டிப் பேனாவை எடுத்துக் கொண்டார். "என்னைக் காப்பாற்றுங்கள் என்னால் உலகத்தைக் காப்பாற்ற முடியும்" என்று எழுத நினைத்துப் பேப்பரை எடுத்துக் கொண்டார்.

நடுங்கும் விரல்களுக்கிடையே பலத்தை எல்லாம் திரட்டிக் கொண்டு எழுதத் தொடங்கினார். ஒவ்வொரு எழுத்தாக....

"என்னைக் காப்பாற்றுங்கள்..."

அவ்வளவுதான்! அவர் கை நழுவிவிட்டது. கண்கள் நிலைக் குத்தி விட்டன. உயிர் மூச்சானது கூட்டை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தது. ஆன்மாவின் ஒளி அடங்கிப் போகும் அந்தக் கடைசி வினாடி அவர் கண்கள் முன்னால் ஒரு காட்சி தோன்றியது.

ராயல் அகாடமி ஆஃப் சயின்ஸஸ்.. ஸ்டாக் ஹோம், ஸ்வீடன் ஹால் முழுவதும் பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது. ஒவ்வொரு துறையிலும் முழுமையாகத் தேர்ச்சி அடைந்திருந்த மேதாவிகள் அமர்ந்திருந்தார்கள். ராயல் டிக்னிட் ஆஃப் ஹாலண்ட், தி கிங்..... உயரமான மேடையின் மீது அமர்ந்திருந்தார்.

இன்வெஸ்டிட்யூர் நிகழ்ச்சி தொடங்கியது. உலகத்தைக் காப்பாற்றியதற்கு அந்த வருடத்திய மிக உயர்ந்த பரிசு "பிரொபசர் குழந்தைவேல் பழனி மாணிக்கம்."

வாத்தியங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. அவருடைய வாழ்க்கை குறிப்பும், அவர் சாதித்த வெற்றிகளும் சுருக்கமாக அறிவித்தார்கள். சாம்பல் நிற சூட் அணிந்து கொண்டு அவர் படியேறிக் கொண்டிருந்தார்.

தி ஸ்க்ரால்! அவருடைய வெற்றியை செதுக்கப்பட்ட தங்கப் பத்திரமானது வெகுமதியாக வழங்கப்பட்டது.

தி மெடல்! பளபளவென்று மின்னிய தங்கப் பதக்கத்தை அவருடைய கோட் பையில் ஹாலந்து நாட்டின் மன்னர் சொருகினார்.

இறுதியில்....

தி நோபெல் பிரைஸ்! இருபது லட்சம் ரூபாய் மதிப்புள்ள காசோலை.

அவர் இரண்டு கைகளையும் நீட்டினார். நீட்ட முயன்றார். கண்களுக்கு முன்னால் காட்சி மங்கிக் கொண்டிருந்தது. முடிந்து விட்டது. எல்லாமே முடிந்து.....விட்டது.

அவருடைய உயிர் விண்ணோடு கலந்து விட்டது. டு வோடு த்ரீயை பிரித்தெடுத்தால் அது த்ரீ வோடுவாக மாறிவிடும் என்பதை மறந்து விட்ட அந்தப் புரொபசர் தன் கனவுலகிலேயே சமாதியாகி விட்டார்.

* * *

அந்த இருட்டில் அவள் அரிக்கேன் விளக்கைப் பிடித்துக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் கவலை படர்ந்திருந்தது.

நாலு பக்கமும் பார்த்துக் கொண்டே "என்னங்க? எங்கே இருக்கீங்க?" என்று குரல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

பிளவுப் பட்டிருந்த தரையில் தடுக்கி விழுந்து, எழுந்து நடந்து போய்க் கொண்டிருந்தாள். கணவருக்கு என்னவாகி விட்டதோ என்ற கலக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவள் தேடிக் கொண் டிருந்தாள். கற்களை, புதர்களைத் தாண்டிக் கொண்டே சென்றாள்.

அவள் கால்களுக்கு ஏதோ தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தாள். குப்புற விழுந்து கிடந்த உடல்! எட்டு ஆண்டுகள் நெருங்கி வாழ்ந்தவள் என்பதால் அவளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. புரட்டிப் பார்த்தாள்.

பிரகாஷ்! உலகத்தை விட்டு, பயங்களை விட்டு எங்கேயோ தொலை தூர உலகிற்குச் சென்று விட்டிருந்தான்.

வீலென்று கத்தினாள். லாந்தர் கையிலிருந்து நழுவி விழுந்தது. கணவனின் உடல் மீது சரிந்து ஹோவென்று கதறினாள்.

ஆளரவமற்ற மயானத்தில் தனியாக அவள் அழுது கொண்டிருந்ததைக் கண்டு பரிதாபப்படுவது போல் பூமியும் வானமும் சலனமின்றி இருந்தன. தரையில் விழுந்த அரிக்கேன் விளக்கு மினுக் மினுக்கென்று அணைந்து விடத் தயாராக இருந்தது.

எத்தனை நேரமாக அழுதுகொண்டு இருந்தாளோ அவளுக்கே தெரியாது. வெகு நேரம் கழித்து தன்னைத் தேற்றிக் கொண்டாள். முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, பட்டுப் போன அந்த மரத்தின் மீதே அப்படியே அமர்ந்துவிட்டாள்.

அவள் மனதில் இப்பொழுது வேதனை இல்லை. அதைவிடப் பயங்கரமான நிலை. உணர்வுகள் மரத்துப் போன நிலை.

அவள் தலையை உயர்த்திச் சுற்றிலும் பார்த்தாள். காய்ந்த கிளைகள், கற்கள், புதர்கள், எல்லாவற்றையும் தனக்குள் மறைத்துக் கொண்ட இருள். அந்த இருளில் புதருக்குப் பின்னாலிருந்து மினுக் மினுக்கென்று பளபளத்துக் கொண்டிருந்த அந்த இரண்டு கண்கள் எந்த மிருகத்தினுடையது? பூனையா? நரியா? இல்லை ஓநாயா?

அவள் நடுங்கினாள். பயத்தினால் இல்லை. கணவனின் உடலுக்கு நேரப்போகும் கதியை நினைத்து.

மைத்துனன் எங்கே இருக்கிறானோ தெரியவில்லை.

அவள் எழுந்திருந்தாள்.

* * *

ஆகஸ்ட் பதினாறு, லண்டன்

இருளில் தேம்ஸ் நதி தலையை விரித்துக் கொண்டிருக்கும் பெண்ணைப் போல் இருந்தது. எப்போதும் சந்தடியாக இருக்கும் க்ராஸ்வெனார் சாலை ஆளரவமற்று இருந்தது.

அது பகலா இரவா என்று தெரியவில்லை. இரண்டு நாட்களாய் எல்லாம் ஒரே இருட்டு. இருளில் லண்டன் நகரமானது

உறங்கிக் கொண்டிருந்தது. தொலைவிலிருந்து மாதா கோவிலின் மணியோசை இடைவிடாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. கிரீக்ஸ் சாலை வழியாக ஹைட் பார்க்காகச் சுற்றிக் கொண்டு ஹவுஸ் ஆஃப் பார்லிமெண்டை அடைந்தான் மெக். காரை நிறுத்திவிட்டு உள்ளே நுழைந்தான்.

"குட் ஈவினிங் ராபர்ட் பின்ஸ்,"

"இது மாலை நேரமா?"

"சாரி, குட் மார்னிங்க்,"

மெக் நாற்காலியை இழுத்துக் கொண்டு அமர்ந்தான். ரோஜர்ஸின் முன்னால் நாட்டின் வரைபடம் இருந்தது.

கரோலின் தீவுகளின் சுற்றிலும் சிவப்பு பென்சிலால் குறியிடப்பட்டிருந்தது. கரோலின் தீவுகளில் எல்லாவற்றையுமே விடச் சிறியது "லாண்ட் ஆஃப் யுடோபியா."

"லாண்ட் ஆஃப் யுடோபியாவா?"

"ஆமாம்" என்றார் ரோஜர்ஸ். "எந்த உலோகங்களும், கலவைகளும் இல்லாத இடம். இரண்டே சதுர மைல்கள் பரப்பளவு உள்ள தீவு. மனித இனத்தைக் காப்பாற்றுவதற்காக நாம் செய்யும் முயற்சிகள் இந்தத் தீவின் மூலமாகத்தான் பலிக்க முடியும். வெற்றி தோல்விக்குச் சரிபாதி வாய்ப்பு இருக்கு, இந்த அளவுக்கு வாய்ப்பு உள்ள இடம் கிடைப்பது இந்த நிலைமையில் கஷ்டம்."

"இந்தத் தீவில் எந்த உலோகங்களும், மூலப் பொருட்களும் இல்லை என்று கண்டுபிடித்தது யாரு?"

"இந்தப் புகழ் ஒரு பிரிட்டிஷ் ஜியாலஜிஸ்டைச் சேரும்." ராஜர்ஸ் சொன்னார். "மெண்ட நோவா தீவில் நிலப்பிளவு ஏற்பட்டு பசிபிக் கடல் பொங்கியபோது அருகிலேயே இருந்த இந்தத் தீவு கொஞ்சம் கூடப் பாதிக்கப்படவில்லை. அதனால் சந்தேகம் வந்து பரிசோதித்த போது இந்த உண்மை வெளிப்பட்டது."

"அப்பொழுதைய விஷயமே வேறு. அந்த நட்சத்திரம் வெகு தூரத்திலிருந்தே சந்திரனை ஈர்த்தது. ஆனால் நாளை மறுநாள் அது மிக அண்மையில் வருகிறது. அப்பொழுது சுற்றிலுமுள்ள கடல் பொங்கலாம். அப்படிப் பொங்கினால் இரண்டு சதுர மைல் பரப்பளவுள்ள தீவு எந்த மூலைக்கு?"

"பொங்கலாம். ஆனால் அவ்வளவு தூரம் ஏன்? பூமிக்கு நடுமையத்தில் இருக்கும் எந்த உலோகக் கலவையின் பாதிப்பினால், எஞ்சிய உலகத்தோடு அந்தத் தீவும் வெடித்து சிதறலாம். ஆனால் மீதி உலகத்துடன் ஒப்பிடும்போது அந்தத் தீவில் ஆதாமையும் ஏவாளையும் (Adam and Eve) இருக்கச் செய்தால் மனித இனம் அழிந்து போகாது என்று நம்புவோமாக." நகைச்சுவையுடன் சொன்ன பின்ஸ் மற்ற யாரும் சிரிக்காதது கண்டு சிரிப்பதை நிறுத்தினான்.

"லாண்ட் ஆஃப் யுடோபியா யாருடைய அதீனத்தில் இருக்கு?"

"சைனா."

வெகுநேரம் ஒருவருமே வாயைத் திறக்கவில்லை.

ஆஸ்ட்ரேலியாவுக்கு வடக்கே, அமெரிக்காவுக்கு மேற்காகவும், ஜப்பானுக்குக் கீழே அமைந்திருக்கும் மனித சஞ்சாரமற்ற தீவு அது. அந்த நிமிடத்தில் உலக சரித்திரத்தில் நிலைத்து நிற்கக் கூடிய இடத்தைப் பெற்று விட்டது.

"இரண்டு சதுரமைல் பரப்பளவில் எத்தனை பேருக்குப் பாதுகாப்பு தர முடியும்?"

"இருநூறு பேருக்கு."

"பாதுகாப்புத் தருவது மட்டுமே இல்லை. பிரளயத்திற்குப் பிறகு எஞ்சிய உலகம் எப்படி இருக்குமோ தெரியாது. அவர்களுடைய வாழ்நாள் முழுவதற்கும் போதுமான உணவுப் பொருள்களை ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு கப்பல், ஒரு ஹெலிகாப்டர் இன்னும்....." ரோஜர்ஸ் சொல்லிக் கொண்டே போனார்.

"நம் உலகத்தைப் பற்றிய விவரங்களை, புகைப்படங்களை, புத்தகங்களைக் கூடப் பாதுகாக்க வேண்டும்."

"அதைத்தான் காலநாழிகையாக (Time capsule) பூமியில் அவ்வப்போது புதைத்துக் கொண்டு வருகிறோமே?"

"எரிமலைக் குழம்பில் அவை பாழாகாமல் அந்த தீவிலும் சிலவற்றை வைக்க வேண்டும்."

கேள்வி அம்பாய் வந்தது. "ஹீ ஈஸ் மோஸ்ட் ப்ரிஃபர்ட்? வரிசையாக பெயர்களை எழுதிக் கொண்டே போனால் முதல் இருநூறு பேர் யார்? பிரளயத்திற்குப் பிறகு எஞ்சிய உலகம் மனிதன் வாழ்வதற்கு லாய்க்கு இல்லாமல் போனாலோ, உணவுப் பொருள்கள் போதாமல் போனாலோ முதலில் யாரைப் பிடித்து கடலில் தள்ளி விட வேண்டும்?"

இதயத்தைத் துளைக்கும் ஆழமான பிரச்னைகள்!

பதில் மௌனம்தான்.

நிசப்தத்தைச் சிதறடித்தவாறு மெஸஞ்சர் ஒரு சிறிய காகிதத்தைக் கொண்டு வந்து தந்தான். அதைப் படித்ததும் ரோஜர்ஸின் முகம் சிவந்தது.

எல்லோரும் அவர் பக்கமே பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அமெரிக்க ஜனாதிபதி மெதுவாக தலையை உயர்த்தினார்.

ஒரே ஒரு வார்த்தை சொன்னார். "சீனாவின் ஆதினத்தில் இருந்த லாண்ட் ஆஃப் யுடோபியாவை ரஷ்ய கப்பற்படை கைப்பற்றி விட்டது."

19

ஒரு பிணத்தை புதைக்க வேண்டும். யாராவது கொஞ்சம் உதவி செய்யுங்களேன். அவள் வேண்டுகோள் விடுத்துக்

கொண்டிருந்தாள். "என் கணவரின் பிணத்தை நரியும், ஓநாயும் பிடுங்கித் திங்காமல் புதைக்க வேண்டும். இத்தனை பெரிய உலகில் உதவி செய்ய ஆளே இல்லையா? கூட இருப்பவன் செத்துப் போனால் புதைப்பதற்கு இரக்கம் கொண்ட மனிதர்கள் இருவர் கூட இல்லையா?"

வீடுகளின் கதவுகள் ஜன்னல்கள் சாத்தியிருந்தன. இரண்டு நாட்களுக்குப் பிறகு எல்லோரும் சாகும் போது செத்தவனுக்காக அழுவது சிலருக்கு வேடிக்கையாக இருந்தது. சிலருக்கு நியாயம் என்று தோன்றியது. இந்த நிலைமையில் யார் வெளியில் வருவார்கள்?

மரணத்தைப் பற்றிய பயம் எல்லோரின் மனதிலும் பரவிக் கொண்டு இருந்தது.

மனிதனின் இரக்கமற்ற தன்மையை பார்த்து பூமி மேலும் பிளந்தது. இருள் கருமையாகப் பரவியது. நட்சத்திரங்கள் வேதனையுடன் பார்த்துக் கொண்டிருந்தன.

சாலையின் நடுவில் நின்று கொண்டு அவள் வேண்டுகோள் விடுத்தாள்.

மிகச் சிறிய வேண்டுகோள்.

"என் கணவர் இறந்து விட்டார். குழி தோண்டி புதைப்பதற்கு உதவி செய்யுங்கள். என் கணவரின் பிணம் நாதியற்று போகக் கூடாது. அதைவிட வேறு எதையும் நான் கேட்கவில்லை. கூட இருப்பவன் இறந்து போனால் இப்படி உள்ளத்தை பாறாங்கல்லாக்கிக் கொண்டு இருக்காதீங்க."

"யாருமே வரமாட்டாங்கம்மா."

அவள் திரும்பிப் பார்த்தாள்.

கிழவன்.

தான் சாப்பாடு போட்ட பார்வையற்ற பிச்சைக்காரன்.

"மனிதன் என்னிக்கோ செத்துவிட்டான். இவை வெறும் நடைப் பிணங்கள். ஒரு துர்பாக்கியசாலியின் நடைப்பிணங்கள். ஒரு துர்பாக்கியசாலியின் பிணத்தைப் புதைக்க இந்த நடைப் பிணங்கள் முன் வராது."

அவள் முன்னால் நடந்தாள். பின்னாடியே அவன்.

அவள் மனதில் இப்பொழுது வேதனை இல்லை. அழுகையும் வரவில்லை. வெறுமை மட்டும் தான் குடியிருந்தது. சுற்றிலும் இருந்த சூழ்நிலையானது அவளுக்குள் இருந்த மென்மையான உணர்ச்சிகளைக் கொன்று விட்டது.

சிறிய மண்வெட்டியால் அவன் மண்ணைக் தோண்டலானான்.

அவள் இரண்டு கைகளாலேயும் மண்ணை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தாள். கணவனின் பிணத்தைப் புதைப்பதற்காக மனைவி குழி தோண்டுவது.....

மூன்று மணி நேரம் அந்த இருட்டில், அந்த மயானத்தில் ஒய்வு இல்லாமல் வேலை செய்த பிறகு ஆறடிக் குழி உருவாயிற்று.

இரண்டு கரங்களாலும் பிணத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டான் கிழவன்.

அவளால் அதற்கு மேல் அழுகையை அடக்கிக் கொள்ள முடியவில்லை. உள்ளிலிருந்து அலை அலையாகத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது.

"நானும் செத்துப் போகிறேன் தாத்தா. என்னையும் சேர்த்து புதைத்து விடு." ஹோவென்று கதறினாள்.

அந்தக் கிழவர் தட்டுத் தடுமாறிக் கொண்டே உடலைக் குழிக்குள் வைத்தார். கணவனின் உடலை விட்டுப் பிரிய அவள் சம்மதிக்கவே இல்லை. வலுக்கட்டாயமாக அவளைப் பிரித்தான்.

அவிழ்ந்துக் கிடந்த கூந்தலுடன், கலைந்த குங்குமப் பொட்டுடன் அவள் சோகச்சித்திரமாகக் காட்சியளித்தாள்.

"இனி போம்மா, இங்கே என்ன இருக்கு? மண்ணிலிருந்து பிறந்த மனிதன் அதிலேயே கலந்து விடுகிறான். இன்றில்லா விட்டால் நாளைக்கு நீயும் நானும் கூடத்தான் கலந்துவிடப் போகிறோம். மனதைத் திடப்படுத்திக் கொள். இந்த ஒரு நாள் அழுகையை விழுங்கிவிடு. எத்தனை நெஞ்சுறுதியுடன் நீ இந்தக் காரியத்தைச் செய்து இருக்கிறாய் என்று நினைத்துப் பார்க்கும் போது என் மேனி சிலிர்க்கிறது. உங்க வீட்டில் யாரிடமும் இந்த விஷயத்தைச் சொல்லி விடாதே, ஏன் சொல்லணும்? நாளைக்கே செத்துப் போறவங்களிடம் இன்னிக்கு செத்தவனைப் பற்றிச் சொல்லி வேதனையை ஏன் உண்டாக்கணும்? உன் உள்ளத்திலேயே இந்த எரிமலையைப் புதைத்து விடு."

அவன் அப்படியே நின்று கொண்டிருந்தான்.

அவள் நகர்ந்தாள்.

இருட்டில் அரிக்கேன் விளக்கின் வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்துவிட்டது.

* * *

"இன்னும் பன்னிரண்டு மணிநேரம்."

ரமணன் நினைத்துக் கொண்டான், இரவு பதினோரு மணிக்கு அது பகலா, இரவா என்பது அனாவசியம், கடியாரத்தின் மூலம் தான் கணக்கிட முடிந்தது.

பயங்கரமான பிரளயத்தை எதிர்கொள்ள உலகம் தயாராகிக் கொண்டிருந்தது. கடந்த நான்கு நாட்களாக இருந்து வந்த கலவரம் இப்பொ இல்லை. மரணம் நெருங்க நெருங்க மனிதனுக்குள் மௌனம் புகுந்து விட்டது.

ரமணன் யோசித்தான்.

சாகப் போகும் தருணத்தில் மனிதன் எதை வேண்டுவான்? ஒரு பெண் எதை விரும்புவாள்?

மனைவியாக இருப்பவள் கணவனின் மடியில், சுற்றிலும் குழந்தைகள் சூழ்ந்திருக்க இறுதி தருணத்தை கழிக்க விரும்புவாள்.

மனதளவில் பலவீனமானவளாக, சபலச் சித்தம் கொண்ட வளாக இருந்தால் தன் மனதிற்குப் பிடித்தவனுடன் கார், பங்களா என்று எல்லா சுகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று விரும்புவாள்.

விபச்சாரியாக இருந்தால் வாழ்க்கையில் தான் சந்தித்த நபரை, தன்னிடம் மனம்விட்டுப் பேசியவனைக் கணவனாக ஊகித்துக் கொண்டு மரணத்தை வரவேற்பாள்.

ஆனால் ஆண்கள்?

அவன் யோசனைக்கு எட்டவில்லை. பலவிதமான மனிதர்கள்... பல்வேறு பலகீனங்களைக் கொண்ட மனிதர்கள்.... கெலிடியோஸ்கோப்...

அவன் யோசித்துக் கொண்டு இருந்தபோது வெளியே கதவைத் தட்டிய சத்தம் கேட்டது. போய் திறந்தான்.

எதிரே மாலதி நின்றிருந்தாள். அவன் ஓரடி பின் வாங்கினான்.

வியப்பு கலந்த குரலில் "மாலதி" என்றான்.

அவள் பேசவில்லை. தலையை உயர்த்தி அவன் பார்த்து விட்டுக் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்.

அவன் தடுமாறிக் கொண்டே "இந்த இரவு வேளையில்.... தனியாக" என்றான்.

அவள் மெதுவாக கையை உயர்த்தினாள். மங்கலான வெளிச்சத்தில் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்த பொருள் அவள் கையிலிருந்து நழுவி விழுந்தது.

மஞ்சள் கயிறு!

அவன் திக் பிரமை அடைந்து அப்படியே நின்றுவிட்டான். எப்படியோ சக்தியைத் திரட்டிக் கொண்டு "இது... இது என்ன மாலதீ?" என்றான்.

அவள் அதிகமாகப் பேசமாட்டாள். எத்தனை ஆழமான எண்ணமாக இருந்தாலும் மௌனமாகக் கண்களாலேயே தெரிவித்து விடுவாள். அப்பொழுது மட்டும் ஒரே ஒரு வார்த்தையைச் சொன்னாள்.

"வந்து விட்டேன் ரமணா, எல்லாவற்றையும் விட்டுவிட்டு."

அவன் உள்ளம் உருகிவிட்டது. அவள் கையைப் பற்றிக் கொண்டு "மாலதீ" என்றான் மென்மையான உணர்வுகளை வெறும் ஸ்பரிசத்தின் மூலமாகப் பகிர்ந்து கொண்ட அந்த நிலையில் அவர்கள் எத்தனை நேரம் இருந்தார்களோ தெரியாது.

முதலில் தேறிக் கொண்ட ரமணன், தலையைச் சிலிர்ந்து கொண்டு "இளம்பு" என்றான்.

"எங்கே?"

"உங்க வீட்டுக்கு."

அவள் சரேலென்று தலையை உயர்த்தினாள்.

அவன் சொன்னான். "இந்தச் சமுதாயத்தின் கட்டுப் பாடுகளையும், உங்க அப்பா வரைந்த கோட்டையும் மீறிச் செல்வது, உலகத்தின் இந்த இறுதி நாளில் நமக்குக் கஷ்டமொன்றும் இல்லை. மீறுவதுதான் நம்முடைய லட்சியமாக இருந்தால் இதுநாள் வரை நாம் காத்திருப்பானேன்? வேண்டாம் மாலதி. நம்முடைய இந்த இருபத்தி நான்கு மணி நேர வாழ்க்கை உன் தந்தைக்கு வேதனையை உண்டாக்கும் என்று தெரிந்தும் நாம் திருமணம் செய்து கொள்வானேன்? திருமணத்தை விடக் காதல் உயர்ந்தது மாலதீ. நம் அதிர்ஷ்டத்தின் காரணமாக நமக்கு அது கிடைத்திருக்கிறது. அதையே அனுபவிப்போம். உன் நினைவில் நானும், என் நினைவில் நீயுமாக நிம்மதியாக உயிரை விடுவோம். அதற்கு நாமிருவரும் அருகருகில் இருப்பானேன்? நான் உன்னைவிட, உன்னைக் காதலிக்கிறேன் என்ற உணர்ச்சியை அதிகமாக நேசிக்கிறேன் மாலதீ. உன்னை விட உன் நினைவுகளை அதிகமாக நேசிக்கிறேன். அது போதும் எனக்கு."

அவள் திரும்பிப் போக முற்பட்டாள்.

அவள் மௌனத்தைக் கண்டு பதற்றமடைந்தவனாக "மாலதி!" என்றான். "நான்.... நான் உன் மனதை நோகடித்து விட்டேனா?"

இல்லையென்பது போல் தலையை அசைத்தாள். "வா... உன்னை வீட்டில் கொண்டு போய் விட்டு விடுகிறேன்."

அவள் மௌனமாக அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவன் மனதில் ஏதோ வேதனை. அவளுடைய நேர்மைக்கு முன்னால் தான் தோற்றுவிட்டோமோ என்ற வேதனை.

"சமுதாயத்தை எதிர்த்து நிற்பது, நம் வீட்டு மனிதர்கள் விதித்த கட்டுப்பாட்டை மீறுவது போன்ற பெரிய பெரிய வார்த்தைகள் எதுக்கு? நாம் எதற்காக இத்தனை நாட்களாகத் திருமணம் செய்து கொள்ளவில்லையோ, அதே காரணத்திற்காக இந்த ஒருநாளும் பொறுத்திருப்போம்."

தொலைவில் பதினொன்றடித்து ஒய்ந்தது.

பதினோரு மணி ஐந்து வினாடிகள்.

அதே நேரத்தில்.....

திடீரென்று மூன்று வினாடிகள் வரை நிலம் அதிர்ந்தது. பெருத்த ஓசையுடன் தரை இரண்டாகப் பிளந்தது.

அவ்விருவரும் பார்வையாளர்களாக நின்று விட்டார்கள். பார்த்துக் கொண்டிருக்கும் போதே இரண்டு மூன்று வீடுகள் சரிந்து விழுந்து விட்டன. தொலைவில் யாரோ அழும் ஓசை.

ரமணன் சட்டென்று நின்று "அடடா" என்றான்.

மாலதி அந்தப் பக்கம் பார்த்தாள்.

கிழவன் ஒருவன் தட்டு தடுமாறிக் கொண்டே நடந்து வந்து கொண்டிருந்தான். முன்னால் பெரிய குழி இருந்தது. தரை பிளந்து விட்டதில் இருபதடி ஆழத்திற்கு குழி ஒன்று உருவாகியிருந்தது. அதை நோக்கிப் போய்க் கொண்டிருந்தான் அந்தக் குருட்டுக் கிழவன்.

"நில்லு!" ரமணன் கத்தினான். அதற்குள் நேரம் கடந்து விட்டது. கிழவன் குழிக்குள் விழுந்து விட்டான். ரமணன் ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தை அடைந்தான். குனிந்து பார்த்தான். நான்கடி ஆழத்திலிருந்த பாறையைப் பிடித்துக் தொங்கிக் கொண்டிருந்தான் கிழவன் எந்த நிமிஷத்திலும் நழுவி உள்ளே விழுந்து விடுவான் போல் இருந்தது.

ரமணன் உள்ளே இறங்கத் தயாராகி விட்டான். மாலதி அவன் கையைப் பற்றித் தடுத்தாள். ஒரு நிமிஷம் இருவரின் பார்வையும் சந்தித்துக் கொண்டன.

கிழவனின் வாழ்நாளை ஒருநாள் நீடிப்பதற்காக தன்னுடைய வாழ்க்கையை ஒருநாள் குறைத்துக் கொள்ளும் அளவுக்கு ரிஸ்க் எடுத்துக் கொள்ள வேண்டுமா? நிமிடத்தின் ஆயிரத்தில் ஒரு பங்கு நேரத்தில் அவன் ஒரு முடிவுக்கு வந்து விட்டான்.

அவள் கையை விடுவித்துக் கொண்டு, மெதுவாக குழிக்குள் இறங்கிக் கொண்டே "வருகிறேன் தாத்தா... ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்" என்று தைரியம் சொன்னான்.

கால்களுக்கடியில் மண் சரிந்து, இருட்டில் எங்கேயோ அடிதளத்தில் போய் விழுந்துகொண்டிருந்தது.

ஓரடி கீழே இறங்கினான்.

கிழவனின் கைகள் பலவீனத்தால் நடுங்குவது தென்பட்டது.

மேலிருந்து மாலதி பதற்றத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். மேலும் ஒரு அடி கீழே இறங்கினான். ஒரு கையால் கற்பாறையை, அழுத்தமாகப் பற்றிக்கொண்டு இன்னொரு கையை நீட்டி கிழவனின் கையைப் பிடித்துக் கொண்டு பலமாக மேலே இழுத்தான். ஒரே இழுப்பில் கிழவன் மேலுக்கு வந்து விட்டான். ஆனால் ரமணன் பிடித்துக் கொண்டிருந்த பாறை மட்டும் சரிந்து நழுவிவிட்டது.

"வீல்" என்ற அலறல் சுற்றிலும் எதிரொலித்தது. அவன் கீழே நழுவி பாறைகளுக்கு நடுவில் விழுந்து விட்டான். ஒரு நிமிடம் ஒன்றுமே தெரியவில்லை. கால் உடைந்து விட்டதா, கை உடைந்து

விட்டதா என்றே புரியவில்லை. தடவிப் பார்த்த போது பக்கத்தில் இன்னொரு உடல்.

"என்ன காரியம் செய்து விட்டாய் மாலதீ?" என்றான்.

அவளிடமிருந்து பதில் வரவில்லை. அவன் கலவரத்துடன் அவளை உலுக்கி "மாலதி... மாலதி" என்றழைத்தான். அவள் பலவீன மான குரலில் "ஊம்" என்றாள். அவள் தலையிலிருந்து வழிந்து கொண்டிருந்த ரத்தத்தைக் கையால் அழுத்தி நிறுத்த முயன்றான்.

நிமிர்ந்து பார்த்தான். இருபதடி உயரத்தில் சிறிய ஓட்டை, வெளியே இருட்டில் சரியாக தென்படவில்லை. மண் கொஞ்சம் கொஞ்சமாக சரிந்து கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் கற்களும் வந்து விழலாம். மனிதனை உயிரோடு சமாதியாக்கும் கற்கள்.

"ரமணா!" தாழ்ந்த குரலில் அழைத்தாள்.

"ஊம்"

"நான்... நான் உன்னுடைய கையை ஒரு முறை.... ஒரே ஒருமுறை கன்னத்தில் வைத்துக் கொள்ளட்டுமா?"

அவன் நெகிழ்ந்துவிட்டான்."மாலதீ!" என்றான், கம்மி விட்ட குரலில்.

"உன் ஒழுக்கங்கள், கட்டுப்பாடுகள் அதற்குத் தடையாக இருக்குமா?"

அவன் சட்டென்று அவள் தலையை தன் மார்போடு அழுத்திக் கொண்டான். "அப்படிச் சொல்லாதே மாலதீ..." என்றான், நீர் நிறைந்த விழிகளுடன்.

அவள் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு அப்படியே இருந்து விட்டாள். நான்கு வருடத்து நட்பின் முதல் ஸ்பரிசம். ஏதோ அற்புத உலகத்தில் இருப்பது போல் அவள் கண்களை மூடிக் கொண்டாள். அந்தக் கனவு கலைந்து விடுமோ என்பது போல் அவன் அவளை இறுக்கமாக அணைத்துக் கொண்டிருந்தான்.

பூமிக்கு இருபதடி ஆழத்தில் அவ்விருவரும் அந்த நிலையில் எத்தனை நேரம் இருந்தார்களோ தெரியாது. எந்தப் பாறை

அவர்களை மேலுலகத்திற்கு இட்டுச் சென்றதோ தெரியாது. ஒருவருக்காக மற்றவர் உயிர்த் தியாகம் செய்த காதலர்களின் சரித்திரத்தை எழுதுவதற்கு வரலாற்று வல்லுனர்கள் யாராவது பூமியின் மேல் மிஞ்சியிருந்தால் அவர்களின் கதையும் வரலாற்றில் இடம் பெற்றிருக்குமோ என்னவோ.

20

இறுதி நாள்.

ஆகஸ்ட் பதினேழு.

சியோனில் எக்காளம் ஊதுங்கள். என் பரிசுத்த பர்வதத்தின் எச்சரிப்பின் சத்தமிடுங்கள். ஏனெனில் கர்த்தருடைய நாள் வருகிறது. அது இருளும், அந்த காரமும் நிறைந்த நாள். அப்படிப்பட்டது முன் ஒரு காலத்தில் உண்டானதுமில்லை. இனி உண்டாகப் போவதுமில்லை.

(யோவேல் 2:1-2)

கடலில் அலைகள் பெரிதாக எழும்பும். சூறாவளிக் காற்று வீசும். காரிருள் எங்கும் நிரம்பும். சூரியன் கறுத்துக் கிடப்பான். நட்சத்திரங்கள் ஒளி மங்கும். அலையின் ஓசையைத்தவிர வேறு எந்த சத்தமும் கேட்காது. ஏழைகள், பணக்காரர்கள் எல்லோரும் அழிந்து விடுவார்கள். அரசர்கள், நாடுகள் எதுவும் இருக்காது.

ஏழு தடைகள் நீக்கப்படும்.

ஏழு வாத்தியங்கள் முழங்கப்படும்.

ஏழு விதமான கூரைகளுடன் 'ராத்' பூமியின் மீது விடப்படும்.

அப்பொழுது சாத்தான் விழித்துக் கொள்ளும்.

மக்கள் கடவுள் மீது போர் தொடுப்பார்கள்.

"தி வார் ஆஃப் ஆர்மகாடென்!"

சாத்தான் நம்பாத மக்களைக் காப்பாற்றுவதற்காகக் கிருஸ்து ஆலிவ்ஸ் மலையிலிருந்து இறங்கி வருவார்.

சாத்தானை நம்பியவர்களைப் பூண்டோடு ஒழிக்க கடவுள் கல்கி அவதாரமெடுத்து வெள்ளைக் குதிரையின் மீது ஏறி ருத்ர பைரவனைப் போல் வருவார்.

சாத்தானை ஒழிக்க அல்லா இறுதியாக சங்கு ஊதியதும் வானம் திறந்து கொள்ளும். மக்கள் கும்பல் கும்பலாகச் திரண்டு வருவார்கள்.

நல்லவர்கள் காப்பாற்றப்படுவார்கள்.

காப்பாற்றப்படுவது என்றால் கடவுளை அடைவதுதானா?

அப்படித்தான் இருக்க வேண்டும். நல்லவர்கள் சீக்கிரமாக செத்துப் போகிறார்கள்.

சாத்தான் எங்கே இருக்கிறது?

மனிதனில் மறைந்திருக்கும் சாத்தானை அழிப்பதற்குப் பிரளயம் வர வேண்டும். சமுதாயத்தை மாற்றுவதற்குப் பிரளயம் வந்து தான் ஆகவேண்டும்.

* * *

இரவு எட்டாகி விட்டது.

இன்னும் மூன்று மணி பன்னிரண்டு வினாடிகள்தான்.

கிராமத்தில்.....

பஜனைகள் நடந்து கொண்டிருந்தன.

புத்புதாநந்த சுவாமிகள்"சாமி" வந்தது போல் ஆடிக் கொண்டிருந்தார்.

அவர் மீது நம்பிக்கை வைத்திருந்த மக்கள் நிச்சிந்தையாக இருந்தார்கள்.

அவர்களில் ரங்கசாமியும் இருந்தான். ரங்கசாமிக்கும், பூஷணத்திற்கு இடையில் நாரதர் வேலை பார்க்கும் பெரிய சாமியும் இருந்தான்.

"பூஷணம் என்ன சொல்கிறான் பெரியசாமி?" ரங்கசாமி கேட்டான்.

"மிரண்டு போய் விட்டான். அவனால் என்ன சொல்ல முடியும்?" பெரியசாமி நக்கலாகச் சிரித்துக் கொண்டே சொன்னான்.

"ராஜய்யாவை மரத்தில் கட்டி எரிக்கப் போவதாக சொன்னானே. எரிக்கப் போவதில்லையாமா?" எதுவும் தெரியாதது போல் கேட்டான் ரங்கசாமி.

இந்த உரையாடல் நடந்து கொண்டிருக்கும் போது ராஜய்யா அந்தப் பக்கமாக வந்தான். தன் பெயர் காதில் விழுந்ததும் நின்றான்.

"ராஜய்யாவுக்கு உங்க சப்போர்ட் இருக்கும் போது அவனால் என்ன செய்ய முடியும்?"

"அதாவது ராஜய்யாவுக்கு நம் சப்போர்ட் இருக்கு என்று சொல்கிறாய். அப்படித்தானே." நமட்டுச் சிரிப்பு சிரித்தான் ரங்கசாமி

பெரியசாமிக்கு ரங்கசாமி சொன்னது புரியவில்லை. அவனுக்குப் புரியவில்லை என்பதை ரங்கசாமி உணர்ந்து கொண்டான்.

"அரசியலில் ஒருத்தனுடைய சப்போர்ட் இனனொருவனுக்கு சாசுவதமாக இருந்து விடாது. இருக்கவும் இருக்காது பெரியசாமி. அதை முதலில் புரிந்து கொள். முன்னுக்கு வர வேண்டியவன். அந்த பூஷணம் எரிக்கவில்லை என்றால் நாமே ராஜய்யாவின் கதையை முடித்து விடுவோம்."

கேட்டுக் கொண்டிருந்த ராஜய்யா நடுநடுங்கி விட்டான்.

"நாமா?" பெரியசாமி கேட்டான்.

"அவனை மரத்தில் கட்டி எரிக்கப் போவதாக அந்த பூஷணம் எல்லோரிடமும் தம்பட்டம் அடித்துக் கொண்டான் இல்லையா.

பிரளயம் வரப் போகிறது என்று அவன் சும்மா இருந்தால் நாமும் கையைக் கட்டிக் கொண்டு இருக்க முடியுமா? இந்த நேரத்தில் ஒரு மரத்தடியில் பாதி எரிந்த நிலையில் ராஜய்யாவின் பிணம் மக்கள் கண்ணில் படுகிறது என்று வைத்துக் கொள். மக்கள் திரண்டு அந்த பூஷணத்தின் மீது பாயமாட்டார்களா? இந்த பிரளயம் வரப் போவதற்குக் காரணமே ராஜய்யாவை பூஷணம் எரித்து விட்டதுதான் என்று ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டால் என்ன நடக்குமோ, நீயே கொஞ்சம் யோசித்துப் பாரு."

பிரளயத்தையும் தன்னுடைய சுயநலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள நினைக்கும் சக மனிதனைப் பார்த்து ராஜய்யா அரண்டுப் போய்விட்டான். வேலியே பயிரை மேய முற்பட்ட காட்சியைக் கண்ணெதிரில் கண்டபோது உலகமே தலைகீழாகி விட்டது போல் நிலைதடுமாறினான். இரண்டு புலிகளுக்கு நடுவில் சிக்கிய முயல் போல் பயந்து விட்டான்.

சாவது நிச்சயம் எந்த புலியின் பசிக்கு இரையாகப் போகிறான் என்பதுதான் கேள்வி.

போய்விட வேண்டும். இந்த இடத்தை விட்டு தொலைவாக இந்த மனிதர்களின் கையில் சிக்காத அளவுக்கு தொலைவாக.

காலுக்கடியில் காய்ந்த இலைகள் சலசலத்தன.

"யாரது?" ரங்கசாமி கத்தினான்.

ராஜய்யா நடுங்கினான். பெரியசாமி வெளியில் வந்து பார்த்த போது, தொலைவில் ஓடிக் கொண்டிருந்த ராஜய்யா தென்பட்டான்.

விஷயம் தெரிந்ததும் ரங்கசாமி பதட்டமடைந்தான்.

"விடாதே, அவனைப்பிடி. விஷயம் வெளியில் வரக் கூடாது." கத்தினான்.

ராஜய்யா ஓடிக் கொண்டிருந்தான். பின்னாலேயே ரங்கசாமி.

* * *

ஒன்பது மணி ஆகிவிட்டது.

கிழவர் பொறுமையின்றி புரண்டுப் படுத்தார். "இரண்டு பேரும் எங்கே போனாங்க?" என்றார். அவர் அப்படி கேட்பது அறுபதாவது தடவை.

ஜானகி பதில் பேசவில்லை. முழங்காலில் தலையை சாய்த்துக் கொண்டு ஒரு மூலையில் அமர்ந்து இருந்தாள். அவள் பேசி எத்தனையோ நேரமாகி விட்டது. மௌனமாக, வெறுமை நிறைந்திருந்த மனதுடன் வரப்போகும் பிரளயத்தை சீக்கிரமாக எதிர்பார்த்துக் கொண்டு இருப்பது போல் சமாதி நிலையில் அமர்ந்திருந்தாள். குழந்தை ரவி தாயை பீதியுடன் நோக்கிக் கொண்டிருந்தான். எங்கும் பயம்....

* * *

ஹாட்லைன் வழியாகப் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தன. சீனாவை வெளியேற்ற போருக்குத் தயாராவதா அல்லது லாண்ட் ஆஃப் யுடோபியாவில் அதற்கும் பங்குக் கொடுப்பதா?

ஒரு பக்கம் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த அதே சமயத்தில் மறைமுகமாய் இன்னொரு கூட்டம், கடைசி நிமிடத்தில் அந்த நாட்டையும் அங்கிருந்து விரட்டிவிட்டால்? போர் புரிவதை தவிர்க்க முடியாது. எப்படியும் செத்துப் போவது நிச்சயம் எனும்போது, போர் புரிவதை தவிர்க்க முடியாததாக இருக்கும் பட்சத்தில் போர் புரிவதில் நஷ்டம் என்ன? உலகமே ஒரு ஹீரோஷிமா அல்லது நாகசாகியாகி விடப் போகிறது. நீயா நானா என்று முடிவு செய்து விட வேண்டியதுதான்.

"அமைதி" என்பது தெளிவில்லாத வார்த்தை மனிதனிடம் இல்லாதது. உலகம் வரையிலும் போவானேன்?

சீனாவுடன் இணைந்து ரஷ்யாவின் மேல் போர் தொடுப்பதா? மனிதன் இறக்கப் போகும் இரண்டு மணி நேரம் முன்பு இது ஒரு பிரச்னை. யுடோபியாவை பிளாஸ்ட் செய்து விட்டால் என்ன? அப்பொழுது எதுவுமே இருக்காதே.

அந்தந்த நாடுகளில் அணுவாயுதங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டன. இருபது அம்புலன்ஸ்கள் இருந்தால் போதும் உலகத்தையே நாசமாக்க வல்ல பொடோலினன் டாக்ஸின் சயனேட்டை விட முன்னூறு மில்லியன் மடங்கு அபாயகரமான விஷம். முப்பது வினாடிகளில் மனிதனைப் பக்கவாதத்திற்குப் பலியாக்கும் நெர்வ் கியாய் ட்யூப்ஸ், மினிட்மென், ந்யூக்ளியர் மிஸைல்ஸ்பிப்டீ, மில்லியன்டன், டியஸ்ட் வெடிகுண்டுகள்...

பிரளயம் வருவதற்கு இயற்கை தான் வேண்டுமென்று இல்லை. மனிதனுக்கு மனிதன் இடையே இருக்கும் பகையே போதும்.

பத்து மணி அடித்தது.

வானம் இரத்தத்தால் நனைந்தது போல் சிவப்பாக மாறியது. கடல்வாழும் உயிரினங்கள் வரப்போகும் ஆபத்தை உணர்ந்து விட்டாற்போல் கும்பல் கும்பலாக ஊர்ந்து கொண்டிருந்தன. பறவைகள் மரங்களில் கூடி சிறகுகளை படபடத்துக் கொண்டு கத்திக் கொண்டிருந்தன.

"ஹோ" வென்ற சத்தம்!!!

கடல்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்தன. மூவுலகையும் விழுங்குவதற்கு அலைகள் மலையென எழும்பிக் கொண்டிருந்தன.

நிலம், நீர், அக்னி, ஆகாயம், வாயு எல்லாம் நாசமடையத் தயாராகி விட்டன.

பிராக்ஸிமா செஞ்சுவரி பூமியைத் தன்னுடன் ஈர்த்துக் கொள்ள வேகமாக வந்து கொண்டிருந்தது. உலகத்தை நாசமாக்க மிசைல்கள் தயாராக இருந்தன. ஸ்விட்சைத் தட்டியதும் புறப்பட வேண்டியதுதான்.

ராஜய்யா ஓடிக் கொண்டிருந்தான் பின்னாலேயே ரங்கசாமி.

மேகங்கள் எல்லாம் ஒரே இடத்தில் கூடி அழுவதைப் போல் கும்பமழை.

பத்து மணி ஐம்பது நிமிடங்கள்.

உலகம் அழிந்தது விட இன்னும் பத்து நிமிடங்கள். மனித இனம் நசித்துப் போக இன்னும் பத்தே நிமிடங்கள்.

செத்துப் போகாமல் இருப்பதற்காக ராஜய்யா ஓடிக் கொண்டே இருந்தான்.

சமுதாய ரீதியாக மனிதன் ஒவ்வொரு நொடியும் சாகாமல் காப்பாற்றி வருவது எது?

கடிகாரத்தின் டிக்டிக் ஓசையைத் தவிர வேறு எந்த சத்தமும் கேட்கவில்லை. ஒவ்வொரு வினாடியும் மனிதனை மரணத்திற்கு அண்மையில் அழைத்துச் சென்று கொண்டிருந்தது.

மனிதன் சாகும் தருணத்தில் அவனுள் மறைந்திருக்கும் அரக்கன் உயிர் பெற்று விட்டான். ஆயிரம் கைகளை நீட்டி முன்னோக்கி வந்து கொண்டிருந்தான்.

* * *

"நில்" என்றாள் ஜானகி.

கிழவர், ஜானகியின் மாமனார் ஓரடி முன்னால் வைத்தார்.

"நில் கயவனே! நில்."

இறுதி தருணத்தில் கடைசி அனுபவத்தையும் பெற்று விட எண்ணிய அரக்கன்.

அவள் கையில் கிடைத்த அரிக்கேன் விளக்கை வீசி எறிந்தாள்.

வீலென்ற அலறல்

தீ.... செந்தீ.....

கூச்சலும்! கூப்பாடும்! பாவத்தைத் தாங்கமுடியாமல் தரை பிளந்து கொண்டிருந்தது.

460 Lee BO 2893

பதினோரு மணியடித்தது.

ஒன்று.... இரண்டு... மூன்று வினாடிகள்

ஓடிக் கொண்டிருந்த ராஜய்யா கால்தடுக்கிக் கீழே விழுந்தான். பின்னாலிருந்து சாவு துரத்தி வருகிறது என்று தெரியும். இரண்டு கைகளையும் உயர்த்தி "கடவுளே!" என்று கத்தினான்.

ஐந்து...ஆறு....ஏழு வினாடிகள்

திடீரென்று புயலுக்கு முன் இருக்கும் அமைதி உருவாகியது.

இன்னும் இரண்டு வினாடிகளில் பூமி வெடித்துச் சிதறப் போகிறது.

எல்லாம் நிசப்தம். மனதளவில் என்றோ செத்துவிட்ட பிரகாஷ், சமுதாய ரீதியாக செத்துப் போன ராஜய்யா? ஒழுக்கம் தவறிய கிழவர்..... எல்லோரையும் தன்னுள் அடக்கிக் கொண்ட பேரமைதி.

அவ்வமைதியில் இரு கரங்களையும் உயர்த்தி ஜானகி கடவுளிடம் இவ்வாறு வேண்டிக் கொண்டிருந்தாள்.

"கடவுளே! இவ்வுலகத்தைச் சர்வநாசமடையச் செய்து விட்டாய். சீக்கிரமாக அனைவரையும் உன்னிடம் அழைத்துக் கொண்டு விடு.

கடவுளே! அடுத்த முறை மறுபடியும் உலகத்தை சிருஷ்டிப்பதாக இருந்தால், அந்தப் புதிய உலகத்தில் மனிதன் உண்மையான மனிதனாக வாழ வேண்டும். மனரீதியாக, சமுதாய ரீதியாக அல்லது பிறரின் சுயநலத்திற்காக சாகக் கூடாது. அது போன்ற உலகத்தை மட்டும் நீ சிருஷ்டித்தால் அதில் ஒரு கல்லாகவோ, ஒரு செடியாகவோ மறுபிறவி எடுப்பதை நான் விரும்புகிறேன். பிரளயத்தை வரவேற்கிறேன்."

அவளுடைய பிரார்த்தனை முடிந்தது. அதைத் தொடர்ந்து பயங்கர ஓசையுடன் பூமி வெடித்துச் சிதறியது. தூள் தூளாகி விண்ணோடு கலந்து விட்டது.

முற்றும்